Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3175)

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 27 புதன்கிழமை (13.11.2013) பக்கங்கள் 20 ஓசை – 044

## உண்ணாவிரதப்போராட்டம் வலி.வடக்கில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் உள்ள மக்கள் அந்தந்த பிரதேசங்களில் மீளக்குடியமர்த்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியும், பொது நலவாய நாடுகள் மாநாட்டிற்காக வந்துள்ள நாடுகளின் தலைவர்களுக்கு இம் மக்களின் பிரச்சினைகளை வெளிக்காட்டும் வகையில் உண்ணாவிரதப்போராட்டம் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய முன்றலில் நேற்றுக்காலை 9 மணியளவில் இப் போராட்டம் ஆரம்பமானது. வலி.வடக்கு பிரதேசத்திலிருந்து 1990 ஆம் ஆண்டு மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். குடாநாட்டில் 4000 குடும்பங்கள் இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ளன. 10இற்கும் மேற்பட்ட முகாம்களில் தங்கியுள்ள நிலையில் மீளவும் இவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்கப் படவேண்டும் என்று கோரியே இப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை ஆரம்பமான இந்த உண்ணாவிரதப் போராட்டம் மாலை 5மணி வரை இடம்பெறுவதுடன் வரும் 16ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. (இ)

## சனல் –4 செய்தியாளருக்கு கைலாகு கொடுத்தார் ஜனாதிபதி

(கொழும்பு)

கொழும்பு வந்திருக்கும் சனல்-4 செய் தியாளர் ஒருவருக்கு ஜனாதிபதி கைலாகு கொடுத்து உரையாடியுள்ளார்.

அத்துடன் சனல்-4 ஊடகவியலாளர் களை தன்னுடன் தேநீர் அருந்த வருமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.ஜனாதிபதி, பொதுநலவாய வணிக அரங்கத்தை ஆரம்பித்துவைத்த தன் பின்னர் அங்கிருந்து புறப்படுவதற்கு தயாரானபோது சனல்-4 ஊடகவியலாளர் கள் ஜனாதிபதியிடம் கேள்விகளை கேட்டனர்.

சனல்-4 ஊடகவியலாளர்களை ஜனாதிபதி எதிர்கொண்டபோது, தான்



யுத்த குற்றச்சாட்டுகளை மனங்கொள்வ தில்லையென கூறினார். ஊடகவியலாளர் கள், பாது

(19) ஆம் பக்கம் பார்க்க

# உலகத்தலைவர்கள் கொழும்பு விரைவு

## நாளை மறுதினம் மாநாடு

CHOGM 2013
Sri Lanka

(கொழும்பு)

கொழும்பில் நாளை மறு தினம் ஆரம்பமாகவுள்ள பொதுநல வாய மாநாட்டில் கலந்து கொள் வதற்காக அங்கத்துவ நாடுகளின் அரசுத்தலைவர்கள் மற்றும் சிரேஷ்ட அமைச்சர்கள் அரசு சார்பு பிரதிநிதிகள், என்று பலர் கொழும்புக்கு வந்தவண்ணம் உள்ளனர்.

ஏற்கனவே பல நாடுகளின் தலை வர்கள் கொழும்பை வந்தடைந் துள்ளனர். இன்றும் நாளையும் ஏனையநாடுகளின் அரச தரப்பு பிரதிநிதிகள் கொழும்புக்கு வரு கைதரவுள்ளனர்.

நயாரு குடியரசின் ஜனாதி பதி பாரோன் வெக்வா நேற்று கொழும்பு வந்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங் கிய நயாரு குடியரசின் ஜனாதிப தியை சீனி உற்பத்தித் துறை அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத் தன வரவேற்றார்.

பேலிஸ் குடியரசின் பதில் பிரதமர் வில்பிரட் பீட்டர் எல்ரின் நேற்று கொழும்புக்கு விஜயம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## படை முகாமில் வெடித்தது குண்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்காவில் இராணுவ முகாமில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் இராணு வப் பொலிஸ் படுகாயமடைந் துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.45 மணி யளவில் இடம்பெற்றுள்ளது. கொக் காவில் இராணுவ முகாமில் கடமையில் இருந்த சமயத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்திலே இரா ணுவப் பொலிஸ் படுகாய மடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பெற்றுவருகின் றார்.

இச்சம்பவத்தில் 40 வயது டைய உபாலி விஜயநாயக்க என்பவரே படுகாயமடைந்த வராவார். (கே)

## படை முகாமுக்கு மூடுவிழா காணியும் கட்டடமும் மீளளிப்பு

(முழங்காவில்)

பூநகரி நகர்ப்பகுதியில் (வாடி யடி) பரந்தன் வீதியில் இயங் கிவந்த 66 ஆம் படைப்பிரிவின் படைமுகாம் மூடப்பட்டுள்ளது.

படையினரின் மேற்படி முகாம் வேறு இடத்திற்கு இப் போது மாற்றப்பட்டதோடு அக் காணிகளும் வீடுகளும் விடுவிக் கப்பட்டுள்ளது.

காணிகளைச்சுற்றி அமைக் கப்பட்ட பாதுகாப்பு வேலிகளும் அகற்றப்பட்டுள்ளதால் அக்காணி களின் உரிமையாளர்கள் இப் போது நெல்விதைப்பை மேற் கொள்ள நடவடிக்கை எடுத்துள் ளனர்.

தனியார் வீடுகளில் உள்ள படையினரால் அமைக்கப்பட்ட கட்டடங்களும் அகற்றப்பட்டு கட்ட டப்பொருட்கள் பிரதான முகாமுக்கு கொண்டு செல்லப் படுவதைக்காணமுடிகிறது.

சென்ற மாதத்தில் நாகதே வன்துறை வீதியில் இயங்கிய படைமுகாமின் ஒருபகுதி விலக் கப்பட்டதோடு அப்பகுதியில் உள்ள தனியார் வீடுகள் உரிய வர்களுக்கு கையளிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (112)

## கனேடிய பிரதமரின் பிரதிநிதி நேற்று யாழ். விஜயம்



(யாழ்ப்பாணம்)

கனடாவைப்பொறுத்தவரையில் இலங்கை சம்பந்தமாக பல கேள்விகளுக்கு விடைகாண வேண் டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதாக பொதுநலவாய அரசுத்தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வ தற்காக இலங்கை வந்திருக்கும் கனேடியப் பிரத மரின் பிரதிநிதி டிபாய்க் ஓபராய் நேற்று யாழ். நகரில் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி இலங்கையில் நடை பெறவுள்ள பொதுநலவாய அரசுத்தலைவர்கள் மாநாட்டில் கனடா நாட்டின் பிர தம மந்திரி கலந்து கொள்ளாத நிலையில் அவரது பிரதிநிதி யாக அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் டிபாய்க் ஓபராய் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்திருந்த நிலையில் அவர் இலங்கைக்கான கனடா நாட்டின் உயர்ஸ்தானிகர் சகிதம் நேற்று

(19) ஆம் பக்கம் பார்க்க

09



சமர்ப்பணம்

10



திட்டமிடல்

11



அதிர்ச்சி

## சீன இராணுவ அதிகாரிகள் கொழும்பில் முக்கிய பேச்சு



சீன இராணுவ உயர்மட்ட அதிகாரிகள் எட்டுப் பேரைக் கொண்ட குழுவொன்று கொழும்புக்கு விஜயம் செய்துள்ளது. இந்தக் குழுவினர் கடந்த சனிக்கிழமை இலங்கை இராணுவத் தலைமைய கத்தில், இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் தயா ரத்நாயக்கவை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

சீனாவின் போர்த்தளபாட பொறியியல் கல்லூரி யின் தளபதி மேஜர் ஜெனரல் ஷாவோ டாமிங் தலைமையிலான இந்தக் குழுவில், சீனாவின் விஞ்ஞான தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மேஜர் ஜெனரல் சாங் லோங், போர்த்தளபாட பொறியியல் பல்கலைக்கழக ஆணையர் மேஜர் ஜெனரல் சோங் ஹையிங், இரண்டாவது இராணுவ மருத்துவ பல்கலைக்கழக ஆணையர் மேஜர் ஜெனரல் சென் ஜின்குவா, கடற்படை பொறியியல் பல்கலைக்கழக அமைச்சர் மூத்த கப்டன் குவோ சிசொங், பாதுகாப்பு ஆலோ சகர் மூத்த கேணல்

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ். உணவகங்கள் மீது திடீர் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிக ளில் உள்ள உணவகங்கள் மீது சுகாதாரப் பகுதி யினர் திடீர் பரிசோதனைகளை ஆரம்பித் துள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக திருநெல்வேலியில் உள்ள பல உணவகங்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நல்லூர் பொதுச் சுகாதார வைத் திய அதிகாரி ரீ. திரிபுலசுந்தரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க. மதனகுமார் ஆகியோ ரால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

சில உணவகங்கள் சுகாதார சீரழிவுடன் காணப் பட்டன. இடுக்கிகள் இன்றி கைகளால் உணவுப் பண்டங்களைப் பரிமாறியமை, அச்சடித்த தாள் களைப் பயன்

(19) ஆம் பக்கம் பார்க்க

# தனியார் துறைகளிலேயே அதிக வேலைவாய்ப்புக்கள்

## சிகரம் நிறுவன சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்



இலங்கை மட்டுமல்லாது உலகத்தையும் எடுத்து நோக்கினால் தற்போது அதிகமான வேலை வாய்ப்புகள் தனியார்துறையிலேயே உள்ளதாக சிகரம் நிறுவன உதவி சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் சு.கிருசானந் தெரிவித்தார்.

யாழ்.உடுவில் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் நேற்று உடுவில் பிரதேச செயலகத்தில் 'தொழில் சந்தை' நடைபெற்றது.

இந்த தொழில்சந்தையில் சிகரம் நிறுவனத்தின் கல்வி, தொழில் வழிகாட்டல் பிரிவு கலந்து கொண்டு, வருமானத்துடன், தொழில் வாய்ப்பொன்றைப் பெற்றுக்கொள்ளும் கற்கைநெறிகள் தொடர்பிலும், தனியார் துறையில் பரந்துகிடக்கும் தொழில் வாய்ப்புகள் தொடர்பிலும் வழிகாட்டல், ஆலோசனைகளை வழங்கியது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தனியார்துறை வேலைகளை இளைஞர்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அரசாங்க துறையை விட, தனியார் துறையில் அதிகளவு வருமானத்துடன் பணியாற்ற முடியும் எனவே தனியார்துறை வேலைவாய்ப்புக்களை இளைஞர், யுவதிகள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும் தற்போதைய இளைஞர்கள் அனைவரும் சாதாரணமாக ஒரு தொழிலைச் செய்வதை விட அந்தத் தொழிலில் முறையான பயிற்சிகளைப் பெற்றுச் செய்வதன் மூலம் அதிக இலாபம் ஈட்ட முடியும் என்பதை புரிந்து கொள்ளும் மனநிலையில் இல்லை. தமக்குரிய தகைமைகளை வளர்த்துக்கொள்ளாது வேலை வாய்ப்புகள் தம்மைத் தேடி வரவேண்டும் என எதிர்பார்த்தால் எப்போதும் தற்போது இருப்பதை போன்றே இருக்க வேண்டி வரும் எனவும் கூறிப்பிட்டார்.

எனவே, பிரதேச செயலகங்களால் நடத்தப்படும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகளில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு தொழிலைபெற்று உங்கள் சொந்தக் கால்களில் முதலில் நிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

மேலும் நேற்று நடைபெற்ற தொழிற்சந்தையில் HNB Assurance, LIC, ஜனசக்தி இன்சூரன்ஸ், LOLC, செலிங்கோ லை∴ப், எல்.பி.பினான்ஸ், ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் போன்ற பல தனியார்துறை நிறுவனங்கள் கலந்துகொண்டு தம்மிடம் காணப்படும் வெற்றிடங்கள் குறித்தும், அவற்றுக்கான தகைமைகள் குறித்தும் விளக்கமளித்தனர்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு சாரதி அனுமதிப் பத்திரம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சங்கத் தலைவர் சு.சசிகலா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளாக உள்ளவர்களில் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள விருப்பமாயின் மாற்றுத்திறனாளிகள் தத்தமது பிரதேச செயலர் பிரிவிலுள்ள சமூகசேவை அலுவலகத்திலும் அல்லது மாற்றுத் திறனாளிகள் சங்கத்திலும் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

இதன்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், கரைத்துறைப்பற்று, துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முல்லை மாவட்டத்தில் 11 ஆயிரம் மாற்றுத்திறனாளிகள் வாழ்ந்து வரும் நிலையில் இவர்கள் பல்வேறு தேவைகளை உடையவர்களாகக் காணப்படும் நிலையில் இவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக நிவாரண வசதிகளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் புனர்வாழ்வு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கே)

# கோம்பயன் மணல் மயான கட்டண விபரம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் பராமரிப்பின் கீழ் இயங்கும் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் இறந்த உடல்களை அடக்கம் செய்வதற்கான கட்டண விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பெரியவர்களை எரிப்பதற்கு 2 ஆயிரம் ரூபாவும், பெரியவர்களைப் புதைப்பதற்கு ஆயிரத்து 500 ரூபாவும், சிறியவர்களைப் புதைப்பதற்கு ஆயிரம் ரூபாவும், கால்நடைகளைப் புதைப்பதற்கு 600 ரூபாவும் அறவிடப்படுவதுடன்,

இதற்கு மேலதிகமான கட்டணங்கள் எதுவும் மாநகரசபையினால் அறவிடப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டிருப்பதுடன், மேலும் இது தொடர்பான முறைப்பாடுகள் இருப்பின் 021-222-2019, 021-222-2275, 021-222-2335 ஆகிய தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்துள்ளார்.

# இலங்கை வங்கியில் நகைகள் ஏலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையில் எதிர்வரும் 30 ஆம் திகதியும், டிசம்பர் முதலாம் திகதியும் தங்க நகைகள் ஏலத்தில் விடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த திகதியில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை ஏலவிற்பனை நடைபெறும். (105)

# மாற்று வலுவுள்ளோருக்கு மாவட்டச் சம்மேளனம்

கிளிநொச்சி மாவட்டத்தில் மாற்றுவலுவுள்ளோருக்கான மாவட்ட சம்மேளனம் அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச துறை உத்தியோகத்தர்களை இணைத்து நாளை பிற்பகல் 2.00 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதேச செயலர்கள், சமூக சேவைகள் அதிகாரிகள், தொடர்புடைய அரச, சார்பற்ற நிறுவன அதிகாரிகள், மாற்றுவலுவுள்ளோர் மாவட்ட மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாற்றுவலுவுள்ளோர் தொடர்பான வேலைத்திட்டங்களை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கு இவ் அமைப்பு உருவாக்கப்படுகின்றது. (90)

# விசேட கூட்டம்

யாழ்.முஸ்லிம் மறுமலர்ச்சி இயக்கத்தினால் நாளை மறுதினம் மாலை 6.30 மணிக்கு யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் விசேட கூட்டம் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து மறைந்த மூதாதையர்களினதும், தற்போது வாழ்ந்து வரும் பிரபல மானவர்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய நூல் ஒன்றினை வெளியிடவுள்ளனர்.

இந்நூலில் கல்வியியலாளர்கள், விளையாட்டு வீரர்கள், சமூக சேவையாளர்கள், மதத் தலைவர்கள், வைத்தியர்கள் மற்றும் சாதனையாளர்கள் அனைவரினதும் விபரங்களைச் சேகரிக்க முடிவு செய்துள்ளனர்.

இது சம்பந்தமான கூட்டங்கள் கொழும்பு, நீர்கொழும்பு, புத்தளம் ஆகிய இடங்களில் ஏற்கனவே நடைபெற்றுள்ளன.

யாழில் நடைபெறும் மிக முக்கியமான இக்கூட்டத்திற்கு யாழ். முஸ்லிம் மக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் எம்.எஸ்.எம்.ஜான்ஸன் கேட்டுள்ளார். (105)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1007

திகதி 11.11.2013

வெற்றி எண்கள்: 27 49 55 57 — ஆங்கில எழுத்து: F

ஜக்பொட் பரிசு ரூ. 1,38,69,620/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,38,69,620/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 2 | 10,00,000/= | ரூ. 20,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 50,000/= | ரூ. 5,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 271 | 1,000/= | ரூ. 2,71,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 478 | 1,000/= | ரூ. 4,78,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12091 | 60/= | ரூ. 7,25,460/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6410 | 40/= | ரூ. 2,56,400/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 159718 | 20/= | ரூ. 31,94,360/= |
| ஆங்கில எழுத்து | 23136 | 20/= | ரூ. 4,62,720/= |
| | | மொத்தம் ரூ. | 79,37,940/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மொனராகலை | 605200207-5-35 |
| கொழும்பு | 605204750-2-22 |
| பொலன்னறுவை | 605205482-6-06 |
| கொழும்பு | 605203017-5-05 |
| கம்பஹா | 605206889-3-23 |
| குருநாகல் | 605209637-6-06 |
| யாழ்ப்பாணம் | 605204572-0-30 |
| மட்டக்களப்பு | 605209093-8-28 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 83,37,940/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 14,181,920/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.11.14 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333646/7

(C/3185)


# வவுனியா மாவட்டத்தில் பப்பாசிச் செய்கை மும்முரம்

## வருமானமும் தாராளம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் மேற் கொள்ளப்பட்டுள்ள பப்பாசிச் செய்கை மூலம் விவசாயிகள் 35 ஆயிரம் ரூபாவை மாதாந்த வருமானமாகப் பெற்று வருவதாக வவுனியா மாவட்ட விவசாயத் திணைக் களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட விவசாய திணைக் களத்தினால் மீள்குடியேற்றக் கிராமங்களிலிருந்து 200 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு பப்பாசிச் செய்கையை மேற் கொள்வதற்குரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டது.

இந்நிலையில், கடந்த 2012 மற்றும் இவ் வருடத்தின் இதுவரை 15 இலட்சம் ரூபாவை வருமான மாக இக்குடும்பங்கள் பெற்றுள்ளதாகவும், இதனூடாக வாழ்வாதாரம், சுய தொழில் என்பவற்றைத்தாமே முன்னெடுத்து வருவதாகவும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

எனவே பப்பாசிச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு ஐ.ஒ.எல் நிறுவனத்தின் நிதியுதவியுடன் வவுனியா விவசாயத் திணைக்களம் இச்செய்கையாளர்களுக்கு விதை, மானிய உரம், உள்ளீடுகள், சந்தை வாய்ப்பு என்பவற்றை வழங்கின.

இதனால் பப்பாசிச் செய்கை மூலம் ஒரு வாரத்தில் மாத்திரம் 16 ஆயிரம் கிலோ பப்பாசிப் பழம் ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளதாகவும் இதன் மூலம் 35 ஆயிரம் ரூபாவை வருமானமாக இக்குடும் பங்கள் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வவுனியா புளியங்குளம் கிராமத்தில் பப்பாசி யூஸ் நிலையத்தை நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விவசாய திணைக்களம் அறிவித்துள்ளது. (கே)

# பற்சிகிச்சை முகாம்

அரியாலை பூம்புகார் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நாளை நடமாடும் பற்சிகிச்சை முகாம் இன்று காலை 8.00 மணிக்கு முகாம் நடைபெறவுள்ளது.

இந்த முகாமில் நல்லூர் பொது வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பற்சிகிச்சையாளரும், நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகரான க.மதனகுமார் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பற்சிகிச்சையையும், ஆலோசனைகளையும் வழங்குவார்.

அரியாலை கிழக்கு மற்றும் பூம்புகார் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் இப்பற்சிகிச்சை முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. (137)

# கிராமங்கள் அபிவிருத்தி அடைவதற்கு புலம்பெயர் மக்களும் உதவ வேண்டும்

## உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்திடம் உதவி பெற்றுத்தான் கிராமங்கள் அபிவிருத்தி செய்ய வேண்டியதில்லை வெளிநாடுகளில் வாழுகின்ற புலம்பெயர் வாழ் கிராம மக்களின் உதவிகள் மூலம கிராமத்தை அபிவிருத்தி செய்ய முடியும் அந்த வகையில் பல கிராமங்கள் சிறந்த அபிவிருத்தியைக் கண்டுள்ளன என வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கரணவாய் சேரளங்கன் சனசமூக நிலையக கலை விழா அண்மையில் நிலைய முன்றலில் ம.செல்வராசா தலைமையில் சிறப்புற நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் • கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர தொடர்ந்து உரையாற்றுகையில்

வடமாகாண சபையின் கன்னியமர்வு ஆரம்பமாகி எங்களுக்கென ஒரு சபை உருவாகியிருக்கிறது. அதன் மூலமாக நிறைய வருமானம் பெறவிருக்கின்றது. அந்த வளங்களின் வருமானமூடாக வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சிமன்றங்களுக்கு வழங்கப்படவிருக்கின்றது. அதன்மூலமாக சிறிய சிறிய விடயங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும். என நம்புகின்றேன். இவ்வாறு நெல்சிப் திட்டத்திலிருந்து உள்ளூராட்சி அமைச்சின் ஊடாக 100 மில்லியன் ரூபா வரை வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச சபைக்கென வழங்கப்பட்டிருக்கின்றது.

அதில் பல விதமான அபிவிருத்திகளை செய்திருக்கின்றார்கள். அதில் ஒன்று நெல்லியடியிலே பழைய சந்தையில் மொடல் மாக்கட் 50 மில்லியன் ரூபா செலவில் கட்டப்படவுள்ளது.

அதற்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் வரும் மாதங்களில் அதன் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றார்.

இவ்வாறு வீதிகள் புனரமைத்தல், குளங்களை புனர்நிர்மானம் செய்தல் மண்டபங்களை அமைத்தல், தெருவிளக்குகளைப் பொருத்துதல் என்ற பலதரப்பட்ட தேவைகளை உள்ளூராட்சி மன்றம் ஊடாக செயற்படுத்த முடியும்.

ஆகவே கிராமத்தின் வளர்ச்சி சனசமூகங்களினூடாக நிச்சயம் வளரும் இதற்காக துடிபபான இளைஞர்கள் சிறப்புடன் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறி,நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளர் தி.செந்தில்நாதன் கரவெட்டி கோட்டக கல்விப் பணிப்பாளர், சிநற்குணலிங்கம் கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் பொ.வியாகேசு கரவெட்டி சுகாதார வைத்தியஅதிகாரி சி.சுதோககுமார் உள்ளிட்ட பல துறைசார்ந்த அதிகாரிகளும் பொதுமக்களும் கலந்து சிறப்பித்தனர்.

(116)

## காந்திசிலை நிர்மாணிக்க நடவடிக்கை

பருத்தித்துறை நகரப் பொதுச் சந்தை சுற்றுவட்டத்தில் மீண்டும் காந்திசிலை அமைக்க நகரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஏற்கனவே சந்தையின் தென்கிழக்கு பகுதியில் இருந்த காந்திசிலையை வீதி அகலிப்பு பணிக்காக வீதி அபிவிருத்திச் சபையும் நகரசபையினரும் இணைந்து தென் கிழக்கு பகுதியிலிருந்து கழற்றி எடுத்தார்கள். அச்சிலை நகரசபை வளாகத்தில் நாட்டப்படவுள்ளதாக நகரசபை தவிசாளர் சபாரவீந்திரன் தெரிவித்தார்.

தற்போது சுமார் 20 வருடங்களுக்கு முன்னர வடமேற்குப் பகுதியில் காந்திசிலை அமைந்த இடத்தில் புதிய சிலையை நாட்டுவதற்கு பீடம் அமைக்கப்பட்டு வருகிறது.

புதிய காந்திசிலையை இந்திய சிற்பகலைஞர்கள வடிவமைத்து வருகின்றார்கள். இதற்கான நிதியுதவியினை வீதி அபிவிருத்தி சபையினர வழங்கவுள்ளதாக நகரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (109)

## தொழிற்பயிற்சி அதிகாரசபையால் போதனாசிரியர்களுக்கு விண்ணப்பம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தொழில் பயிற்சி நிலையங்களிற்கு பின்வரும் கற்கை நெறிகளை கற்பிக்கும் போதனாசிரியர்களிற்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இதன்படி சிறுவர், பெண்களிற்கான ஆடை வடிவமைப்பாளர், வீட்டு மின்சார உபகரண திருத்துனர், வெளியிணைப்பு இயந்திரம் திருத்துனர், மின்மோட்டார் மீள் முறுக்குனர் (வைண்டிங் கணனி படவடிவமைப்பாளர் நீர்க்குழாய் பொருத்துனர் (பிளம்பிங்) போன்றனவாகும் கல்வித்தகைமையாக க.பொ.த சாதாரணதர) தமிழ், கணிதம்,ஆங்கிலம் உட்பட 4 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தொழில்சார் தகைமையாக அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவகத்தில் NVQ3/4 மட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவகத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 3 வருடகாலத்திற்கு மேல் தொழில் வழிகாட்டி பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா அல்லது சம்பந்தப்பட்ட துறையில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

சம்பந்தப்பட்ட துறையில் இரண்டு வருடத்திற்கு மேலான அனுபவத்தை பெற்றிருக்க வேண்டும். எனவே மேற்படி தகைமைகளுடையவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் உதவிப் பணிப்பாளர், இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம். இல 12 கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம் •எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் யாழ்மாவட்ட உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

## பரிசளிப்பு விழா


பிரான்பற்று கலைமகள் வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கிகிருஷ்ணானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக சண்டி லிப்பாய் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரி மா.பத்மராஜ் கௌரவ விருந்தினராக பாடசாலையின் நலன்விரும்பி கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்ளனர். (48)

## வேகத்தைக் குறையுங்கள் உயிர்களைக் காப்பாற்றுங்கள்





பேருந்துகளில் பயணம் செய்வோர் மிதிபலகையில் நின்று பயணம் செய்வதைத் தவிருங்கள். பேருந்து நடத்துனர்களும் இது குறித்து கவனம் செலுத்த வேண்டும்

(நா.சிவபாலன்)

## பிரதேசப் பற்றும் பிள்ளையார் திருமணமும்




கல்லில் நார் உரிப்பதொன்றும் கடினமானதல்ல. இரும்பைக் கடித்துத் தின்பதோ, இமயப்பத்தின் சிக்கலை எடுப்பதோ கூட ஒன்றும் கஸ்ரமானதில்லை.

ஆனால், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விவசாய பீடத்தையும் பொறியியற் பீடத்தையும் கிளிநொச்சிக்குக் கொண்டு போய்ப் பாருங்கள்.

அப்படி நீங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அவற்றைக் கொண்டு போய் விட்டால், நீங்கள் ஒரு சாதனையாளர் என்று உங்களுக்கு முடிசூட்டுகிறோம்.

இப்பொழுது முடிசூட்டுவதும் பொன்னாடை போர்த்துவதும் சாதாரணமாகிவிட்டது. போதாக்குறைக்கு முடியோடு கையில் வேலையும் கொடுக்கிறார்களே என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

என்ன செய்வது? இது முடிசூடும் சீசன் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

கிளிநொச்சியில் விவசாய பீடத்தை ஆரம்பிக்க வேணும் என்று கடந்த ஆண்டு சொல்லப்பட்டது. இதற்கான கூட்டங்கள் பல அங்கே நடந்தன. பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதற்காக பெருந்தொகை பணம் ஒதுக்கப்பட்டது. உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க முதல் இந்தியத் துணைத்தூதர் மகாலிங்கம் வரை அங்கே போய் வந்தார்கள்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஒரு பெரிய சிரமதானம் கூட நடந்தது.

கிளிநொச்சியில் விவசாய பீடத்தை ஆரம்பித்தால் தாங்கள் அங்கே மகிழ்ச்சியாகப் படிக்க முடியும் என்று விவசாய பீட மாணவ மாணவிகள் பகிரங்கமாகவே சொன்னார்கள்.

தற்போது யாழ்ப்பாணத்தில் இடவசதியே போதாது, ஒரு குறிப்பை எழுதுவதற்கு சரியான இடவசதியோ மேசையோ கூட இல்லை என்று சொல்லி அழும் மாணவிகள் இருவரைச் சந்தித்தேன் ஒருநாள்.

சின்னஞ்சிறிய அறைகளில், தனியார் வீடுகளில் இயங்கும் பீடங்களை மிகப் பெரிய அளவில் பிரமாண்டமாக அமைக்கப்படும் வளாகத்தில் இயக்குவதற்கு என்ன பிரச்சினை?

சில விரிவுரையாளர்கள் எவ்வளவோ முயற்சிக்கிறார்கள். அவர்கள் கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்குமாக ஓடித்திரிந்து பாடுபடுகிறார்கள்.

ஆனால், நினைத்தவாறு எதுவும் நடப்பதாக இல்லை.

பீடங்களை ஆரம்பிப்பதற்காக அரசாங்கம் நிதியை ஒதுக்கி, ஏற்பாடுகளைச் செய்திருந்தாலும் அதை குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றுவதற்கு இன்னும் இயலவில்லை.

இது சோகமான நிலை. மறுபக்கத்தில் இது கவனிக்க வேண்டிய ஒரு விசயம்.

கிளிநொச்சி வரை தற்போது புகையிரத சேவை நடக்கிறது.

பல்கலைக்கழக பீடங்களின் முன்னே மிகப் பிரமாண்டமான கைத்தொழில் நிலையங்கள் இயங்குகின்றன. ஆயிரக்கணக்கானவர்கள் அவற்றில் வேலை செய்கிறார்கள்.

வடமாகாண விளையாட்டரங்கின் நிர்மாண வேலைகள் முடியும் தறுவாயில் உள்ளன.

குறுகிய காலத்தில் பெரும்பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், இந்தப் பீடங்களின் வேலைகள்தான் இன்னும் முடிவடையவில்லை.

இவ்வளவுக்கும் இந்தப்பல்கலைக்கழக வளாகத்தின் மூன்றில் ஒரு பகுதி வேலைகள் அல்லது ஆரம்ப வேலைகள் ஏற்கனவே செய்யப்பட்டிருந்தவை.

மீதி வேலைகளுக்கே இவ்வளவு தாமதம்.

இது வேலைகளின் தாமதம் அல்ல. வேறு தாமதம் என்கிறார்கள் உள் விசயம் அறிந்த சிலர்.

இந்தப் பீடங்களை கிளிநொச்சியில் ஆரம்பிப்பதற்கு பலருக்கும் சம்மதம் இல்லை என்பதே தாமதங்களுக்கான அடிக்காரணம் என்கிறார்கள்.

அப்படியென்றால்...?

யாழ்ப்பாணத்தில் இயங்குவதே பொருத்தமானது. அங்கேயே வளங்கள் உள்ளன. நிர்வாக ரீதியாகவும் அதுவே இலகு என வாதிடுகிறார்கள் பல்கலைக்கழகத்தில் சிலர்.

இதை மறுத்து, கிளிநொச்சிக்குக் கொண்டு போவதே பொருத்தமானது. அங்கேயே இது தேவை என இன்னும் சிலர் போராடுகிறார்கள். விவசாயம் மற்றும் தொழிற்றுறை மையமாக வன்னி மாறிவருவதால் அங்கே இந்தப் பீடங்கள் இருப்பதே நல்லது என இவர்கள் கூறுகின்றனர்.

ஆனால், யாரும் எதையும் கூறுவதல்ல முக்கியம். அதை எப்படிச் சாத்தியப்படுத்துவது? சவால்களை யார் எப்படி முறியடிப்பது என்பதே முக்கியமானது.

அதாவது பூனைக்கு மணியைக் கட்டுவது யார் என்பதைப்போல, நிலைமை உள்ளது.

இதை விடக் கொடுமையானது, இந்தப் பீடங்களை ஆரம்பிப்பதற்காக 'பிள்ளையாருக்குத் திருமண நாள்' குறிக்கிறார்கள்.

எல்லாம் பிரதேசப் பற்றினால் வந்த வினை.

உண்மையாக நடந்துவரும் மனிதனுக்கு எந்த உபதேசமும் தேவையில்லை. - வாரியார்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## தனியன்களாகும் குழந்தைகள்!

கூடி விளையாடு பாப்பா என்கிறான் பாரதி. இன்று பெரும்பாலான குழந்தைகள் பெரியவர்களின் கட்டுப்பாடுகளுடன் வீட்டுக்குள்ளேயே தனிமையில் தனக்குத் தானே பேசிக்கொண்டு தனக்குத் தானே விளையாடிக் கொண்டு பத்திரமாய் இருக்கிறார்கள்.

பள்ளிக்கூடத்திலும் வீட்டிலும் விழுந்து விழுந்து படிப்பதைத் தவிர வேறு எந்தச் செயற்பாடுகளுமின்றி உள்ளும் புறமும் தனிமையில் வளரும் குழந்தைகளின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

இன்று அவர்கள் மூழ்கடிக்கப்பட்டிருக்கிற வீடியோ, கம்ப்யூட்டர் விளையாட்டுகள், தன்னையொத்த இன்னொரு குழந்தையோடு விளையாடுவதைத் தடுக்கின்றன. கார்ரேஸ், வேட்டையாடுதல், பைக் ஓட்டுதல் போன்ற குழந்தையின் வயதுக்கும், மனநிலைக்கும், யதார்த்தத்திற்கும் சற்றும் சம்பந்தமில்லாத விளையாட்டுகள்.

அதில் எந்த கூட்டுச் செயற்பாடும் இல்லை. விட்டுக்கொடுத்தல் இல்லை. தலைமைப்பண்பு தேவையில்லை. அன்போ, நட்போ, பாசமோ, தேவையில்லை. அதிலே ஒரே குறிதான். வெற்றிபெற வேண்டும் நிறைய புள்ளிகள் எடுக்கவேண்டும்.

தனிமையில் விளையாடும் இந்த விளையாட்டு குழந்தையிடம் பிடிவாதத்தை வளர்க்கிறது. தான் என்கிற வெறியை கிளப்புகிறது. வெற்றி பெறுவதற்காக எதையும் செய்யலாம் என்ற எண்ணத்தை வளர்க்கிறது.

கார்ரேஸில் எதிர்ப்படும் தடைகளை முறியடிப்பதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யத் துணிகிறான். தடுப்பைத் தகர்க்கிறான். விளக்குக் கம்பங்களை வீழ்த்துகிறான். குறுக்கே எதிர்ப்படும் எவரையும் காரை ஏற்றிக் கொல்கிறான். அப்போது குழந்தையின் முகத்தில் காணும் தீவிரத்தையும், வெற்றிபெற வேண்டும் என்கிற வெறியையும் பார்க்கும்போது உள்ளம் பதைக்கிறது.

என்ன மாதிரியான எதிர்கால சமூகத்தை உருவாக்கப் போகிறோம்? எச்சரிக்கையுடன் இருக்கவேண்டிய காலம் இது. குழந்தைகள் கூடி விளையாடுவதற்கான தருணங்களே இல்லாமல் ஆகிவிட்டது. வீடுகளுக்குள் எப்போதும் அலறும் முட்டாள் பெட்டிகளின் முன்னேயோ, பள்ளிக்கூடப் பாடப்புத்தகங்களிலோ வதைபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

கூடி வாழ்தல் என்பது எங்களை இந்த பூமியில் வாழத் தகுதியானவர்களாக்குகிற இயற்கை வாழ்முறை. கூடி வாழ்தலில் தான் ஒரு சமூகம் உயிர்த்திருக்கிறது. அது மனதுக்கும், உடலுக்கும் உரமூட்டுவதாக மட்டுமல்லாமல் உளவியல் ரீதியாக சமூகத்தின் அங்கத்தினரான ஒவ்வொருவரையும் பண்படுத்துகிறது.

அதற்கு குழந்தைப்பருவத்திலேயே சமூகம் கண்ட வழிமுறை தான் விளையாட்டு. விளையாடுவதிலுள்ள மகிழ்ச்சிக்காக விளையாடும்போதே, ஆரோக்கியத்திற்குத் தேவையான உடற்பயிற்சியாகவும் அது அமைந்துவிடுகிறது.

புறஉலகின் எல்லா நெருக்கடிகளிலிருந்தும், பெற்றோர்கள், ஆசிரியர்களின், வீட்டுப்பாட, பரீட்சைப் பெறுபேறு பூதங்களிலிருந்து விடுபட்டு தங்களுடைய இயல்பான படைப்பூக்க உணர்வை மீட்டெடுக்கவே குழந்தைகள் விளையாட்டின் மீது பேராவல் கொள்கின்றனர்.

சமூகத்தில் இயைந்து வாழ விளையாட்டு அவர்களை பண்படுத்துகிறது. தன் வயதொத்த குழந்தைகளோடு கூடி விளையாடும்போது கூட்டுச்செயலுக்கான விவேகமும், கூட்டுணர்வும் ஏற்படுகிறது.

தலைமைப் பண்பும், எதிர்பாராத சூழ்நிலைகளை எதிர்கொள்கிற திறனும் வளர்கிறது. பரஸ்பரம் விட்டுக்கொடுப்பதால், அன்பும், நட்பும் பெருகித் தழைக்கிறது. விளையாட்டுச் சண்டை என்பது விளையாட்டுச் சண்டையாகவே முடிந்து விடுகிறது.

குழந்தைகளால் நீண்ட நேரத்திற்குக் கோபத்தையும், வெறுப்பையும், கசப்பையும் வளர்க்க முடியாது. தர்க்கரீதியாக யோசித்து கொண்டிராமல், விட்டுக்கொடுத்து விடுவார்கள். இந்த விட்டுக்கொடுத்து இயைந்து வாழ்கிற பண்பு விளையாட்டின மூலமே கிடைக்கிறது. குழந்தைகளை கூடி விளையாட விடுங்கள். - ஆசிரியர்.

கெலம் மக்ரேவிற்கு எதிரான ஆர்ப்பாட்ட விவகாரம்

# தேசப்பற்றுள்ள இயக்கம் மீது தேசிய ஒற்றுமை இயக்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சனல்-4 தொலைக்காட்சி விவரண தயாரிப்பாளர் கெலம் மக்ரேவிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளாமை குறித்து தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது.

தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பும் இயக்கம் இந்த குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது.

இந்த இயக்கம், கெலம் மக்ரே நேற்றுமுன்தினம் பொது நலவாய மாநாட்டு செய்தி சேகரிப்புக்காக இலங்கை வந்திருந்த போது, கட்டுநாயக்கவில் வைத்து ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

எனினும், தேசப்பற்றுள்ள இயக்கங்கள் எனக்கூறிக கொள்வோர் கெலம் மக்ரேவிற்கு எதிராக செயற்படவில்லை என தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பும் இயக்கத்தின் உறுப்பினர் ரஞ்சித் வித்தானகே சுட்டிக்காட்டியுள்ளார்.

கெலம் மக்ரே இலங்கைக்கு வந்திருப்பது, ஏற்கனவே இலங்கைக்கு எதிராக தயாரித்த விவரண படத்தை போன்று பிரபாகரனின் மகள் கொலை செய்யப் பட்டது தொடர்பில் அரசாங்கத் தின் மீது குற்றம் சுமத்தி மற்று மொரு விவரண படத்தை தயா ரிப்பதற்காகும்.

எனவே அவரை உடனடியாக நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும். அத்துடன் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், அவர் நாட்டிற்கு வரும் போதுஎதிர்ப்பபை வெளியிடாமையானது வருந்தத்தக்க விடயம் என்றும் ரஞ்சித் விதானகே குறிப்பிட்டார்.

இது தொடர்பில் பதிலை வழங்கியுள்ள தேசபற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் வசந்த பண்டார, இலங்கை வந்துள்ள கெலம் மக்ரே இலங்கையின் சட்டத்துக்கு அப்பாற்பட்டு செயற்பட்டால் அவரை நாடு கடத்துவது தொடர்பில் தம்மிடம் மாற்று கருத்து இல்லை என்று குறிப்பிட்டார்.

எனினும், கெலம் மக்ரே நாட்டிற்கு வரும் போது ஆர்ப்பாட்டம் செய்வதனால் பிரச்சினை ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகவே தாம் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்கவில்லை என வசந்த பண்டார தெரிவித்தார்.

# கசினோ வர்த்தகர் ஜேம்ஸ் பாக்கரை கைது செய்யுமாறு முறைப்பாடு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் வர்த்தக மாநாட்டில் கலந்து கொள்ளும் அவுஸ்ரேலியாவின் கசினோ வர்த்தகர் ஜேம்ஸ் பாக்கரை கைது செய்யுமாறு கோரி ஐக்கிய தேசியக் கட்சி பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ச டி சில்வா தலைமையிலான அந்தக் கட்சியினர் இந்த முறைப்பாட்டைச் செய்தனர். இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஹர்ச டி சில்வா, இலங்கையில் இருக்கும் கசினோ நிலையங்கள் எதுவும் சட்டரீதியானவை அல்ல. கொழும்பு நகர சபைக்கு அருகில் இயங்கி வந்த சட்ட விரோதமான கசினோ நிலையம் சுற்றிவளைக்கப்பட்டு அங்கிருந்தவர்கள் கைது செய்யப்பட்டனர். ஜேம்ஸ் பாக்கர் சட்டவிரோதமான மிகப் பெரிய கசினோ சூதாட்ட நிலையத்தை நிர்மாணிக்கப் போகிறார். ஜேம்ஸ் பாக்கர் இலங்கை வந்துள்ளார். அவர் இலங்கையில் ஆரம்பிக்கப் போவது சட்டவிரோதமாக கசினோ நிலையம் என்பதால் அவரை கைது செய்யுமாறு முறைப்பாட்டில் கோரிக்கை விடுத்துள்ளோம் என்றார்.

# போலி நாணயத்தாள் அச்சிட்ட ஐவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பேலியகொட பொலிஸ் பிரிவில் தொரண சந்திப் பகுதி ஹோட்டல் ஒன்றில் போலி நாணயத்தாள்கள் வைத்திருந்த நால்வர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேலியகொட பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். ஒருவரிடம் இருந்து ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் பத்து மீட்கப்பட்டுள்ளன. மற்றுமொரு சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின் வெள்ளம்பிட்டி பிரதேச வீட்டில் இருந்து ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் ஐந்தும் அவற்றை அச்சிடப் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களும் மீட்கப்பட்டுள்ளன.

அதன்பின் கொழும்பு-11 பிரதான வீதி வீட்டில் இருந்து ஒருவர் கைது செய்யப்பட்டதோடு அவரிடம் இருந்து அச்சு இயந்திரம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் ஐவரும் மஹர நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். பேலியகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முதுகில் குத்தியவர்களுக்கு கட்சியில் இடமில்லை

## ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

முதுகில் குத்திய துரோகிகளுக்கு கட்சியில் ஒருபோதும் இடமில்லை என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைநகர மக்கள் ஒன்றுகூடல் இரண்டாம் நிகழ்வு வட கொழும்பு கதிரானவத்தை மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இங்கு உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

வடக்கில் செய்து பார்த்து முடியாமல் போன வேலையை இந்த அரசாங்கம் இப்போது கொழும்பு மாவட்டத்திலும் செய்து பார்க்க முயலுகிறது.

அரசுடன் குடித்தனம் நடத்தும் குழுக்களை தமிழ் கட்சிகள் என்ற பெயரில் களமிறக்கி தமிழர்களின் வாக்குகளை சிதறடித்து தலைநகர தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் ஒழிக்க திட்டமிடப்படுகின்றது.

இந்தத் திட்டத்தில் பிரதான பாத்திரங்களை வகிக்கும் பச்சை, நீல, சிகப்பு நிற தமிழர்கள் எவர் என்பதை விரைவில் கண்டு கொள்ளலாம்.

இந்த அரசியல் வியாபாரத்தை முறியடிக்க, எதிர்வரும் மேல்மாகாணசபைத் தேர்தலின் போது நமது ஆதரவாளர்கள் அனைவரும் வாக்காளர்களாக மாற வேண்டும்.

கொழும்பில் தமிழர் வாக்களிப்பு 90 விகிதமாக அமைய வேண்டும். தேர்தல் நேரத்தில் நாட்டில் இல்லாதவர்களை தவிர வாக்குரிமையுள்ள தமிழர்கள் அனைவரும் வாக்களிக்க இப்போதே தம்மை தயார் செய்து கொள்ள வேண்டும்.

எங்களுக்கும் ஏனைய குழுக்களுக்கும் வித்தியாசம் என்ன தெரியுமா? தமக்கு எவராவது ஆதரவளிக்க இருக்கின்றார்களா என இவர்கள் கொழும்பிலே ஆதரவாளர்களை தேடி திரிகின்றாரகள். ஆனால், நாங்கள் எங்கள் பெருந்தொகை ஆதரவாளர்கள் அனைவரையும் வாக்காளர்களாக மாற்றிடும் நடவடிக்கையில் இறங்கியுள்ளோம்

இப்போது தமிழ் பிரதிநிதித்துவம் பற்றி போகுமிடமெல்லாம் மக்கள் பேசுகிறார்கள். தமிழர்களுக்கு தாங்கள் வாழும் மாகாணங்களில், மாவட்டங்களில், தொகுதிகளில், ஊர்களில் பூரண அரசியல் பலமுள்ளவர்களாக வாழ வேண்டும் என்ற நல்ல எண்ணம் வந்து விட்டது.

தமது வாக்குரிமையை முழுமையாக பயன்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் தமிழர்களுக்கு வந்து விட்டது என்றார்.

# கிளிநொச்சி நகரின் இருளுக்கு நிதி வறுமை காரணமல்ல நிர்வாகத்திறன் வறுமையே காரணம்

**திறனற்ற பிரதேச சபையின் செயற்பாடுகள் காரணமாக கிளிநொச்சி பொதுச்சந்தை தற்போது பொதுமக்கள் முகத்தைச் சுழிக்குமளவுக்கு நாற்றம் எடுக்கும் இடமாக காணப்படுகிறது. சுகாதார சீர்கேடுகள் நிறைந்த இடமாக உள்ளது. எதையுமே சீராகச் செய்யாத இவர்கள் எப்பொழுதும் எதிர் விமர்சனங்களையும், குற்றச்சாட்டுக்களையும் முன்வைப்பதில் தவறியது கிடையாது. மக்கள் தங்களை தெரிவு செய்து விட்டது விமர்சனங்களை முன்வைப்பதற்கும், அறிக்கைகள் விடுவதற்கும், யதார்த்தத்திற்கு புறம்பான தீர்மானங்களை எடுப்பதற்குமே என்ற நிலையிலேயே செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.**

கார்த்திகேசு

"அரசு திட்டமிட்டு கிளிநொச்சியின் அபிவிருத்தி நடவடிக்கைகளை புறக்கணித்து வருகிறது. போரின் பாதிப்புக்களை முழுமையாக சுமந்த கிளிநொச்சி, அபிவிருத்தியில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். ஆனால் இலங்கை அரசு அதனை தவிர்த்து செயற்பட்டு வருகின்றமை தமிழ் மக்களை அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் அரசு புறக்கணித்து வருகின்றமையின் வெளிப்பாடே" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபைத் தவிசாளர் அவர்கள் இரண்டு வருடத்திற்குமுன் நடந்த ஒரு கூட்டத்தின்போது தெரிவித்திருந்தார்.

இவர் அதே கூட்டத்தில் தொடர்ந்து பேசுகையில் "கிளிநொச்சியில் இன்னும் பல வீதிகள் புனரமைக்கப் படாமையால் மக்கள் பெரும் போக்குவரத்து நெருக்கடிகளைச் சந்தித்து வருவதாகவும் குறிப்பாக கிளிநொச்சியின் பிரதான வீதியான ஏ-9 வீதி மிகவும் மோசமாக இருப்பதாகவும் ஆனால் தெற்கில் அரசு நல்ல நிலையிலுள்ள தார் வீதிகளை காப்பெற் வீதிகளாக மாற்றி வீதி விளக்குகள் போடப்பட்டு அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. போரின் தாக்கங்களை சுமந்த கிளிநொச்சியில், இதுவரை எதுவும் நடப்பதாக் இல்லை" எனவும் கரைச்சிப் பிரதேச தவிசாளர் வை.குகராசா அரசு மீது விமர்சனங்களை முன்வைத்திருந்தார்.

கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர், அபிவிருத்தி தொடர்பில் குறிப்பாக வீதிப்புனரமைப்பு தொடர்பில் அரசின் மீது மேற்படி விமர்சனங்களை முன்வைத்து இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் மீள் குடியேறி நான்காண்டுகள் கழிந்த நிலையிலும் கிளிநொச்சியின் அபிவிருத்தியில் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன, நிகழ்ந்துகொண்டும் இருக்கின்றன. குறிப்பாக வீதிகள், பாலங்கள், குளங்கள், அலுவலக கட்டடங்கள், மின்சாரம் என அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

முக்கியமாக, தவிசாளர் குகராசா அவர்களால் புறக்கணிப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட ஏ-9 வீதி நவீன முறையில் இரு வழிப்போக்குவரத்துப் பாதையாக காப்பெற் போடப்பட்டு கொழும்பு நகர வீதிகள் போன்று மிகவும் அழகாக வீதியின் நடுவே புற்களும், பூச்செடிகளும் நடப்பட்டு மின் விளக்குகள் பொருத்தப்பட்டு புனர்மைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர அரசினால் கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரைக்கும் 150 இற்கு மேற்பட்ட பிரதேச சபைக்கு சொந்தமான கிராம வீதிகள் கொங்கீறிட் வீதிகளாகவும், பல வீதிகள் தார் வீதிகளாகவும் புனரமைக்கப்பட்டுள்ளன. தவிரவும், பிரதேச சபை செய்ய வேண்டிய பல பணிகளை அரசு தனது பல்வேறு திட்டங்களின் மூலம் மேற்கொண்டுள்ளது.

உதாரணமாக சந்தைக் கட்டடங்கள், குடிநீர் வசதிகள் என இதில் அடங்குகின்றன. இருந்தும் இன்னும் ஏராளமான அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பிரதேச சபைகள் மேற்கொள்ள வேண்டிய மக்களுக்கான அபிவிருத்திப்பணிகளில் பெரும்பாலானவற்றை நெல்சிப், புறநெகும, திவிநெகும, என்ரிப் உள்ளிட்ட உலக வங்கியின் கடனுதவியின் கீழான பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பல திட்டங்கள் மூலம் அரசு மேற்கொண்டு வருகின்றது. இது அனைவரும் அறிந்த விடயம்.

இவ்வளவு அபிவிருத்திப்பணிகளையும் செய்து அதனை பராமரிக்கும் பொறுப்பினை உரிய கரைச்சிப் பிரதேச சபையிடம் வழங்கிய போதும் பிரதேச சபையினர் அதனை தங்களுடைய வினைத்திறனற்ற நிர்வாக செயற்பாடுகள் காரணமாக செய்யத் தவறிவிட்டு, மீண்டும் அரசை விமர்சிக்கும் செயற்பாடுகளில் தங்களின் வினைத்திறன்களை காட்டி வருகின்றனர்.

அதாவது அபிவிருத்தியில் கிளிநொச்சியை அரசு புறக்கணிக்கிறது என - குறிப்பாக கிளிநொச்சியின் ஏ-9 வீதியினைக் கூட அரசு புனரமைக்கத் தவறியுள்ளது, தெற்கில் சாதாரண வீதிகூட காப்பெற் வீதிகளாக செப்பனிடப்பட்டுள்ளது என குற்றம் சுமத்திய அதே தவிசாளர், தற்போது கிளிநொச்சி ஏ-9 காப்பெற் வீதியையும், அந்த வீதி விளக்குகளையும் ஆடம்பர வேலை, தேவையற்ற விடயம் எனவும் ஊடகங்கள் வாயிலாக விமர்சித்து வருகின்றார்.

தனது பிரதேச சபைக்குள் வரும் ஒரு நகரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தியினை தேவையற்ற ஆடம்பரம் எனக் கூறிய ஒரேயொரு தவிசாளர் இந்த கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளராகத்தான் இருக்க முடியும். பிரதேச சபை, நகரசபை தவிசாளர்கள் அல்லது மாநகர சபை மேயர் என்போர் தங்களின் பிரதேசம் நவீன உலக ஒழுங்குக்கு ஏற்ப அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும், அதற்கு என்ன வழிகளை மேற்கொள்ளலாம் எவ்வாறு அதனை நடைமுறைப் படுத்தலாம் என்று சிந்தித்து நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களாகவே இருப்பர். ஆனால் கரைச்சி பிரதேச சபையினர் இதற்குப் புறநடையாக இருந்து செயற்பட்டு வருகின்றனர். அவலத்தில் அரசியல் நடத்தும் பாரம்பரியத்துக்குள்ளாக வந்தவர்கள், இவ்வாறு பேசுவது ஒன்றும் ஆச்சரியத்துக்குரிய விடயமல்ல, இருப்பினும் இவர்களைத் தெரிவு செய்துவிட்ட மக்களுக்கு இதுவரைக்கும் இவர்களால் என்ன பயன் கிடைத்துள்ளது என்பதுவே இங்குள்ள முக்கியமான விடயமாகும்.

வீதி விளக்குகளுக்குப் பயன்படுத்தும் பணத்தினை தாங்கள் கிராம மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கும், கிராமங்களின் முன்னேற்றங்களுக்கும் செலவு செய்யலாம் எனத் தெரிவித்திருக்கும் பிரதேச சபை தவிசாளர் தனது பதவிக்காலத்தில் பெயர் சொல்லும் அளவுக்கு என்ன அபிவிருத்திப்பணிகளை மேற்கொண்டுள்ளார்? இதுவரையில் கிராமங்களின் அபிவிருத்திக்கு இவர்களால் ஒரு செங்கல்லாவது வைக்கப்பட்டுள்ளதா? கிளிநொச்சியில் பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளே அதிகம். இந்த வீதிகளில் ஒரு வீதியையாவது பிரதேச சபை தனது நிதியில் புனரமைத்திருக்கிறதா?

சபை தனது வருமானத்தில் ஒரு மயானத்தையாவது புனரமைத்துள்ளதா? கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட பல கிராமங்களில் பெரும்பாலான காலங்களில் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதற்காக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு எரிபொருளையும் நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை தங்களின் நீர்த்தாங்கியினையும் வழங்கி குடிநீர் விநியோக நடவடிக்கைகளை பிரதேச சபை ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. இதிலும் கூட குடிநீரை கொண்டு சென்று வழங்கும் பணியினையே மேற்கொள்ளும் பிரதேச சபை, அதனையும் மக்களின் தேவைக்கு ஏற்ப சீராக மேற்கொள்வதில்லை:

இவ்வாறாக, மக்களின் நலனுக்காக எந்தப் பணியினையும் சுயமாக ஒழுங்காகச் செய்வது கிடையாது, செய்து கொடுப்பதையும் ஒழுங்காக பராமரிப்பதும் கிடையாது. இதற்கான நல்ல உதாரணம் பல் மில்லியன் ரூபா செலவில் மிகவும் அழகாக அமைத்துக் கொடுக்கப்பட்ட கிளிநொச்சி பொதுச்சந்தையின் தற்போதைய நிலைமையாகும். சீராக பராமரிக்க திறனற்ற பிரதேச சபையின் செயற்பாடுகள் காரணமாக கிளிநொச்சி பொதுச்சந்தை தற்போது பொதுமக்கள் முகத்தைச் சுழிக்குமளவுக்கு நாற்றம் எடுக்கும் இடமாக காணப்படுகிறது. சுகாதார சீர்கேடுகள் நிறைந்த இடமாக உள்ளது. இப்படி எதையுமே சீராகச் செய்யாத இவர்கள் எப்பொழுதும் எதிர் விமர்சனங்களையும், குற்றச்சாட்டுக்களையும் முன்வைப்பதில் தவறியது கிடையாது.

மக்கள் தங்களை தெரிவு செய்து விட்டது விமர்சனங்களை முன்வைப்பதற்கும், அறிக்கைகள் விடுவதற்கும், யதார்த்தத்திற்கு புறம்பான தீர்மானங்களை எடுப்பதற்குமே என்ற நிலையிலேயே செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வீதி விளக்குகளுக்கான மின்சாரக் கட்டணத்தை செலுத்துமளவுக்கு திட்டமிடலும், நிர்வாகத்திறனும் அற்ற இவர்கள் எப்படி மக்களின் ஏனைய அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்யப் போகின்றார்கள்? கடந்த இரண்டு வருடங்களில் மக்களின் நலன்களுக்காக என்ன செய்துள்ளனர்? போன்ற பல கேள்விகள் மக்களால் எழுப்பப்படுகின்றன... அதற்கு என்ன பதிலளிக்கப் போகின்றார்கள்?

வருமானவரி, விற்பனை வரி, நில வாடகை, உரிமம் கட்டணம், விளம்பர மற்றும் பெயர்ப்பலகை கட்டணம், இறைச்சிக் கடை ஏலத்தில் கிடைக்கும் பெருமளவு வருமானம், முக்கியமாக நீதிமன்றத்தின் மூலம் கிடைக்கும் அதிகளவான நிதிகள் உள்ளிட்ட பல வழிகளில் வருமானத்தைப் பெறும் பிரதேச சபையினர் தாங்கள் பெறும் வருமானங்களை கொண்டு நேர்த்தியான திட்டமிடல் மூலம் நடவடிக்கைகளை முன்னெடுத்தால் கிளிநொச்சி ஏ9 வீதியும் வெளிச்சம் பெறும் தாங்களும் மக்கள் மத்தியில் வெளிச்சத்திற்கு வருவார்கள். இதனை விடுத்து விமர்சிக்கவும் அறிக்கைகள் விடுவதிலும் காலத்தையும் சிந்தனைகளையும் செலவழித்தால் நகர் மட்டுமல்ல வாக்களித்த மக்களின் வாழ்வும் இருளில்தான் மூழ்கும்.



# மோதல்களிலிருந்து மீண்டெழுந்து முன்னேறும் நாடாக இலங்கை

## மலேசிய பிரதிநிதி பாராட்டு



மோதல்களில் இருந்து மீண்டெழுந்து முன்னேறி வரும் நாடுகளுக்கு இலங்கை முன்மாதிரி நாடாக இருக்க முடியுமென மேர்ஸி மலேஷிய அமைப்பின் ஸ்தாபகரும் பிரபல சிவில் அமைப்பு செயற்பாட்டாளருமான டாக்டர் ஜெமீலா மஹ்மூத் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய மக்கள் மாநாடு ஹிக்கடுவை சாயா டிரான்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் பிரதான உரை நிகழ்த்திய அவர், பொதுநலவாய மக்கள் மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்களை வெகுவாகப் பாராட்டினார்.

அவர் தெரிவித்த கருத்துக்களை ஆரம்பமாக கொண்டு மோதல்களில் இருந்து மீண்டு வரும் நாடுகளில் நடைபெறும் அபிவிருத்தி செயற்பாடுகளில் சிவில் அமைப்புகள் பங்களிக்க வேண்டும் என்றார்

பொதுநலவாய மக்கள் மாநாடு, பொதுநலவாய மன்றத் தலைவர் ஆனந்த் சத்யானந்தன், உப குழு தலைவர் டாக்டர் லலித் சந்ரதாஸ ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது

2015 அபிவிருத்தி செயற்பாட்டில் சிவில் அமைப்புக்களின் பங்களிப்பு எனும் தொனிப் பொருளில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது, நாட்டின் அபிவிருத்தி செயற்பாட்டில் சிவில் அமைப்புகளுக்கு பாரிய பங்குள்ளது. அரசாங்கத்தை சிவில் சமூகம் எதிரியாக நோக்கக்கூடாது.

2015 அபிவிருத்தி இலக்கில் தீர்மானம் எடுப்பதில் தாக்கம் செலுத்தக்கூடிய சகல தரப்பினரும் உள்வாங்கப்பட வேண்டும் வறுமை நிலையில் உள்ள மக்களுக்கு குரல் கொடுக்கும் வகையில் இது அமைய வேண்டும்.

இறுதித் தீர்வுக்கான முயற்சியுடன் சிவில் அமைப்புகள் அரச தலைவர்களுடன் பேச வேண்டும். சிவில் அமைப்புகள் எப்பொழுதும் தமது வகிபாகத்தை விட்டுக் கொடுக்கக் கூடாது. எமது யோசனைகளை சிவில் சமூகங்கள் உள்வாங்கி செயற்பட வேண்டும்.

அரசாங்கத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படும் அதேவேளை அவதானமான முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும். மரபு ரீதியாக அன்றி நாம் பரந்துபட்ட அளவில் செற்பட வேண்டும். ஜனாதிபதியின் உரையில் மனித உரிமை, ஊடக சுதந்திரம் குறித்து தெரிவித்த கருத்துகள் வரவேற்கத்தகவை என்றார்.


## வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு

(கொழும்பு)

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட கட்டுரை, பேச்சு, மற்றும் சித்திரப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் பரிசில்களை வழங்கி வைத்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஸ் சர்மா, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் கல்வியமைச்சர் பந்துல குணவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பொதுநலவாய மாநாட்டு முத்திரை நாளை வெளியீடு




பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு தபால் சேவைகள் அமைச்சு 5 ரூபா, 25 ரூபா பெறுமதியான இரண்டு முத்திரைகளையும் 30 ரூபா பெறுமதியான தபால அட்டையொன்றையும் வெளியிடவுள்ளது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நாளை காலை 9.45 மணிக்கு தபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பொதுநல வாய செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா ஆகியோருக்கு முத்திரைகளையும் தபால் அட்டையினையும் உத்தியோக பூர்வமாக கையளிப்பார். முத்தி ரைகளும், தபாலட்டையும் ஓவியர் குமுது தாரக்க வடிவமைத்ளார்.

## வாகன தரிப்பிட குத்தகை நட்டம் தொடர்பாக ஆராய்வு

வாகனத் தரிப்பிடம் குத்தகைக்கு விடப்பட்டமையில் 18 கோடி நட்டம் ஏற்பட்டது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விரயம், செயற்றிறன் இன்மை மற்றும் முகாமைத்துவ குறைபாடுகள் காரணமாக நட்டம் ஏற்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில், பொறுப்பு கூற வேண்டியவர்களிடம் இருந்து அந்த நட்டத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் எச்.எ.எஸ்.சமரவீர கூறியுள்ளார்.

விசேடமாக கண்டி மாநகர சபையின் வாகனத் தரிப்பிடம் குத்தகைக்கு விடப்பட்டமை. தொடர்பில் 18 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளமை தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்காக பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவிக்கின்றது.

## உணவு பாதுகாப்பு வாரத்தில் 68 இலட்சம் ரூபா இலாபம்

(கொழும்பு)

உணவு பாதுகாப்பு வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 68 இலட்சம் ரூபா பணம் அபராதமாக பெறப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் 21 ஆம் திகதி உணவு பாதுகாப்பு வாரம் தொடங்கிய நிலையில், நாடு முழுவதிலும் 40,000 வர்த்தக நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இதன்போது பாவனைக்கு உதவாத உணவு பொருட்களை விற்பனை செய்த 1400 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் பல வர்த்தக நிலையங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் குறித்து எதிர்வரும் காலங்களில் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## பங்களாதேஷிலிருந்து மருந்து கொள்வனவை தடுப்பதற்கு உயரதிகாரிகள் முயற்சி

(கொழும்பு)

அரசாங்கங்களுக்கு இடையிலான நேரடி கொடுக்கல் வாங்கல் மூலம் பங்களாதேஷிலிருந்து மருந்துகள் கொள்வனவு செய்வதை சில உயரதிகாரிகள் தடுக்க முயல்வதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இப்பிராந்தியத்தில் மருந்து கைத்தொழிலில் பங்களாதேஷ் முன்னணி நாடுகளில் ஒன்றாகும்.

இலங்கை தற்போது அதன் மருந்து தேவையில் பெரும்பகுதியை இந்தியாவிலுள்ள தலையாய நிறுவனங்களிலிருந்து இறக்குமதி செய்கின்றது என்றார்.

இதேவேளை, இந்தத் திட்டத்தை முன்னெடுக்க அரசாங்கம் அமைச்சருக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. பங்களாதேஷிலிருந்து மருந்தைக் கொளவனவு செய்வதற்கான உள்நாட்டு முகவராக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் செயற்படவுள்ளது.

## தலைமைத்துவ சபை முதலாவது சந்திப்பு நாளை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவ சபையின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான இறுதி தீர்மானங்கள் சில அதன் முதல் கூட்டத்தில் மேற்கொள்ளப் படவுள்ளதாக கட்சி தரப்பு செய்திகள் தெரிவித்துள்ளது.

கட்சித் தலைமைத்துவ சபையின் முதலாவது சந்திப்பு நாளை தலைவர் கருஜயசூரியவின் தலைமையில் சிறிகொத்த கட்சித் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கருஜயசூரிய மற்றும் தலத்தா அத்துகோறல ஆகியோர் தலைமைத்துவ சபையில் பங்கேற்கப் போவதில்லை என்று அறிவித்துள்ள நிலையில், நெருக்கடி நிலை தோன்றியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் முதலாவது அமர்வில் கலந்துரையாடிய பின்னர் அதன் இறுதி தீர்மானம் மத்திய செயற்குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தலைமைவத்துவ சபையின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

## மத்திய வங்கி நூதனசாலை திறந்துவைப்பு



(கொழும்பு)

கொழும்பில் புதிதாக அமைக்கப்பட்ட மத்திய வங்கி நூதனசாலையை ஜனாதிபதி மகிந்த ராஜக்ஷ நேற்றமுன் தினம் திறந்துவைத்தார்.

கொழும்பு சத்தாம் வீதியில் 100 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த சென்ட்ரல் பொயின்ட் கட்டடம் புனரமைக் கப்பட்டு அதில் மத்திய வங்கியின் நூதன சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடம் புலிகளின் தாக்குதலினால் மிகவும் மோசமான முறையில் சிதைவடைந்திருந்தது. பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி செயலாளரின் பணிப்பின் பேரில் இக்கட்டடம் புனரமைக்கப்பட்டது.

பொதுநலவாய அரச தலை வர்களின் மாநாட்டை முன்னிட்டு மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட500 ரூபா நாணயத்தாள் இந்த வைபவத்தின்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

## ஏழு நாடுகளைச் சேர்ந்த பிரமுகர்கள் வருகை

(கொழும்பு)

பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நேற்றுமுன் தினம் மாலைவரை ஏழு நாடுகளைச் சேர்ந்த பிரமுகர்கள் இலங்கை வந்தடைந்தனர்.

மாலாவி நாட்டின் உப ஜனாதிபதி , தென்லூசியா , பாபடோஸ், ஸம்பியா, வனுவட்டு ஆகிய நாடுகளின் வெளிநாட்டு அமைச்சரகள் ஆகியோரே வந்தடைந்துள்ளனர்.

பண்டார நாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தத் தகவலை பொது நலவாய மாநாடு தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் பேச்சாளர் அநுராதா கே. ஹேரத் தெரிவித்தார்.

# ஆயுர்வேத வைத்திய சேவை இருநாட்கள் நடத்த கோரிக்கை

(மானிப்பாய்)

நவாலியில் இயங்கும் சுதேச ஆயுர்வேத மத்திய மருந்தகத்திற்கு கூடுதலான மக்கள் சிகிச்சைக்கு வருவதால் மேலதிகமாக ஒருநாளை அனுமதிக்க வடமாகாண சுதேச வைத்திய பணிப்பாளர் முன்வரவேண்டும் என நவாலி ஹேமலதா ஞாபகார்த்த நிறுவன தலைவர் கேட்டுள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேச மக்களின் நன்மைகருதி நவாலி கொத்துக்கட்டி வீதியில் உள்ள ஹேமலதா நிறுவனத்தில் மத்திய மருந்தகத்தின் சேவை வாரத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் இடம் பெறுகின்றது.

இத்தினங்களில் 70 முதல் 80 வரையிலான மக்கள் முழு மருத்துவ சேவையினால் பெரிதும் பயன்பெறுகின்றனர். இதற்காக வைத்திய கலாநிதி டாக்டர் திருமதி அன்பரசி கேதீஸ்வரனும் அவரது பணியாட்குழுவினரும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றனர்.

எனவே வலி.தென்மேற்கு மக்கள் முழுமையாக நவாலி ஹேமலதா ஞாபகார்த்த ஆயுர்வேத மத்திய மருந்தகத்தினைப் பயன்படுத்த வாரத்தில் மேலதிகமாக ஒரு நாளை ஒதுக்கி இரு நாள் சேவை இடம்பெற வழிசமைக்க வேண்டும்.

இதேவேளை இங்கு சிகிச்சைக்கு வரும் நோயாளிகளும் வாரத்தில் இரு நாள் வைத்திய சேவை வழங்குமாறு கோருகின்றனர்.

எனவே வடமாகாண ஆயுர்வேத பணிப்பாளர் டாக்டர் திருமதி சியாமா துரைரட்ணம் இவ்விடயத்தில் கூடுதல் கரிசனை கொண்டு இரு நாள் சேவையை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

# 'ஆளுமை' திரைப்படத்தின் அறிமுகவிழாவை நடத்த ஏற்பாடு

(குருநகர்)

குருநகர் நாட்டுக் கூத்து மன்றத்தால் 2011ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட 'ஆளுமை' திரைப்படத்தின் அறிமுக விழாவும், கலைஞர்கள் கௌரவமும் வவுனியா நகரில் விரைவில் நடாத்தப்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் வவுனியா தமிழ்ச் சங்கம் நடாத்திய மாவீரன் பண்டார வன்னியன் தேசிய விழாவில் 'ஆளுமை' திரைப்படம் திரையிடப்படவும் தயாரிப்பாளர் 'கலைமாமணி' கிறிஸ்தோப்பரை கௌரவிக்கவும் மேற்கொண்ட முயற்சிகள் சங்கத்தினரால் கிறிஸ்தோப்பருடன் தொடர்பு கொள்ள முடியாததால் இடைநிறுத்தப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

'ஆளுமை' திரைப்படம் மாவீரன் பண்டார வன்னியன் வரலாற்றை வைத்து தயாரிக்கப்பட்ட நாட்டுக் கூத்து வடிவிலான தயாரிப்பு என்பதும், இதுவரை இலங்கையில் எங்கேயும் யாராலும் திரைப்பட உருவில் உருவாக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(68)

# கருத்தரங்கு

. நெடுங்கேணி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சிறுவர்துஷ்பிரயோகம் சம்பந்தமான கருத்தரங்கு நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.


நெடுங்கேணி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் 12வயது முதல் 16 வயதிற்கு இடைப்பட்ட மாணவ, மாணவிகளுக்காக நடத்தப் பட்ட இக்கருத்தரங்கு நெடுங் கேணி பொலிஸ் பொறுப்பதிகாரி லொந்தகேரர் ஒழுங்குபடுத்தலில் வித்தியாலய அதிபர் முருகதாஸன் தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாகவும் இதில் இருந்து சிறுவர்கள் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும். என்பது பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது. (40)

# புறநெகும திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படும் வீதிகள்

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத்தலைவரும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் அனுமதியுடனும் நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்பு குழுத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்ரினின் சிபாரிசுடனும், நல்லூர் பிரதேச சபையின் எதிர்கட்சி தலைவரும் ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாள ருமாகிய அம்பலம் இரவீந்திரதாசனின் வேண்டுகோளுக்கிணங்க புறநெகும திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட கீழ்வரும் வீதிகள் புனரமைக்கப்படவுள்ளது.

இதன்படி வெட்டுகிணறு பிள்ளையார் கோவில் வீதி அரியாலை, ஆனைவிழுந்தான் வீதி, மணிப்புரி கிழக்கு வீதி தொகுதி அரியாலை, பொற்பதி 2ஆம் லேன் கொக்குவில் கிழக்கு, கலைவாணி மில்லேன் கொக்குவில் கிழக்கு, திருச்செல்வம் வீதி, கோண்டாவில், புதிய சிவப்பிரகாசம் வீதி, கோண்டாவில், பாடசாலை வீதி, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை, பொன்னையா லேன் 2ஆம் ஒழுங்கை, கொட்டைக்காடு கோண்டாவில் 1ஆம், 2ஆம் ஒழுங்கை, நாமகள் வீதி, கொக்குவில் கிழக்கு, பாரியார் வீதி - கொக்குவில் கிழக்கு, போன்ற வீதிகளே புனரைமைக்கப்படவுள்ளது.



நெடுங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரியின் ஒழுங்குபடுத்தலில் நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இரத்ததான நிகழ்வு...

(40)



# தெற்காசியா மெய்வல்லுநர் இலங்கைக்கு இரு தங்கம்

(ராஞ்சி)

இந்தியாவின் ராஞ்சி நகரில் நடைபெறும் தெற்காசிய கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டியில் இலங்கை வீராங்கனைகள் இருவர் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டியில், இலங்கை வீராங்கனை சிவாந்தி ரத்நாயக்க தங்கப் பதக்கம் வென்றுள்ளார். இவர் போட்டித் தூரத்தை 58.87 செக்கன்களில் ஓடி முடித்து தங்கம் வென்றார்.

இந்தப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த மற்றுமொரு வீராங்கனையான நிர்மாலி மதுஷிக்கா வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

பெண்களுக்கான முப்பாய்ச்சல் போட்டியில் இலங்கை வீராங்கனை விதூஷா லக்ஷானி தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.இவர் 12.6 மீற்றர் தூரத்தைப் பாய்ந்து தங்கத்தை வென்றார்.



# 5ஆவது போட்டியிலும் தென்னாபிரிக்கா வெற்றி

கப்டன் டி வில்லியர்ஸின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி 117 ஓட்டங்களால் பெரு வெற்றிபெற்றது. இதன் மூலம் ஒரு நாள் போட்டித் தொடரை 4-1 என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணி கைப்பற்றிக்கொண்டது.

தென்னாபிரிக்க, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் சர்ஜாவில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய, தென்னாபிரிக்க அணி, கப்டன் டிவில்லியர்ஸின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் டிவில்லியர்ஸ் 102 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், பத்து பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 115 ஓட்டங்களைப் பெற்றார். ஒரு நாள் அரங்கில் வில்லியர்ஸ் பெற்ற 16ஆவது சதமாக இது அமைந்தது. மற்றும் டுபிளிசர் 46 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சயிட் அஜ்மல் மூன்று, யுனைட்கான் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 269 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 35.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 151 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் மசூட்53,உமர் அக்மல்30, மிஸ்பா உல்ஹக் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் டுமினி, பிளிண்டர் தலா இரண்டு, பர்னல்மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை தென்னாபிரிக்க அணி 4-1 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக டிவில்லியர்ஸ், தொடர்நாயகனாக மைக்லேன் தெரிவு செய்யப்பட்டனர்.

# டெஸ்ட் அணியில் பெய்லி

(சிட்னி)

இங்கிலாந்து அணிக்கெதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் அவுஸ்ரேலிய அணியில் ஜோர்ஜ் பெய்லி இடம்பிடித்துள்ளார்.

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் தொடர் எதிர்வரும் 21ஆம் திகதி பிரிஸ்பேனில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த போட்டிக்கான 12 பேர் கொண்ட அவுஸ்ரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் ருவென்ரி-20 போட்டி கப்டன் பெய்லி அணியில் இடம் பெற்றுள்ளார். அவர் முதல் முறையாக டெஸ்டில் அறிமுகமாக உள்ளார். இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் 478 ஓட்டங்கள் குவித்ததால் அவருக்கு டெஸ்ட் அணியில் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:

கிறிஸ் றொஜர்ஸ், டேவிட் வோனர், வட்சன், மைக்கல் கிளார்க், ஸ்ரீபன் ஸ்மித், ஜோர்ஜ் பெய்லி, பிரட் ஹடின், ஜேம்ஸ் போக்னர், ஜோன்சன், பீற்றர் சிடில், றயன் ஹரிஸ், நதன் லயன்

# தலைமைக்குத் தகுதி குக்கிடம் இல்லை

## ஷேன் வோர்ன்

(சிட்னி)

இங்கிலாந்து அணியை வழிநடாத்தக்கூடிய ஆற்றலோ, தலைமையில் கற்பனைத் திறனோ குக்கிடம் இல்லை என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார்.

குக் தலைமையில் ஒரு கற்பனைத் திறனேயில்லை. உத்தி ரீதியாகவும் அவர் மோசமாக உள்ளார். இதே போல் அவர் தலைமையில் இங்கிலாந்தில் அவுஸ்ரேலியா அடைந்த தோல்வியை அவுஸ்ரேலியாவில் இங்கிலாந்து அடைய நேரிடும்.


நான் உண்மையைத்தான் கூறுகிறேன், நான் அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபையின் சம்பள ஊழியன் அல்ல இதை கூறும்போது!! கிளார்க் எனது சிறந்த நண்பர்தான், ஆனால் கிளார்க்கின் மிகக் கடுமையான விமர்சகனும் நானே. இதை கிளார்க் நன்கு அறிவார்.

மீண்டும் இங்கிலாந்து முதல் இடத்தைப் பிடிக்கவேண்டுமெனில் குக் தனது உத்தியை மாற்றிக் கொள்ளவேண்டும் இன்னும் கொஞ்சம் ஆக்ரோஷமாக இருக்கவேண்டும், இன்னும் கற்பனைத் திறனுடன் அவர் செயல்படவேண்டும்.

இப்போதுள்ள இங்கிலாந்து அணியில் தலைமையில் திறமை படைத்தவர்கள் இருவர்தான். ஒன்று கெவின் பீற்றர்சன், மற்றொரு தெரிவு கிரகாம் ஸ்வான். கடந்த ஆண்டு கெவின் பீற்றர்சனை வைத்து எழுந்த சர்ச்சைகளை வைத்துப் பார்க்கும்போது நான் இம்மாதிரி கூறுவது பலருக்கு நம்ப முடியாமல்கூட இருக்கலாம். இங்கிலாந்து அணியில் உள்ள சிறந்த கிரிக்கெட் மூளை கெவின் பீற்றர்சன்தான்!

கிரேம் ஸ்வானும் நல்ல கற்பனைத் திறன் வாய்ந்த கப்டன் என்பது ருவென்ரி-20 கிரிக்கெட்டில் பார்த்தேன். இவர்கள் இருவருமே நல்ல கற்பனைத் திறன் உள்ளவர்கள். போட்டிச் சூழலில் ஆக்ரோஷமான தெரிவை முதலில் தேர்வு செய்பவர்கள் இருவரும். ஆனால் குக் சூழல் சாதகமாக இல்லாத போது தளர்வடைந்து தற்காப்பு உத்திக்குச் செல்கிறார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நம்பகத் தன்மையில்லை




(மெல்போர்ன்)

நடுவர் தீர்ப்பு மறுபரிசீலனை முறை (டி.ஆர்.எஸ்.,) சந்தேகம் தரும் வகையில் உள்ளது. அதில் நம்பகத் தன்மை அற்றது என அவுஸ்ரேலிய அணி கப்டன் மைக்கல் கிளார்க் தெரிவித்தார்.

இங்கிலாந்தில் நடைபெற்ற ஆஷஸ் டெஸ்ட் குறித்து கிளார்க் தனது பார்வைகளை உள்ளடக்கிய புதக்கம் ஒன்றை நேற்று முன்தினம் சிட்னியில் வெளியிட்டு வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் ஸ்ருவெரட் புரொட், துடுப்பில் பந்து பட்டது தெளிவாகத் தெரிந்தது. சரி, துடுப்பில் படவில்லை எனில், பந்து கால் காப்பில் பட்டிருக்கும்.

அப்படியெனில் அவரை எல்.பி.டபிள்யு., முறையில் வெளியேற்றி இருக்கவேண்டும். இதற்கு நடுவர்கள் ஆட்டமிழப்புக் கொடுக்கவில்லையெனில், தொழில் நுட்பத்தை பயன்படுத்தி உறுதி செய்திருக்க வேண்டும்.

அணியின் கப்டன் என்ற முறையில், தொழில் நுட்பத்தை பயன்படுத்தி சரியான முடிவுகளை பெற வேண்டும் என்று தான் நானும் விரும்புகிறேன். இதை விட்டு விட்டு எத்தனை முறையீடு வாய்ப்புகள் உள்ளன அல்லது இல்லை என்று பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. ஒரு வேளை தொழில்நுட்பம் சரியில்லை எனில், இதை பயன்படுத்தக் கூடாது. ஹட் ஸ்பொட் முறையை உருவாக்கிய வாரன் பிரென்னன் கூட, அனைத்தையும் கண்டுபிடிக்க முடியாது என்பதைஒத்துக் கொண்டுள்ளார். இதனால், முழுமையான நம்பிக்கை வரும் வரை இம்முறையை நிறுத்தி வைக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.




# ஜோகோவிச் சம்பியன்

(லண்டன்)

உலக டூர் இறுதி ரென்னிஸ் போட்டித் தொடரில் சேர்பியா வீரர் ஜோகோவிச் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டார். உலக டூர் இறுதி ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் லண்டனில் நடைபெற்றது. இதில் நோவக் ஜோகோவிச் மற்றும் ஸ்பெயினின் ரபேல் நடால் ஆகியோர் மோதினர்.

ஆரம்பம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோகோவிச் 6-3, 6-4 என்ற செட் கணக்கில் நடாலை வீழ்த்தி கிண்ணத்தை வென்றார். கடந்த ஆண்டும் ஜோகோவிச் கிண்ணத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒக்ரோபரில் தனது முதல் இடத்தை நடாலிடம் இழந்த ஜோகோவிச் இந்தப் போட்டியில் நடாலை வீழ்த்தி தனது திறமையை நிரூபித்துள்ளார்.

# அணியில் சமநிலை தேவை


அணியில் இளைய வீரர்களும் அனுபவ வீரர்களும் இணைந்த சமநிலை தேவை என இலங்கை கப்டன் மத்தியூஸ் தெரிவித்துள்ளார். நியூசிலாந்து அணி இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் கொண்ட தொடரில் பங்குபற்றிவரும் நிலையில், இத் தொடரின் முதலாவதுபோட்டி மழை காரணமாக கைவிடப்பட்டிருந்தது. இந்தத்தொடரை வெல்வதே இலங்கை அணியின் முக்கியமான நோக்கமாக உள்ளதாகவும் முதலிரு போட்டிகளையும் வென்று தொடரைக் கைப்பற்றினால் மூன்றாவது போட்டியில் இளைய வீரர்கள் அநேகருக்கு வாய்ப்பு வழங்கப்படுவதைப் பற்றி ஆராயப்படுமெனவும் மத்தியூஸ் முன்னர் தெரிவித்திருந்தார். தற்போது முதலாவது போட்டி முடிவின்றிக் கைவிடப்பட்டதால் இளைய வீரர்கள் தொடர்பான திட்டங்கள் மாற்றமடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். முதலில் இத்தொடரை வெல்வதே தங்களது முக்கிய நோக்கமாக உள்ளதாகக் குறிப்பிட்ட மத்தியூஸ், அதற்காக அடுத்த 2 போட்டிகளையும் நிச்சயமாக வெல்ல வேண்டியுள்ளதாகக் குறப்பிட்டார். இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் டில்சான், மஹேல ஜெயவர்த்தன, குமார் சங்கக்கார ஆகியோரைத் தவிர ஏனைய வீரர்கள் அனைவரும் இளைய வீரர்களாகவே ஏற்கனவே உள்ளதாகக் குறிப்பிட்ட அவர், அணியில் இளைய வீரர்களும் அனுபவ வீரர்களும் இணைந்த சமநிலை தேவைப்படுவதாகக் குறிப்பிட்டார்.

# இரசிகர்கள் பெரும் ஏமாற்றம்

சச்சின் டெண்டுல்கர் தனது 200ஆவது டெஸ்ட் போட்டியுடன் கிரிகெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுகிறார். இந்தப் போட்டி அவரது சொந்த ஊரான மும்பையில் உள்ள வாண்கடே மைதானத்தில் மே.தீவுகள் அணிக்கு எதிராக வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியைக் காண இரசிகர்கள் மிகுந்த ஆர்வத்தில் உள்ளனர். ஆனால் 3500 நுழைவுச் சீட்டுக்கள் மட்டுமே இரசிகர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. நேற்றுக் காலை 11 மணிக்கு ஓன்லைனில் டிக்கெட் விற்பனை ஆரம்பமானசில நிமிடங்களில்இணையத்தளமே முடங்கியது. நுழைவுச் சீட்டு விற்பனையும் முடிந்தது. இதனால் இரசிகர்கள் பெரும் ஏமாற்றமடைந்தனர்.வாண்கடே மைதானத்தில் மொத்தம் 33ஆயிரம் பேர் அமர்ந்து போட்டியைப்பார்க்க முடியும் ஆனால் பொதுமக்களுக்கு 20 சதவீதத்திற்கும் குறைவான நுழைவுச் சீட்டுக்களே ஒதுக்கப்பட்டுள்ளன. இது இரசிகர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. மேலும் கூடுதல் நுழைவுச்சீட்டுக்களை ஒதுக்க வேண்டும் என்று இரசிகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சகாப்தத்திற்கு சமர்ப்பணம்



▼ 1990ஆம் ஆண்டு இங்கிலாந்து தொடரை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பிய போது, மும்பை விமான நிலையத்தில் தனது காதல் மனைவி அஞ்சலியை முதல்முறையாக சந்தித்தார். அப்போது டெண்டுல்கரின் வயது 17.

▼ 1990ஆம் ஆண்டு மான்செஸ்டரில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் தனது கன்னி சதத்தை அடித்து அணியை தோல்வியில் இருந்து காப்பாற்றிய டெண்டுல்கருக்கு முதல்முறையாக ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது. விருதுடன் கிடைத்த சாம்பெய்ன் உற்சாக பானத்தை நீண்ட காலமாக பத்திரமாக வைத்திருந்தார். கடைசியாக 8 ஆண்டுகளுக்கு பிறகு மகள் சாராவின் முதலாவது பிறந்த நாள் விழாவில் தான் அந்த சாம்பெய்ன் பாட்டில் திறக்கப்பட்டது.

▼1992ஆம் ஆண்டு, இங்கிலாந்தின் கவுண்டி அணியான யார்க்ஷைர் அணிக்காக விளையாடிய முதல் வெளிநாட்டு வீரர்.

கிரிக்கெட் வரலாற்றில் 3ஆவது நடுவர் மூலம் அவுட் வழங்கப்பட்ட முதல் வீரர் டெண்டுல்கர் தான். 1992ஆம் ஆண்டு கேப்டவுனில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அவர் ரன்அவுட் செய்யப்பட்ட போது, டி.வி. ரீப்ளே உதவியுடன் 3ஆவது நடுவர் தீர்ப்பு வழங்கினார்.

▼எவ்வளவோ சாதனைகளை படைத்த போதிலும், கிரிக்கெட்டின் மெக்கா என்று அழைக்கப்படும் புகழ்பெற்ற லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் சதம் அடித்ததில்லை.

▼அவுஸ்ரேலியாவின் சிட்னி கிரிக்கெட் மைதானம், அவருக்கு பிடித்த மைதானமாகும்.

▼டெண்டுல்கரின் ஆட்டத்தை வீட்டில் டி.வி.யில் பார்க்கும் அவரது மனைவி அஞ்சலிக்கு விசித்திரமான பழக்கம் உண்டு. டெண்டுல்கர் துடுப்பாட்டம் செய்து கொண்டிருக்கும் போது, அவர் எதுவும் சாப்பிடமாட்டார். ஏன் போன் வந்தால் கூட எடுக்கமாட்டாராம்.

▼1998ஆம்ஆண்டு இந்திய தொடரின் போது அவுஸ்ரேலிய வீரர் மேத்யூ ஹைடன் சொன்னது இது, நான் கடவுளை பார்க்கிறேன். அவர் இந்தியாவில் டெஸ்ட் கிரிக்கெட்டில் 4ஆவதாக துடுப்பாடுகிறார்.

▼மற்றவர்களை விட டெண்டுல்கர் மிகவும் கனமான துடுப்பையே பயன்படுத்துவார். அதன் எடை சுமார் ஒன்றரைக் கிலோ. கிரிக்கெட் உலகில் தென்னாபிரிக்காவின் குளுஸ்னர் மட்டுமே இவ்வளவு எடை கொண்ட துடுப்பை உபயோகப்படுத்தினார்.

▼இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஆலன் முல்லாலி இந்தியாவுக்கு எதிரான தனது அறிமுக டெஸ்டில் (1996), டெண்டுல்கர் மற்றவர்களை விட அகலமான துடுப்பைப் பயன்படுத்துவதாக புகார் கூறியது, சலசலப்பை ஏற்படுத்திய விடயங்களில் ஒன்று.

▼ரஞ்சி, துலீப் டிராபி, இரானி கோப்பை ஆகிய முதல் தர போட்டிகளில் அறிமுக ஆட்டத்திலேயே சதம் அடித்த ஈடுஇணையற்ற சாதனை அவரது வசம் இன்றளவும் இருக்கிறது.

▼அடையாளம் கண்டுவிடக்கூடாது என்பதற்காக ஒட்டுத்தாடி சகிதமாக மாறுவேடத்தில் 1995ஆம் ஆண்டு ரோஜா படத்தை பார்க்க ஒரு தியேட்டருக்கு சென்றார். இடைவேளையின் போது அவரது கூலிங்கிளாஸ் கீழே விழுந்ததால், அவரை இரசிகர்கள் அடையாளம் கண்டுபிடித்து மொய்த்து விட்டது வேறு கதை.

▼மராட்டியத்தில் பிரபல உணவான வடபாவ் என்றால் டெண்டுல்கருக்கு கொள்ளை பிரியம். இதை அவரே ஒரு முறை பேட்டியில் கூறியிருக்கிறார்.

| ஒருநாள் | |
|---|---|
| போட்டி | 463 |
| ரன் | 18,426 |
| அதிகம் | 200* |
| சராசரி | 44.83 |
| சதம் | 49 |
| அரை சதம் | 96 |
| பிடிகள் | 140 |
| விக்கெட் | 154 |

▼தனது பெராரி கார் விடயத்தில் தனிக்கவனம் செலுத்தும் டெண்டுல்கர், அதை மனைவி அஞ்சலியை கூட ஓட்ட அனுமதிப்பதில்லை.

▼விமானத்துறை பின்னணி ஏதுமின்றி இந்திய விமானப்படை பிரிவில் ரேங்க் ஆப் குரூப் கப்டன் என்ற கௌரவ அந்தஸ்து பெற்ற முதல் வீரர் இவர் தான்.

▼1995ஆம் ஆண்டு அக்ரோபர் மாதம்,வேர்ட் டெல் நிறுவனத்திற்கு 5 ஆண்டுக்கு ரூ.31.5 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட போது உலகின் பணக்கார கிரிக்கெட் வீரர் என்ற அரியணையில் ஏறினார்.

▼மத்திய அரசின் உயரிய விருதுகளான ராஜீவ் காந்தி கேல் ரத்னா, அர்ஜுனா, பத்மஸ்ரீ ஆகிய மூன்று விருதுகளையும் பெற்ற ஒரே கிரிக்கெட் வீரர்.

▼1996ஆம் ஆண்டு உலக கோப்பை போட்டி தொடங்கும் வரை அவர் துடுப்பில் எந்த விளம்பரமும் இன்றியே விளையாடினார்.

▼ ஜோன் மெக்கன்ரோ, பீட்சாம்ப்ராஸ், போரிஸ் பெக்கர், மரடோனா, சுனில் கவாஸ்கர், இம்ரான் கான், விவியன் ரிச்சர்ட்ஸ் உள்ளிட்டோர் டெண்டுல்கரின் விளையாட்டு முன்மாதிரிகள்.

▼ மனம் கவர்ந்த நடிகர் இந்தி சூப்பர் ஸ்டார் அமிதாப்பச்சன்.

▼டெண்டுல்கர் கார் பந்தயத்தின் தீவிர இரசிகர். 2011ஆம்ஆண்டு டில்லியில் நடந்த பார்முலா 1 கார்பந்தயத்தில், வெற்றியாளர் இலக்கை கடந்ததை குறிக்கும் வகையிலான கொடியை அசைக்கும் கௌரவம் கிடைத்தது.

▼கிரிக்கெட்டின் பிதாமகன் அவுஸ்ரேலியாவின் டொன் பிரட்மன், டெண்டுல்கர் விளையாடும் ஸ்டைல் அப்படியே நான் ஆடுவது போன்றே இருக்கிறது என்று புகழ்ந்து தள்ளியதுடன் அவரை நேரில் அழைத்தும் உச்சிமுகர்ந்தார். தனது கனவு டெஸ்ட் அணியில் இந்த தலைமுறை வீரர்களில் டெண்டுல்கருக்கு மட்டுமே இடம் வழங்கியிருந்தார்.

▼இளைஞர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்ற கொள்கையுடைய டெண்டுல்கர், மதுபானம், புகையிலை விளம்பரங்களில் ஒரு போதும் நடித்தது கிடையாது.

▼விளையாடிக் கொண்டிருக்கும்போதே, டில்லி மேல்சபை எம்.பி.யாக நியமிக்கப்பட்ட முதல் இந்தியக் கிரிக்கெட் வீரர் என்ற மகிமை உண்டு.

▼உடல் முழுவதும் மூவர்ண நிறத்தை தீட்டி, அதில் டெண்டுல்கரின் பெயரை எழுதியபடி, சங்கு ஊதிக்கொண்டு மைதானத்தில் ஆர்ப்பரிக்கும் ஒரு புதுமையான இரசிகரை நீங்கள் அடிக்கடி பார்த்து இருப்பீர்கள்.

பீகாரை சேர்ந்த அவரது பெயர் சுதிர் குமார் சவுத்ரி. டெண்டுல்கரின் தீவிர இரசிகர்களில் அவரும் ஒருவர். போட்டியை பார்க்க அவருக்கு வீரர்கள் டிக்கெட் கொடுத்து உதவுவது உண்டு.

2011ஆம் ஆண்டு உலக கோப்பையை வென்ற போது அவரை ஓய்வறைக்கு வரவழைத்து அவரது கையில் உலக கோப்பையை கொடுத்து நெகிழ வைத்தார், டெண்டுல்கர்.

(முற்றும்)

## ஒரு நாள் போட்டியில் பெற்ற சதங்கள்

| இல: | சதம் | எதிரணி | மைதானம் | திகதி | போட்டிமுடிவு |
|---|---|---|---|---|---|
| 01) | 110 | அவுஸ்ரேலியா | கொழும்பு | 09-09-1994 | வெற்றி |
| 02) | 115 | நியூசிலாந்து | ஐ.பி.சி.எல். அரங்கு | 28-10-1994 | வெற்றி |
| 03) | 105 | மே.தீவுகள் | ஜெய்ப்பூர் | 11-11-1994 | வெற்றி |
| 04) | 112 | இலங்கை | சர்ஜா | 09-04-1995 | வெற்றி |
| 05) | 127* | கென்யா | கற்றாக் | 18-02-1995 | வெற்றி |
| 06) | 137 | இலங்கை | புதுடில்லி | 02-03-1996 | தோல்வி |
| 07) | 100 | பாகிஸ்தான் | சிங்கப்பூர் படாங் | 05-04-1996 | தோல்வி |
| 08) | 118 | பாகிஸ்தான் | சர்ஜா | 15-04-1996 | வெற்றி |
| 09) | 110 | இலங்கை | கொழும்பு | 28-08-1996 | தோல்வி |
| 10) | 114 | தென்னாபிரிக்கா | மும்பை | 14-11-1996 | வெற்றி |
| 11) | 104 | சிம்பாப்வே | பேனோனி | 09-02-1997 | வெற்றி |
| 12) | 117 | நியூசிலாந்து | பெங்களூர் | 14-05-1997 | வெற்றி |
| 13) | 100 | அவுஸ்ரேலியா | கான்பூர் | 07-04-1998 | வெற்றி |
| 14) | 143 | அவுஸ்ரேலியா | சர்ஜா | 22-04-1998 | தோல்வி |
| 15) | 134 | அவுஸ்ரேலியா | சர்ஜா | 24-04-1998 | வெற்றி |
| 16) | 100* | கென்யா | கொல்கத்தா | 31-05-1998 | வெற்றி |
| 17) | 128 | இலங்கை | கொழும்பு | 07-07-1998 | வெற்றி |
| 18) | 127* | சிம்பாப்வே | புளவையோ | 26-09-1998 | வெற்றி |
| 19) | 141 | அவுஸ்ரேலியா | டாக்கா | 28-10-1998 | வெற்றி |
| 20) | 118* | சிம்பாப்வே | சர்ஜா | 08-11-1998 | வெற்றி |
| 21) | 124* | சிம்பாப்வே | சர்ஜா | 13-11-1998 | வெற்றி |
| 22) | 140* | கென்யா | பிரிஸ்ரோல் | 23-05-1999 | வெற்றி |
| 23) | 120 | இலங்கை | கொழும்பு | 29-08-1999 | வெற்றி |
| 24) | 186* | நியூசிலாந்து | ஹைதராபாத் | 08-11-1999 | வெற்றி |
| 25) | 122 | தென்னாபிரிக்கா | ஐ.பி.சி.எல். அரங்கு | 17-03-2000 | வெற்றி |
| 26) | 101 | இலங்கை | சர்ஜா | 20-10-2000 | தோல்வி |
| 27) | 146 | சிம்பாப்வே | ஜெய்ப்பூர் | 08-12-2000 | தோல்வி |
| 28) | 139 | அவுஸ்ரேலியா | நேரு அரங்கு | 31-03-2001 | வெற்றி |
| 29) | 122* | மே.தீவுகள் | ஹராரே | 04-07-2001 | வெற்றி |
| 30) | 101 | தென்னாபிரிக்கா | ஜொகன்ஸ்பேர்க் | 05-10-2001 | தோல்வி |
| 31) | 146 | கென்யா | பார்ல் போலண்ட் | 24-10-2001 | வெற்றி |
| 32) | 105* | இங்கிலாந்து | றிசேவ்ட் | 04-07-2002 | - |
| 33) | 113 | இலங்கை | பிறிஸ்டோல் | 11-07-2002 | வெற்றி |
| 34) | 152 | நபிபியா | சிற்றி ஓவல் | 23-02-2003 | வெற்றி |
| 35) | 100 | அவுஸ்ரேலியா | கௌவர் றூப் சிங் | 26-10-2003 | வெற்றி |
| 36) | 102 | நியூசிலாந்து | ஹைதாரபாத் | 15-11-2003 | வெற்றி |
| 37) | 141 | பாகிஸ்தான் | ராவல்பிண்டி | 16-03-2004 | தோல்வி |
| 38) | 123 | பாகிஸ்தான் | அகபமதாபாத் | 12-04-2005 | தோல்வி |
| 39) | 100 | பாகிஸ்தான் | பெசாவார் | 06-02-2006 | தோல்வி |
| 40) | 141* | மே.தீவுகள் | கோலாலம்பூர் | 14-09-2006 | தோல்வி |
| 41) | 100 | மே.தீவுகள் | கோலாலம்பூர் | 31-01-2007 | வெற்றி |
| 42) | 117 | அவுஸ்ரேலியா | ஐ.பி.எல்.சி. அரங்கு | 02-03-2008 | வெற்றி |
| 43) | 163* | நியூசிலாந்து | கிறிஸ்ரிசேர்ஸ் ஏ.எம்.ஐ. | 08-03-2009 | வெற்றி |
| 44) | 138 | இலங்கை | கொழும்பு | 14-09-2009 | வெற்றி |
| 45) | 175 | அவுஸ்ரேலியா | ஹைதாரபாத் | 05-11-2009 | தோல்வி |
| 46) | 200* | தென்னாபிரிக்கா | கௌவியர் | 24-02-2010 | வெற்றி |
| 47) | 120 | இங்கிலாந்து | பெங்களூர் | 27-02-2011 | சமநிலை |
| 48) | 110 | தென்னாபிரிக்கா | நாக்பூர் | 12-02-2011 | தோல்வி |
| 49) | 114 | பங்களாதேஷ் | மிர்பூர் | 16-02-2012 | தோல்வி |

## ஓவ்வொரு நாடுகளுக்கும் எதிராக பெற்ற சதங்கள்

| நாடுகள் | டெஸ்ட் | ஒரு நாள் | மொத்தம் |
|---|---|---|---|
| அவுஸ்ரேலியா | 11 | 09 | 20 |
| இலங்கை | 09 | 08 | 17 |
| தென்னாபிரிக்கா | 07 | 05 | 12 |
| இங்கிலாந்து | 07 | 02 | 09 |
| நியூசிலாந்து | 04 | 05 | 09 |
| சிம்பாப்வே | 03 | 05 | 08 |
| மே.தீவுகள் | 03 | 04 | 07 |
| பாகிஸ்தான் | 02 | 05 | 07 |
| பங்களாதேஷ் | 05 | 01 | 06 |
| கென்யா | 00 | 04 | 04 |
| நமிபியா | 00 | 01 | 01 |
| மொத்தம் | 51 | 49 | 100 |

# காய்கறிகளை எப்படிப் பார்த்து வாங்குவது?

**மு**ருங்கைக்காய்: முருங்கைக்காயை சற்றே முறுக்கிப் பார்த்து வாங்க வேண்டும். முறுக்கும்போது நன்றாக வளைந்து கொடுத்தால் காய் முற்றவில்லை என்று தெரிந்து கொள்ளலாம்.

**கோலிஃப்ளவர்:** கோலிஃப்ளவர் வாங்கும்போது பூக்களுக்கு இடையே இடைவெளி இல்லாமல் அடர்த்தியாக இருப்பதாகப் பார்த்து வாங்க வேண்டும். இதில்தான் காம்புகளும் தடிப்பாக இருக்காது.

**மாங்காய்:** மாங்காயை காதருகே வைத்து தட்டிப் பாருங்கள். தேங்காயில் வருவது போலப் பெரிதாகச் சத்தம் வர வேண்டும். அதில்தான் கொட்டை சிறிதாக இருக்கும்.

**கோவைக்காய்:** பொரியல் செய்யப் பயன்படுத்தும் கோவைக்காய்களை முழுக்க பச்சை நிறத்தில் இருந்தால் மட்டும் வாங்குங்கள். கோவைக்காயில் ஆங்காங்கே லேசாக சிவப்பு இருந்தால் அது உடனே பழுத்துவிடும். ருசியும் குறைவாகத்தான் இருக்கும்.

**சர்க்கரை வள்ளிக் கிழங்கு:** சர்க்கரை வள்ளிக் கிழங்கு வாங்கும்போது ஆங்காங்கே அடிபட்டு கறுப்பாகி இருப்பதை தவிர்த்து வாங்குங்கள். இது கசக்கும். உருண்டையான கிழங்குகள்தான் அதிகம் இனிக்கும்.

**பூண்டு:** பூண்டை வாங்கும்போது பல் பல்லாக வெளியே தெரிவதையே வாங்க வேண்டும்.

**அவரை:** நாட்டு அவரையைத் தொட்டுப் பார்த்து விதைகள் பெரிதாக இருக்கும் காய்களைத் தவிர்க்கவும். இளசாகப் பார்த்து வாங்கினால்தான் நார் அதிகமாக இருக்காது.

**உருளைக் கிழங்கு:** இந்தக் கிழங்கு முளை விடாமல் பச்சை, பச்சையாக நரம்பு ஓடாமல் இருக்க வேண்டும். லேசாகக் கீறினாலே தோல் உடனே கையோடு பெயர்ந்து வர வேண்டும்.

**கருணைக் கிழங்கு:** கருணைக் கிழங்கை முழுசாக வாங்கும்போது பெரியதாக வாங்குவது நல்லது. வெட்டிய கிழங்கை வாங்கும்போது அதன் உள்பகுதி இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள்.



**பெரிய வெங்காயம்:** பெரிய வெங்காயம் வாங்கும்போது அதன் மேல் பகுதியில் இருக்கும் தண்டுப் பகுதி பெரிதாக இல்லாமல் பார்த்து வாங்க வேண்டும்.

**பச்சை மிளகாய்:** நீளமான பச்சை மிளகாயில் சற்றே காரம் குறைவாக இருக்கும். சற்றே குண்டான பச்சை மிளகாயில் காரம் அதிகமாக இருக்கும். இதை சமையலில் சேர்க்கும்போது வாசனையும் பிரமாதமாக இருக்கும்.

**பீர்க்கங்காய்:** பீர்க்கங்காயை அடிப்பகுதி குண்டாக இல்லாமல் காய் முழுவதும் ஒரே அளவில் இருக்கும்படி பார்த்து வாங்க வேண்டும்.

**கத்தரிக்காய்:** பெரிய கத்தரிக்காய் வாங்கும்போது தோல் மென்மையாக இருக்கிறதா என்று பார்த்து வாங்க வேண்டும். முற்றல் கத்தரிக்காயின் தோல் உரப்பாக இருக்கும்.

**புடலங்காய்:** புடலங்காயைக் கெட்டியாக இருப்பதாகத் தான் வாங்க வேண்டும். அதில்தான் விதைப்பகுதி குறைவாகவும் சதைப் பகுதி அதிகமாகவும் இருக்கும்.

**பூசனிக்காய்:** பூசனிக்காயைப் பொறுத்தவரை உள்ளே இருக்கும் விதைகள் முற்றியதாகப் பார்த்து வாங்குவதுதான் நல்லது.

**தக்காளி:** நன்றாக சிவந்த தக்காளிகளாகப் பார்த்து வாங்க வேண்டும்.

**வாழைத்தண்டு:** பொரியலுக்கும் சூப்புக்கும் பயன்படும் வாழைத் தண்டின் அடிப்பகுதியில் நார் அதிகமாக இருக்கும் என்பதால் மேல் பகுதியாகப் பார்த்து வாங்குங்கள். உள்ளிருக்கும் தண்டுப் பகுதி சிறுத்து இருப்பதாக பார்த்து வாங்கினாலே போதும்.

**முள்ளங்கி:** முள்ளங்கியை லேசாகக் கீறிப்பார்த்தால் தோல் மென்மையாக இருக்க வேண்டும். அதுவே இளசு.

**வெள்ளரி:** வெள்ளரிக்காயின் மேல் நகத்தால் குத்திப் பார்த்தால் நகம் உள்ளே இறங்க வேண்டும். அப்படிப் பட்ட காய்களில்தான் விதைகள் குறைவாக இருக்கும்.

**பாவற்காய்:** பெரிய பாவற்காயைப் பொறுத்தவரை உருண்டையான காய்களை வாங்குவதைவிட தட்டையான நீண்ட காய்களாகப் பார்த்து வாங்க வேண்டும்.

**வாழைப்பூ:** வாழைப்பூவின் மேல் இதழைப் பிரித்தால் பூக்கள் கறுப்படிக்காமல் வெள்ளை நிறத்தில் இருந்தால்தான் அது புத்தம் புதுசாக இருக்கிறது என்று அர்த்தம்.

**இஞ்சி:** லேசாகக் கீறிப்பார்த்தால் தோல் பெயர்ந்து வருவது மாதிரியே இருக்க வேண்டும். அப்போதுதான் நார்ப்பகுதி குறைவாக இருக்கும். இஞ்சி சமையலில் சேர்க்க நன்றாகவும் இருக்கும்.

## குறுகியநேர-திட்டமிடல்



**தி**னமும், இரண்டு மணி நேரம் திட்டமிட்டு வாழுங்கள். பத்திரிகை படிக்க, கடிதங்கள் எழுத, புத்தகங்களை ஒழுங்கு செய்ய, இப்படி இன்னன்ன காரியங்களை, இத்தனை நிமிடங்களில் செய்து முடிப்பது என்று காகிதத்தில் குறித்து வைத்து, ஒன்றன் பின் ஒன்றாக அவற்றை செய்து முடியுங்கள்.

ஏதாவதொரு வேலை பாதி முடிந்திருந்தால், அதை நீட்டிக்கக் கூடாது. அப்படியே நிறுத்திவிட்டு, குறித்து வைத்துள்ள அடுத்த வேலையில் குதியுங்கள். ஒரு நாளில் இரண்டு மணி நேரத்தை இவ்வாறு ஒழுங்கு செய்து கொள்ளப் பழகியவுடன், கொஞ்சம் கொஞ்சமாக நாலு, ஆறு, எட்டு மணி நேரத்திற்கும், பின், நாள் முழுமைக்குமே திட்டமிட்டு வேலைகள் செய்யலாம்.

நேரத்தின் அருமை தெரியாமல் பழங்கதை பேசி நேரத்தை வீணடிப்பதும், அரை நாள் வேலையை அரைமணி நேரத்தில் முடிக்கப் பறக்கும் பைத்தியக்காரத் தனத்தையும் போக்கிக் கொள்ள இந்த முயற்சி உதவும்! நாள் முழுமைக்கும், திட்டமிடுவது முடியக்கூடியதும் அல்ல; விரும்பத்தக்கதும் அல்ல. ஆனால், நடுநடுவே இப்படி செய்து கொண்டால், வீணாகும் நேரத்தைப் பயனுள்ளதாக செலவழிக்கலாம்.

- How to Win நூலிலிருந்து...

## கடல் செய்திகள்

• நமது பூமியின் மேடான இரு பக்கங்களை நோக்கி சூரியனும் நிலவும் கடலை இழுப்பதால்தான் உயர்வாகவும் தாழ்வாகவும் அலைகள் எழும்பி கடல் உள்ளும் வெளியுமாக அலைபாய்கிறது.

• அனைத்து கடலோரக் கரைகளையும் ஒன்றிணைத்து நேராக்கினால் பூமியை 13 முறை சுற்றி வளைக்கமுடியும்.



• பெரும்பாலும் கடற்கரை மணல், மஞ்சளாகவோ வெள்ளையாகவோதான் இருக்கும். சில இடங்களில் எரிமலை குழம்பாகவோ அல்லது கரியினாலோ ஆகியிருந்தால் அம்மணல் கறுப்பாக இருக்கும்.

• சீற்றமான கடல் அலைகள் கரையை நோக்கிப் பாயும் போது அந்த அலைகளின் மேலிருக்கிற வெண்மையான நுரை, பார்ப்பதற்கு வெள்ளை குதிரைகள் கடலில் நீந்துவது போல் இருக்கும்.

# வடதுருவம் செல்லுங்கள்!

**வா**ழ்க்கையில் வாய்ப்பு கிடைத்தால்... ஒரு முறை அண்டார்டிகாவையும், ஆர்க்டிக் கடல் பிரதேசத்தையும் கண்டுகளித்து விட வேண்டும். அப்போதுதான் இயற்கையின் வித்தியாசமான பரிமாணத்தை நம்மால் உணர இயலும்.

அதிலும் ஆர்க்டிக் கடல் தனியாக செல்ல இயலாத பூமி...

நோர்வே நாட்டிற்கு சென்று அங்குள்ள பெர்ஜின் பகுதியை அடைந்து அங்கிருந்து கப்பலில் 12 நாள் பயணம் செய்ய வேண்டும். தலைநகர் ஒஸ்லோவில் உள்ள தேசிய புவியியல் சுற்றுலா கப்பல் மூலமும் ஆர்க்டிக் கடலுக்கு சென்று வரலாம்.

பயணத்தின்போது 5 நாட்களுக்கு முழுமையாகத் தொலைத்தொடர்பு வசதிகள் கிடையாது. மொபைல்... இன்டர்நெட் என எதுவும் வேலை செய்யாது.

கம்பூட்... கைகிளவுஸ், மாத்திரை மருந்துகள்.. குளிர் புகாத அளவில் உள்ள ஆடைகள்... குளிர்ந்த பகுதியை அடையும்போது விறைத்துப் போகாமல் இருக்க 5 ஆடைகளை ஒன்றின் மீது ஒன்று அணியும் நிலையும் வரலாம். வடதுருவத்தில் எத்தனை தூரம் செல்ல அனுமதி உண்டோ அத்தனை தூரம் வரை இந்த கப்பல் அழைத்துச் செல்லும்!

பிரம்மாண்ட பனிப்பாறைகளை நாம் கேள்விப்பட்டிருக்கலாம்! அதேபோன்று கடல் மட்டத்திற்கு ஈடாக மிதந்து செல்லும் ஐஸ் தகடுகள் ஆச்சரியமானவை.. காட்டிற்குச் சென்றால் மிருகங்களை எப்படி நம் கண்கள் தேடுமோ, அதேபோன்று இங்கு கடல் சிங்கம் மற்றும் பனிக் கரடிகளைத் தேடுவோம். இந்த ஐந்து



நாட்களும் தூக்கம் இருக்காது. இதற்கு முதற் காரணம். இருட்டே வராது. அடுத்து எந்த நிமிடமும் நாம் ஏதாவது அதிசயத்தை காண வேண்டி வரலாம் என்ற ஆர்வமே முக்கிய காரணமாம்.

சில இடங்களில் மணிக்கு 120 கி.மீ. வேகத்தில் குளிர் காற்று வீசும்... இங்கு நீள திமிங்கலத்தை காணும் வாய்ப்பு கிட்டலாம். ஸ்குவாஸ் என்ற அபூர்வ புத்திசாலிப் பறவையைக் காணலாம்.

சூரியனை அறவே மறைக்கும் மற்றும் பொதுவான கூலிங் கிளாஸ்கள் கட்டாயம் தேவை. இல்லாவிடில் வெள்ளை வெளேர் பூமி, நம் கண்களைச் சில நிமிடங்களிலேயே எரிய வைத்து விடும்...

கமெராவுடன் எடுத்துச் செல்லப்படும் பற்றரி, கடும் பனியினால், வேலை செய்யாமல் போகலாம். ஆக மேலதிக பற்றரியும் எடுத்துச் செல்ல வேண்டும். நடுவில் நடைபாதைப் பயணமும் உண்டு. ரெயின்டீரில் பயணமும் உண்டு.

சீதோஷ்ண நிலை, எதிர்பார்த்துச் செல்வதை விட, சில நேரங்களில் மேலும் கடுமையாக மாறலாம்.. கடும் குளிர் வீசலாம். கடல் பிராணிகளினால் எதிர்பாராத தாக்குதல்கள் நடக்கலாம்.

ஆனால் இவற்றை எதிர்கொண்டு, அதேசமயம் வித்தியாசமான அனுபவத்தை பெற... செவ்வாய் கிரகம் இருக்கட்டும். முதலில் ஆர்க்டிக் சென்று பாருங்கள்.

# சினிமா சினிமா



★ சில வருடங்களுக்கு முன்பு வெளிவந்து பரவலான பாராட்டுக்களைப் பெற்ற "காமராஜ்" படம் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் மீண்டும் வருகிறது. 15 புதிய காட்சிகள் படத்தில் இணைக்கப்பட்டுள்ளன. காமராஜராக நடித்த ரிச்சர்ட் மதுரம் இறந்து விட்டதால் அவரது மகன் பிரதீப் மதுரம் காமராஜராக நடித்திருக்கிறார். பெரியார் வேடத்தில் விஜயகுமார் நடித்துள்ளார்.

★ சித்தார்த்தை ரகசியத் திருமணம் செய்து, தனிக்குடித்தனம் நடத்தி வருவதாக, சமந்தாவைப் பற்றி, டோலிவுட்டில் மீண்டும் "கிசுகிசு" பரவியுள்ளது. காதல் செய்தி பரவிய போது கூட, பெரிதாக அலட்டிக் கொள்ளாத சமந்தா, திருமணச் செய்தி, தன் திரைவாழ்க்கைக்கு உலை வைத்து விடுமோ என்று அதிர்ச்சியடைந்துள்ளார். அதனால், அவரே சில மீடியாக்களை தொடர்பு கொண்டு, அவசர அவசரமாக, மறுப்பு செய்தி வெளியிட்டு வருகிறார்.

★ தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக இருந்த ஒருவர் தற்போது ஓய்வு பெற வேண்டும் என்றால் யார் பெயரைச் சொல்வீர்கள்? என்று காஜல் அகர்வாலிடம் நிருபர் கேட்டதற்கு, உடனடியாக ஸ்ரேயா பெயரைக் குறிப்பிட்டு பிரச்சினையில் சிக்கி இருக்கிறார் காஜல்..காஜலின் இந்தக் கருத்துப் பற்றி அறிந்த ஸ்ரேயா தன் டுவிட்டர் பக்கத்தில் பதில் எதுவும் சொல்லாமல் நோ கொமெண்ட்ஸ் என்றிருக்கிறார். ஆனால் ஸ்ரேயா அதிர்ச்சியில் இருப்பதாக அவரது வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

★ ஷங்கர் இயக்கத்தில் சிவாஜி மற்றும் எந்திரன் படங்களை பார்த்து, "என்னவொரு ஸ்டைல், என்னவொரு ஸ்பீட்..." என்று ரஜினியை பற்றியே பேசிவரும் எமி ஜாக்சன், "இவருடன் ஒரு படத்திலேனும் நடிக்காமல், நான் லண்டனுக்கு திரும்ப மாட்டேன்..." என்று கூறியுள்ளாராம்.

★ "ஜெயம்", "சந்தோஷ் சுப்ரமணியம்", "உனக்கும் எனக்கும்", "தில்லாலங்கடி" போன்ற படங்களை இயக்கியவர் ராஜா. ஹிந்தியில் படம் இயக்கும் முடிவில் இருந்த ராஜா, திடீரென்று அந்த முடிவை கைவிட்டு, தமிழ்ப் படம் ஒன்றில் ஹீரோவாக நடிக்கிறார். புதுமுக இயக்குநர் குரு ரமேஷ் இயக்கத்தில் "என்ன சத்தம் இந்த நேரம்" படத்தில் ஹீரோக்களில் ஒருவராக நடிக்கிறார்.

★ "சுப்ரமணியபுரம்" படத்தில் ஜெய், ஸ்வாதி ஜோடியாக நடித்தனர். இப்படம் வெற்றி பெற்றது. அதன் பிறகு, நடிக்க ஆர்வமில்லை என்று சிலகாலம் விலகி இருந்தார் ஸ்வாதி. இப்போது "இதற்குதானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா" படம் அவருக்கு நல்ல வரவேற்பை கொடுத்திருக்கிறது. இந்நிலையில் ஜெய் - ஸ்வாதி ஜோடி "வடகறி" படத்தில் இணைகிறது. மீண்டும் ஜெய்யுடன் இணைந்து நடிப்பது பல நினைவுகளைத் தூண்டுவதாக ஸ்வாதி தெரிவித்திருக்கிறார்.

★ அக்கா வேடம் என்றாலே ஹீரோயின்கள் தயங்கும் தருணத்தில் 6 தங்கைகளின் அக்காவாக நடிக்க வந்த வாய்ப்பை ஏற்றிருக்கிறார் பார்வதி. ஹீரோ பிருத்விராஜ். மலையாளத்தில் பாராட்டுகள் பெற்ற பல படங்களை இயக்கிய விமல் இப்படத்தை எழுதி, இயக்குகிறார்.

★ "பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் என் பொக்கெற் செலவுக்காக பணம் சம்பாதிக்க எண்ணினேன். அந்த நோக்கத்தில்தான் முதல் படத்தை தமிழில் நடிக்க ஒப்புக் கொண்டேன்..." என்று தன் டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார் "என்னமோ ஏதோ" படத்தில் கௌதம் கார்த்திக் ஜோடியாக நடிக்கும் மும்பை மொடல் ரகுல் பிரீத்தி சிங்.

★ பொலிவுட் கனவுக் கன்னியாக திகழ்ந்தவர் ஹேமமாலினி. தர்மேந்திராவின் மனைவி. இவர்களுக்கு இஷா தியோல், அஹானா தியோல் என்ற 2 மகள்கள் உள்ளனர். இஷா தமிழில் ஆய்த எழுத்தில் நடித்தவர். இவரது திருமணம் சமீபத்தில் நடந்தது. இந்தத் திருமணத்திற்கு வந்திருந்த வைபவ் என்பவரை தங்கை அஹானா பார்த்த மாத்திரத்தில் காதல் வலையில் விழுந்துவிட்டனர். அவர்கள் திருமணமும் உடனேயே முடிவாகிவிட்டது.

# உயிர் காக்கும் ஒரு பயிற்சி!

- ஜீவா -

யாருக்கு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் மாரடைப்பு வரலாம்.

முதலில் எல்லாம் வயதானவர்களுக்குத்தான் மாரடைப்பு வந்தது. இப்போது சிறுவர்களுக்கே மாரடைப்பு வந்துவிடுகிறது. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன.

நெஞ்சு வலி வந்தால் உடனே மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அங்கு தேவையான பரிசோதனைகள் செய்வார்கள்.




வாயுக்கோளாறா, அசிடிட்டியா? மாரடைப்பா? எதனால் நெஞ்சு வலி என்பது உடற் பரிசோதனைக்குப் பிறகுதான் தெரிய வரும். அதற்குப் பின்பு உரிய மருத்துவம் செய்வார்கள்.

ஆனால் நாம் என்ன செய்கிறோம்? நெஞ்சு வலி வந்தவருக்கு குடிக்கத் தண்ணீர் கொடுக்கிறோம். வாயுக் கோளாறு என்று நினைத்துக் கொண்டு சோடா கொடுக்கிறோம். மார்பில் தைலங்களைத் தடவி மசாஜ் செய்கிறோம்.

இவை தவறு. மாரடைப்பின் காரணமாக நெஞ்சு வலி வந்திருந்தால், இப்படியெல்லாம் செய்வது ஆபத்தில் முடிந்துவிடும். இரத்த ஓட்டம் தடைபட்டு இரத்தம் அங்கங்கே நின்றுவிடும்.

எனவே மாரடைப்பு ஏற்பட்டவரை அருகில் இருப்பவர்கள் உடனே மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும். விரைந்து செயல்பட வேண்டும்.

முதலில், மாரடைப்பு வருவதற்கான காரணங்களைத் தெரிந்து வைத்திருப்பது நல்லது.

மாரடைப்பு பரம்பரையாக வர வாய்ப்புண்டு. நீரிழிவு வியாதி உள்ளவர்களுக்கு மாரடைப்பு வரும். அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கும் மாரடைப்பு வரும். இப்படி உள்ளவர்கள் நெஞ்சு வலி என்று சொன்னால் மாரடைப்பு வர அவர்களுக்கு அதிக வாய்ப்புண்டு என்று தெரிந்து அருகில் உள்ளவர்கள் உஷாராகிவிட வேண்டும்.

ஒருவருக்கு உள்ள அறிகுறிகளை வைத்தும் மாரடைப்பா? இல்லையா? என்பதையும் தெரிந்து கொள்ளலாம். மாரடைப்பு ஏற்பட்டால் அதிகமாக வியர்க்கும். வாந்தி வரும். இதயத் துடிப்பு அதிகரிக்கும். படபடப்பு ஏற்படும். இடது தோள், இடது கைகளில் வலிக்கும். மூச்சுத் திணறல் ஏற்படும். சிலர் மயங்கி விழுந்துவிடுவார்கள்.

எனவே நெஞ்சு வலி என்று சொன்ன ஒருவரை உட்கார வைக்கக் கூடாது. நேராகப் படுக்க வைக்க வேண்டும். தலையை மட்டும் ஒரு பக்கம் திருப்பி வைக்க வேண்டும். ஏனென்றால் தலை நேராக இருந்தால் வாந்தி வரும்போது அது திரும்பவும் வாய்க்குள்ளே போய் மூச்சுக் குழாயை அடைத்துக் கொள்ளும் அபாயம் உண்டு.

மாரடைப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்த ஒருவர் நினைவுடன் இருக்கிறாரா? இல்லையா? என்பதைத் தெரிந்து கொள்ள அவருடைய பெயரைச் சொல்லிக் கூப்பிட வேண்டும். அதற்கு அவரிடம் இருந்து எந்த எதிர்வினையும் இல்லை என்றால் அடுத்து அவர் மூச்சு விடுகிறாரா? என்று பார்க்க வேண்டும். பிறகு கழுத்தருகே கை விரலை வைத்து அவருக்கு நாடித்துடிப்பு இருக்கிறதா? என்று பார்க்க வேண்டும்.

ஒருவேளை நாடித்துடிப்பு இல்லையென்றால், அவருடைய நெஞ்சில் கை வைத்து, செங்குத்தாக அழுத்துவதற்குத் தேவையான நிலையில் அவர் அருகே மண்டியிட்டு அமர வேண்டும்.

நடு நெஞ்சில் ஒரு கையை வைத்து, அதற்கு மேல் இன்னொரு கையை வைத்து அழுத்த வேண்டும். இவ்வாறு முப்பது தடவைகள் அழுத்த வேண்டும்.

அதற்குப் பிறகு, அவர் தலையைத் திருப்பி, அவருடைய வாயில் வாயை வைத்து மூச்சுக் காற்றை அவருடைய வாய்க்குள் இரண்டு முறை விட வேண்டும்.

மாரடைப்பு வந்தவர் மூச்சு விடுகிறாரா? என்று பார்க்க வேண்டும். மூச்சு விடவில்லை என்றால் மீண்டும் முப்பது தடவை கைகளை வைத்து அழுத்தி, இரண்டு முறை அவருடைய வாய்க்குள் மூச்சுக் காற்றை விட வேண்டும்.

அம்புலன்ஸ் வரும் வரை இந்த முதல் உதவியைச் செய்ய வேண்டும். இந்த முதல் உதவியினால் மாரடைப்பு வந்தவரின் தடைபட்ட சுவாசம் சீர்படும். இரத்த ஓட்டம் நடைபெறும். உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்து அவரை மீட்பதற்கு இந்த முதல் உதவி உதவும்.

இந்த இதய இயக்க மீட்பு உதவியை ஆங்கிலத்தில் Cardiopulmonary Resuscitation (CPR) என்பார்கள். உயிர்காக்கும் இந்தப் பயிற்சியினால் மாரடைப்பு வந்தவரைக் காப்பாற்றிவிட முடியும்.

# கட்டுடல் காட்டும் பனியன்கள்!



பெண்களின் அழகை அதிகரித்து காட்டும் வகையில், ஏராளமான உடைகள் தயாரிக்கப் படுகின்றன. இப்போது முதல் முறையாக, ஆண்களின் உடல் கட்டை அதிகரித்து காட்டும் வகையிலான உடைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவைச் சேர்ந்த, அஜ்புனு என்பவர் தயாரித்துள்ள இந்த உடை, ஆண்கள் மட்டுமே அணிந்து கொள்ளும் உள்ளாடை. இதை அணிந்து வெளியில் வந்தால், நோஞ்சான் ஆண்கள் கூட பரந்த மார்பு, விரிந்த தோள், தட்டையான வயிறு, புடைத்த புஜம் என, ஆணழகன் போட்டியில் கலந்து கொள்பவர்கள் போல் தோற்றமளிக்கின்றனர். இந்த பனியனின் விலை, 15,000 ரூபா. முதல் கட்டமாக, மிக குறைந்த எண்ணிக்கையிலேயே தயாரிக்கப்பட்டதால், அனைத்துமே விற்பனையாகி விட்டது. இப்போது, அதிக எண்ணிக்கையில் பனியன்களை தயாரித்து வருகின்றனர்.

# நிரந்தர வைத்தியர் இன்மையால் சிகிச்சை பெறமுடியாது அவலம்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நட்டாங்கண்டல் பிரதேச அரசினர் வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் கடமையில் இல்லாமையால் இப்பிரதேச மக்கள் சிகிச்சை பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வைத்தியசாலையில் ஒரு வைத்தியர் மட்டுமே பகுதிநேரமாக கடமையாற்றுவதால் இங்கு விடுதிகளிலும் வெளிநோயாளர் பிரிவுகளிலும் சிகிச்சைப் பெறும் நோயாளர்கள் சிகிச்சையை பெறமுடியாது திரும்பிச் செல்லும் அவலநிலை காணப்படுகின்றது.

இதேவேளை இவ்வைத்தியசாலையில் அவசரசிகிச்சை பெறுவதற்காக வரும் நோயாளர்கள் வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டி மூலம் நகர்ப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்படும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளதாக நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வைத்தியசாலை வீதியும் சீரற்ற நிலையில் மிக மோசமாக சேதமடைந்து காணப்படுவதாகவும் இதனூடாக நாளாந்த போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

தற்போது மழைக்காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் வைத்திய சேவைகள் மிக அவசியமாகவுள்ளதாக தெரிவிக்கும் மக்கள் இவ்வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்க துறைசார்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (140)

# மைதானப் படிக்கட்டுகள் விஷமிகளால் உடைப்பு

(குருநகர்)

குருநகர் றெக்ளமேஷன் பகுதியில் அமைந்துள்ள சென்.ஜேம்ஸ் ஆண்கள் மகாவித்தியாலய மைதான பார்வையாளர் இருக்கைப் படிக்கட்டுக்கள் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இச்செயலைக் கண்டித்து மகாவித்தியாலய மாணவர்கள் பதாகைகள் ஏந்தி ஊர்வலமாகச் சென்று கல்வித்திணைக்களத்தில் முறையிட்டதை அடுத்து திணைக்களத்தால் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் சேதமாக்கப்பட்ட மைதானத்தில் அமைந்துள்ள படிக்கட்டுக்களை பார்வையிட்டனர். எனினும் யாரால் உடைக்கப்பட்டதென்பதைக் கண்டறிய பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டிருப்பதாக அறிய வந்துள்ளது. (68)



உலகதபால் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட தபாலகங்களின் செயற்பாடுகள் குறித்த போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற யோகபுரம் மல்லாவி உபதபாலகத்தைக் காணலாம். (140)

# பரமர் சங்கமம்



'உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன்' என்னுமாப்போல தமிழர்களின் தாரதம்மியங்களை போட்டுடைத்துக் கெட்டுக் குட்டிச் சுவராகப் போகப் போகப் பண்ணிய பெருமை தமிழ் இனவாத அரசியல் வாதிகளைச் சாரும்.

திரும்பத் திரும்ப தாமே நாடாளுமன்றத்துக்குப் போகின்ற உபாயத்தை அதனால் வளர்த்துக் கொண்டதால் தமிழ் மக்களின் வாழ்க்கை அதாபாதாளத்துக்குத் தள்ளப்பட்டுள்ளதை வரலாற்றைச் சற்றே திரும்பிப் பார்த்தால் புரியும்.

1948ஆம் ஆண்டு வெள்ளையனிடம் இருந்து நாடு சுதந்திரம் அடைந்த பின்பாக உருவாக்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்தல்களில் 1956ஆம் ஆண்டு வரை எந்தவித இன வாதச் சாயங்களும் பூசப்படவில்லை. 1956இல் வாகனங்களுக்கு இலக்கம் வழங்கக் கொண்டு வரப்பட்ட சிங்களச் ஸ்ரீ குறியீட்டால் தார்பூசத் தமிழர்கள் வெளிக்கிட்டது. முள்ளி வாய்க்காலோடு முடிந்துவிட்டதாக எண்ணமுடியவில்லை.

1965ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றிய பண்டாரநாயக்க, செல்வநாயகத்துடன் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு செய்து கொண்ட உடன்படிக்கையே பண்டா செல்வா ஒப்பந்தமெனப் புகழ் பெற்றது. அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட கையோடே மட்டக்களப்புக்குப் போன செல்வநாயகம் தொண்டர்கள் மத்தியில் பேசியபேச்சுத்தான் ஒப்பந்தத்தை கிளித்தெறிய வைத்ததெண்டால் பொய்யா்ன கட்டுக் கதையல்ல.

இதுதான் தமிழர்களுக்கான முடிந்த முடிவல்ல, இதிலிருந்தே போராட்டத்துக்கான முஸ்தீபுகள் தொடங்க இருக்கின்றன. இவ்விதம் கட்சித் தொண்டர்கள் மத்தியில் குறிப்பிட்ட கருத்து சிங்கள ஊடகங்கள் ஊடாக சிங்கள மக்கள் மத்தியில் நச்சுத் தீயை வளர்த்துவிட்டது.

இத்தகைய அணுகுமுறைக் குறைபாடுகளாலேயே இலங்கையில் 1958, 1977, 1983 என இனத்துவேசத் தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. 1980களில் தோன்றிய இளைஞர் எழுட்சிக்கு தூபம் இட்டதும் தமிழ்த் தலைமைகளின் வழி நடத்தல்களெண்டால் பக்கச்சார்பான பார்வையில்லை. வளர்த்த கடாவே மார்பில் பாய்ந்ததுபோல் தமிழ் அரசியல் தலைவர்கள் இளைஞர்களாலே பலி கொள்ளப்பட்டதும் துன்பியல்.

அரைத்த மாவையே அரைக்கும் போக்கு வடமாகாண தேர்தல் வழங்கிய அங்கிகாரமாக எடுத்து சதிராட வெளிக்கிட்டுள்ளது. தமிழரசுக் கட்சியெனும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு. அதனில் எரிகின்ற நெருப்பில் குளிர்காயப்போவது அவர்களும், அவர்களின் பிள்ளைகளுமாகத்தான் இருக்கும்.

மற்றுமொரு தமிழர் அழிவுக்கு முள்ளிவாய்க்காலில் நின்று வேடிக்கை பார்த்த இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற சர்வதேசம் ஆயத்தமாவதும் அதற்கு கூட்டமைப்பினர் எண்ணெய் ஊற்ற வெளிக்கிட்டுள்ளதையும் 'உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ண' னெண்டு சொல்லலாமா சொல்லுங்கோவன் பாப்பம்....

# விழிப்புணர்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் அமைந்துள்ள நொதேன் சென்றல் வைத்தியசாலையில் நெஸ்லே கம்பனியின் ஆதரவில் நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிமுதல் 11மணி வரை நடைபெறவுள்ளது.

பிரபல வைத்திய நிபுணர்கள் தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் பொது மக்கள் கலந்து கொண்டு பயனடையுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# தண்டம் விதிப்பு

(முல்லைத்தீவு)

80கிராம் கஞ்சாவை தமது உடைமையில் வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு மாங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூவருக்கு 30,000 ஆயிரம் தண்டப்பணமும் ஒரு வருடகடூழியச்சிறையும் விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

ஆட்டோ ஒன்றில் மேற்படி கஞ்சாவைக் கடத்திச் சென்று கொண்டிருந்த வேளையிலேயே பொலிஸார் மூவரையும் கைது செய்திருந்தனர் கஞ்சாவை அழித்து விடுமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

*** *** ***

பெருமளவு கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி செய்யப்படும் உபகரணங்களை வைத்திருந்தார்கள் என குற்றஞ்சாட்டப்பட்ட 5 பேருக்கு மொத்தமாக 2 இலட்சத்து 25,000ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி கசிப்பினையும் கசிப்பு உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் அழித்துவிடுமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (170)

# 751 வழித்தட இ.போ.ச.பேருந்துகள் துறைமுக பாதையைப் பயன்படுத்தவும்

## சாலை முகாமையாளர் அறிவுறுத்து

(பருத்தித்துறை)

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் 751வழி போக்குவரத்து சேவை பருத்தித்துறையில் இருந்து புறப்பட்டு துறைமுகம் ஊடாக கடற்கரையோரமாக செல்வதற்கான பாதை அண்மையில் இராணுவத்தினால் திறந்து விடப்பட்டுள்ளது.

751 இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் இப்பாதையூடாகவே பயணிக்க வேண்டும் என சாலை முகாமையாளர் சாரதிகளுக்கு பணித்துள்ளார்.

இதேவேளை தனியார் மினி பஸ்கள் ஓராங் கட்டை சந்தியூடாக தம்பசிட்டி வீதி வழியாக வந்து நாவலடி சந்திவரை சென்று வியாபாரி மூலையில் ஏறி கடற்கரையோர பயணத்தை மேற்கொள்கின்றது.

ஏனெனில் கடந்த யுத்த காலத்தில் இச்சேவை தம்பசிட்டியூடாக சென்றமை குறிப்பிடத்தக்கது. ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத் தீர்மானத்துக்கு அமைய இராணுவத்தினர் இப்பாதையை திறந்து விட்டமையால் இ.போ.ச. பேருந்துகள் மட்டும் துறைமுகம் ஊடாகச் சென்று கடற்கரையோரமாக பயணத்தை மேற்கொள்கின்றன. (109)

# ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மறுநாள் 20ஆம் திகதி இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ,க)

# முரசின் இன்றைய பலன்


(13.11.2013 புதன்கிழமை)



விஜய வருஷம் ஐப்பசிமாதம் 27 ஆம் திகதி. ஏகாதசி விரதம்.
பூரட்டாதி நட்சத்திரம் மு.ப. 11.16 வரை.
பின் உத்தரட்டாதி. ஏகாதசி - திதி. அமிர்தசித்தம்.
இராகுகாலம 12.07- 01.37 வரை. சுபநேரம 04.37- 06.07 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பாதுகாப்பில் கவனஞ் செலுத்தாமையால் திருடர்களுக்கு கொண்டாட்டம், சத்திர சிகிச்சை மேற்கொண்டதால் நோயின் உபாதையினின்றும் விடுபடல். |
| ரிஷபம் | கன்னியரின் பசப்பு மொழியைக் காதிற்போட்டுக் கொள்ளாமையால் தப்பிவிடல், தன் சொந்தக்காலில் நிற்பதற்கு விரும்பி பங்குத் தொழிலைக்கைவிட்டு விடுதல். |
| மிதுனம் | பெற்றோருக்குத் தெரியாது அவமரியாதைக்குரிய செயல்களில் ஈடுபடவிழைதல், வெளிநாடு சென்ற போதிலும் காலநிலை ஒத்துவராததால் மீண்டும் தாயகம் திரும்புதல். |
| கடகம் | வாகனத்தில் ஓடிச்சென்று ஏற முயன்றதால் விபத்தினின்றும் அருந்தப்பு, நீண்டகாலம் குழந்தைப் பாக்கியம் கிட்டாமையினால் தத்தெடுத்து வளர்க்கும் யோசனையில் ஆழ்தல். |
| சிம்மம் | புதிய பொறுப்புக்களை ஏற்கலாமா விட்லாமா என்று மனம் தத்தளித்தல், அதிஷ்டம் உண்டு. |
| கன்னி | ஏழரைச்சனி கடைக்கூறு நடப்பதினால் திருமண பந்தத்தில் ஈடுபட விருப்புத் தெரிவித்தல், மழைவிட்டும் தூவானம் இருப்பது போல் பழைய பகைமை தொடர்ந்து வருத்துதல். |
| துலாம் | போதைவஸ்த்து பாவிக்கும் நண்பனுடன் கூடியதால் சட்டத்தின் பிடியில் அகப்படல், கல்வியை மேம்படுத்த வெளியூர் செல்லும் வாய்ப்பினை பயன்படுத்த முடிவுசெய்தல். |
| விருச்சிகம் | திருடர் நடமாற்றம் பற்றிய கவலையினால் உஷாராக இருத்தல், அனுபவமே சிறந்த ஆசான் என எண்ணிச் செயற்பட்டதால் தொல்லை விலகல். |
| தனுசு | நீண்ட நாட்களாகியும் கடனைப் பெறமுடியாததால் முறையீடு செய்யச் செல்லல், வெளிநாட்டிலிருந்து காணாமல் போனவர் என நம்பப்பட்டவர் வருகையால் மகிழ்ச்சி. |
| மகரம் | நோய் குணமடையாததால் தெய்வத் தலமொன்றுக்கு விஜயம் செய்ய உத்தேசித்தல், குடும்பத்தின் மீது கரிசனை கொள்ளல். |
| கும்பம் | வழக்கின் முடிவு பாதகமாக அமைவதால் மேன் முறையீடு செய்ய சட்டத்தரணியை நாடுதல், புதிய தொழில் தொடங்கும் யோசனை. |
| மீனம் | கண்டதே காட்சி கொண்டதே கோலமென்று திரிந்ததால் நோய்க்கு இலக்காதல், மனநிம்மதிக்காக ஆலயம் செல்லல். |



வடமாகாண கல்வி, சுகாதார அமைச்சுடன் தீவக கல்வி அலுவலகமும் காரைநகர் பிரதேச பாடசாலைகளும் இணைந்து யாழ்ரன் கல்லூரி மண்டபத்தில் நடாத்திய சுகாதார மேம்பாட்டு செயற்திட்ட நிகழ்வில் மாணவர்களின் பொருட் காட்சிகளை விருந்தினர் பார்வையிடுவதையும் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட பொருட்களையும் காணலாம். (50)

# சேவை நிலைய இடமாற்றம் நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல்

## ஆசிரிய ஆலோசகர் சங்க பொதுச் செயலாளர்

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களைத் தனிச்சேவையில் உள்ளீர்ப்புச் செய்யக்கோரி ஆசிரிய ஆலோசகர் சங்கம் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்கினை நடத்தி வரும் நிலையில் (வ.இல:2009/315) வடமாகாணக் கல்விப் பணிப்பாளரின் உத்தரவின் பேரில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அவர்களது சேவை நிலையத்தை கோட்டக்கல்விப் பணிமனைக்கு மாற்றுவது, அச்சேவையினையும் நீதிமன்றையும் அவமதிக்கும் செயலாகும் என வடமாகாண சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சங்கப் பொதுச் செயலாளர் என்.பி. ஸ்ரீந்திரன தெரிவித்துள்ளார்.

இந்த நியாயமற்ற சேவை நிலைய மாற்றம் தொடர்பில் முறையீட்டுக் கடிதமொன்றினை, வடமாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும், வடமாகாணக் கலாசார பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறையமைச்சின் செயலாளருக்கும் அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அக்கடிதத்தில் செயலாளர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

எந்தவொரு அரசசேவை தொடர்பிலும் நீதிமன்றில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் நீதிமன்றத் தீர்ப்பு வெளிவரும்வரை குறித்த சேவையின் கடமைப்பட்டியலிலோ அல்லது சேவை நிலையத்திலோ மாற்றம் செய்ய முடியாது என்பது சட்டம். மாகாணக்கல்விப் பணிப்பாளரும், வலயக் கல்விப் பணிப்பாளரும் இணைந்து வடமாகாணத்தில் அவ்வாறு செய்திருப்பது எமது சேவையினையும், நீதிமன்றையும் அவமதிக்கும் செயலாகும். இந்த விடயம் தொர்டர்பில் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும், ஒரு சில வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் போதிய விளக்கம் இல்லையோ என எண்ணத் தோன்றுகிறது.

ஆசிரிய ஆலோசகர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நியமனக் கடிதங்களில் சேவை நிலையம் வலயக்கல்வி அலுவலகம் எனக் குறிப்பிட்டிருக்கும் போது அதனைக் கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு மாற்றுவது நியாயமற்ற செயலாகவும், ஆசிரிய ஆலோசகர்களின் உரிமை மீறலாகவும் கருத வேண்டியுள்ளது.

மேலும் ஆசிரிய ஆலோசகர்களை எவ்வித இடையூறுமின்றி வலயக்கல்வி அலுவலகங்களில் கடமையாற்ற அனுமதிக்குமாறு இலங்கை மத்திய கல்வியமைச்சின் செயலாளர் சுற்றுநிருபம் மூலம் (5001/1201/01/ISA) இலங்கையிலுள்ள 9 மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்திருக்கும் நிலையில், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் மட்டும் கல்வியமைச்சின் சுற்றுநிருபத்தைப் புறந்தள்ளி விட்டு, தன்னிச்சையாக இந்தச் சேவை நிலைய மாற்றத் தீர்மானத்தை எடுத்து நடைமுறைப்படுத்தியிருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல எனவும், கல்வியமைச்சு செயலாளரை அவமதிக்கும் செயலாகும் எனவும் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஆசிரிய ஆலோசகர்களின் சேவை நிலையத்தை கோட்டத்திற்கு மாற்றுவதன்மூலம் சில கோட்டப் பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி, ஆசிரிய ஆலோசகர்களின் பற்றாக்குறை காரணமாக பாதிப்படைய வழியேற்படும்.

எனவே இத்தகைய காரணங்களினால், ஆசிரிய ஆலோசகர்களின் நியமனத்தில் குறிப்பிட்டவாறு, அவர்களை முன்போல் வலயக்கல்வி அலுவலகங்களுக்கு நியமித்து வலயக்கல்வி அலுவலகத்தினைச் சேவை நிலையமாகக் கொண்டு, கோட்டக்கல்வி அபிவிருத்திப் பணிகளிலும், பாடசாலைக் கல்வி அபிவிருத்திப் பணிகளிலும் தாங்கள் சேவையினை மன உளைச்சலின்றி ஆற்றுவதற்கும் ஆவன செய்ய வேண்டும் எனக் கோரி கடிதம் அனுப்பியுள்ளதாக பொதுச் செயலாளர் என்.பி.ஸ்ரீந்திரன் தெரிவித்துள்ளார். (06)

# கால்நடை வைத்திய அலுவலகத்தால் 75 பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள்

(வடமராட்சி)

பருத்தித்துறை கால்நடை வைத்திய அலுவலகத்தினால் மகிந்த சிந்தனையிலான திவிநெகும திட்டத்தின் கீழ் 75 பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால் சிபார்சு செய்யப்பட்ட 75 பயனாளிகளுக்கும் ஒரு மாதக் கோழிக்குஞ்சுகள் ஒரு பயனாளிக்கு பத்துக் கோழிக்குஞ்சு வீதம் வழங்கப்படவுளளன.

மேலும் கால்நடை வளர்ப்போர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பருத்தித்துறை கால்நடை வைத்திய அலுவலகத்தினரால் திவிநெகும திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரு பயனாளிக்கு 50 வீத மானிய அடிப்படையில் 3 மறி ஆடுகள் வீதம் இரண்டு பயனாளிக்கு வழங்கப்படவுள்ளதுடன், ஒரு பயனாளிக்கு ஒரு ஆட்டுக் கொட்டில் 50 வீதமானிய அடிப்படையில் இரண்டு பயனாளிக்கும் ஒரு பயனாளிக்கு 50 வீத மானிய அடிப்படையில் மாட்டுக் கொட்டகையும் வழங்கப்படவிருப்பதாக தெரியவந்துள்ளது.

மேலும் மகிந்த சிந்தனையின் கீழ் தேசிய புல் நடுகை வாரம் பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரிகள் பணிமனையினரால் இவ்வருடம் பொலிகண்டி கிராமத்தில் நடாத்தப்பட்டது.


மாட்டின் பால் உற்பத்தி குறைந்து வரும் நிலையில் புல்வளர்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு மகிந்த சிந்தனையால் பசும்புல் ஊக்குவிப்புத் திட்டம் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டு புல் நடுகை வாரமாக இவ்வருடமும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் நற்பயனாக பொலிகண்டி மேற்கு அரசம்புல மாதா ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள என்.ரவி என்பவரது வளவில் Co-3 தரத்திலான வெட்டும் பசும் புல்லினத்தைக் கொண்டு பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரிகள் பிரிவுக்குட்பட்ட ஏனைய மாடு வளர்க்கும் பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டன. மேலும் பசுமை கொண்ட புல்லினத்தை வளர்த்து பால் உற்பத்தியைப் பெருக்கிக் கொள்வதற்காகவே இச் செயற்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மாடு வளர்ப்போர் பயனடைந்திருப்பதாகவும் தெரியவருகின்றது. (116)

# ஆயுர்வேதம்

## நுரையீரல் கிருமி நீங்க!



“சதாபத்யம்” அதாவது தொடர்ந்து உண்பதற்கேற்றவை என்று சில உணவுப் பொருட்களை ஆயுர்வேதம் குறிப்பிடுகிறது. சிவந்த காரசி, கோதுமை, யவை எனும் வாற்கோதுமை, அறுபதாங் குறுவை அரிசி, ஆரைக்கீரை, கீரிப்பாலை, இளம் முள்ளங்கி, வாஸ்துக் கீரை, கடுக்காய், நெல்லிக்காய், திராட்சை, புடலங்காய், பச்சைப் பயறு, சீனி, நெய், மழைத்தண்ணீர், பால், தேன், மாதுளை, இந்துப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து உண்ணலாம். நீரிழிவு உபாதை இருப்பவர்கள், இவற்றில் திராட்சை, சீனி, நெய், தேன் ஆகியவற்றை முடிந்தவரை குறைத்து, மற்றவற்றைச் சாப்பிடலாம்.

அடிக்கடி தொண்டையில் கபம் சேர்வது, காசநோய் மற்றும் நுரையீரல் கிருமிகள் உள்ள நோயாளிகள் காரம், கசப்பு, துவர்ப்பு ஆகியவை கொண்ட உணவு, கொள்ளு, துவரம் பருப்பு, கொண்டைக் கடலை, பச்சைப் பயறு ஆகியவை வகைக்கு ஒரு பிடி, சுக்கு மிளகு, திப்பிலி வகைக்கு 2 கிராம் வீதம் சேர்த்து கஞ்சி காய்ச்சி வடிகட்டி சிட்டிகை, இந்துப்புடன் காலை உணவாகச் சாப்பிடுவது நலம். கோரைக் கிழங்கும், சுக்கும் வகைக்கு 8 கிராம் வீதம் 1 லீற்றர் தண்ணீரில் கொதிக்கவிட்டு அரை லீற்றரானதும் வடி கட்டி, காலையில் குடித்த கஞ்சிக்குப் பிறகு சிறிதும், மதிய உணவுக்கும், இரவு உணவுக்கும் பிறகு சிறிதாகவும், பிரித்துக் குடித்தால், நீங்கள் குறிப்பிடும் உபாதை குறைவதுடன், உடலில் வெல்லத்தின் அளவும் கூடாமலும் பாதுகாக்கும். உடல் பலவீனம் குறையும்.

3–4 சொட்டுகள் குங்குமாதி தைலம் அல்லது அணு தைலத்தையோ காலை, இரவு உணவுக்குப் பிறகு மூக்கினுள் விட்டு உறிஞ்சித் துப்பிவிடுவதால், தொண்டையில் சேரும் கபம் குறைய உதவும். கபத்தினுடைய அதிக அளவின் சேர்க்கையை இந்த சிகிச்சை முறை வெளிப்படுத்துவதால், மூச்சுக் குழாய் நுரையீரல் பகுதி சுத்தமடைந்து பிராண வாயு எளிதாக உள்ளே செல்லும். மூச்சுத் திணறல் உபாதையைக் குறைக்கவும் உதவும்.

தலைக்குச் சந்தனாதி, க்ஷீரபலா, திரிபலாதி போன்ற தைலங்களில் ஒன்றைத் தேய்த்துக் குளித்து வந்தால், இரத்த அழுத்த உபாதையைக் குறைக்க ஏதுவாக இருக்கும். மஹாமாஷம், பலா அஸ்வகந்தாதி தைலங்கள் உடலுக்குத் தேய்த்துக் குளிக்க ஏற்றவை. உடல் இளைத்துப் போவதைத் தடுக்கும். வைஷ்வாரைம், ஹிங்குவசாதி, அஷ்டசூரணம் போன்ற மருந்துகளில் ஒன்றை வெந்நீருடன் சாப்பிட, மலச்சிக்கல் உபாதை தீர்வதுடன், குடலும் சுத்தமாக இருக்கும். பசியும் மந்தமாகாமல் நல்ல நிலையில் இருக்கும்.

தயிர், மிகவும் மெலிந்து உலர்ந்துபோன பன்றி, செம்மறியாடு, மீன், பசு, எருமை ஆகியவற்றின் மாமிசம், உளுந்து, மொச்சை, சிறுகடலை, மாப் பண்டம், முளைகட்டிய தானியம் போன்றவற்றைத் தவிர்க்கவும். இவை நுரையீரல் சம்பந்தமான உபாதைகளனைத்தையும் அதிகரிக்கக் கூடியவை.

வியாக்ரயாதி கஷாயமும் இந்து காந்தம் எனும் கஷாயமும் வில்வாதி குளிகை எனும் மாத்திரையுடன் அரைத்துச் சாப்பிட்டால் நுரையீரல் கிருமி, தொண்டையில் ஏற்படும் சளி, காச நோய் உபாதைகளுக்கு மிகவும் நல்ல மருந்தாகும். மருத்துவரின் ஆலோசனை பெற்று அதன் பிறகு சாப்பிடுவது உத்தமம். மருந்துகளின் தேவை, அவை சாப்பிட வேண்டிய நேரம், முறை, அளவு போன்றவை கவனித்துத் தரப்பட வேண்டியவையாகும்.

### பப்பாசி மகிமை!

- பப்பாசியை மத்திய மற்றும் தென் அமெரிக்காவில் ஆரோக்கிய மரம் என்றழைப்பார்கள்.
- இதில் அனைத்து விற்றமின் சக்துகளும் உள்ளன. பொட்டாசியம், செம்பு, பொஸ்பரஸ், இரும்பு மற்றும் நார்ச்சத்துகள் உள்ளன.
- இதில் விற்றமின் “சி” அதிகளவில் இருப்பதால், உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கிறது.
- சத்தான பழங்களில் பப்பாசி முதலிடம் வகிக்கிறது.
- இது குடல் புழுக்கள் உண்டாவதைத் தடுக்கிறது.
- மலச்சிக்கல், வாயு, நெஞ்செரிச்சல், அல்சர், நீரிழிவு மற்றும் கண்பார்வை கோளாறுகளுக்கு பப்பாசி சிறந்த மாமருந்தாக விளங்குகிறது.
- பப்பாசிக் காயைத் தேங்காய் போல் துருவி வறுத்தும் சாப்பிடலாம். (“மூலிகை குணங்கள் கொண்ட பழங்கள்” நூலில்)

# ஸ்கந்தபுரம் பிரதேசத்திற்கு மின்சார விநியோகம்





(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் ஸ்கந்தபுரம் பிரதேசத்திற்கு மின்சார விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஈ.பி.டி.பி வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் வை.தவநாதன் நேற்றுமுன்தினம் இச்செயற்திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.

வடக்கின் வசந்தம் மின் விநியோகத்திட்டத்திற்கமைவான சுமார் 175 இலட்சம் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இச்செயற்திட்டத்தின் மூலம் ஸ்கந்தபுரத்தின் பெரும்பாலான பகுதிகள் இதன் மூலம் மின்சாரத்தினைப் பெறுகின்றன.

இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஈ.பி.டி.பி.யின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பிரதேச மக்களுக்கு இன்று ஒரு பொன்னான நாள். கிளிநொச்சி நகரில் இருந்து சுமார் 20 கிலோமீற்றர் களுக்கு அப்பால் மிகவும் பிற் படுத்தப்பட்ட கிராமம் என கூறப்படும் இந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கின்றது.

மின்சாரத்திற்காக ஏங்கிக் காத்திருந்த இப்பிரதேச மக்களின் அவா நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இப் பகுதியைச் சேர்ந்த 170 குடும்பங்கள் மின் இணைப்பினைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளனர். அத்தோடு எதிர்காலத்தில் ஏனைய பிரதேசங்களுக்கும் மின் இணைப்புக்களை வழங்குவதற்கான செயற்பாடுகளை நாம் துரிதப் படுத்துவோம்.

அத்தோடு இதற்காக முன்னின்று உழைத்த நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் வடக்கின் வசந்தம் திட்ட மின் முகாமையாளர், பொறியியலாளர்கள் அனைவரினதும் சேவையே இன்று இந்தப் பகுதி மக்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு காரணமாக இருக்கின்றது.

மேலும், நாடு முழுவதும் மின்சாரம் என்ற திட்டத்தின் கீழ் இலங்கை அரசினால் இலவசமாக வழங்கப்படும் ஒரு மின் திட்டம். அதன் பயனை தற்போது இந்தப் பகுதி மக்களும் பெற்றுள்ளனர். நடைமுறைப்படுத்தப்படும் இவ்வாறான திட்டங்களைத் துரிதப் படுத்துவதற்கு மக்களின் பங்களிப்பும் அவசியமானது. இப்பகுதி மக்கள் தமது ஒத்துழைப்பை பூரணமாக வழங்கியிருப்பின் இன்று அடுத்தகட்டத்தை நோக்கி மின் விநியோகச் செயற்பாடு முன்னேறியிருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஸ்கந்தபுரம் கிராம சேவையாளர் சபாரத்தினத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் சபாநாயகம், கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், வடக்கின் வசந்தம் மின்விநியோகத் திட்டத்தின் முகாமையாளர் குணசீலன், வடக்கின் வசந்தம் மின் இணைப்பு பொறியியலாளர் அமிலடயஸ், கிளிநொச்சி மின் அத்தியட்சகர் குகராஜ், கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மாதர்கிராம அபிவிருத்திச் சங்கப்பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# வயிற்றுளைவு, வயிற்றோட்டம் குடா நாட்டில் பரவும் அபாயம்

யாழ்.மாவட்டத்தில் தற்போது ஆரம்பித்துள்ள மழையைத் தொடர்ந்து ஒருவித வயிற்றுளைவு, வயிற்றோட்ட நோய் பரவி வருகிறது என யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. காய்ச்சல், வயிற்றுளைவு, வயிற்று வலி, வாந்தி போன்ற அறிகுறிகளுடன் முக்கியமாக சிறுவர் மத்தியில் இந்நோய்த்தாக்கம் அதிகமாக பரவுகின்றது.

சிறுவர்களிலிருந்து பெரியவர்களுக்குப் பரவுவதை யாழ்ப்பாணம். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்நோயைத் தவிர்த்துக் கொள்வதற்கு,

- எப்போதும் கொதித்தாறிய நீரையே பருகுவோம்.
- பழங்கள், காய்களை நன்கு கழுவிய பின் உண்போம்.
- சமைக்காது உண்ணும் இலைக்கறிகள், மரக்கறிகளை உணவுக்காக தயார் செய்யும் முன் உப்பு நீரில் நன்றாகக் கழுவுவோம்.
- எப்போதும் சாப்பிட, சமைக்க, உணவூட்ட முன்பு கைகளை நன்றாக சவர்க்காரமிட்டுக் கழுவுவோம்.
- பாதுகாப்பற்ற வகையில் அழுக்கடையக்கூடியவாறு தரையில் வைத்து விற்பனை செய்யும் காய்கறிகள், பழவகைகளை தவிர்ப்போம்.
- எப்போதும் மலங்கழிக்க மலசல கூடங்களையே பாவிப்போம், சிறுவர்கள், குழந்தைகளின் மலக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் அகற்றுவோம்.

பாடசாலைகளில் ஆசிரியர்கள், பாடசாலைச் சுகாதாரக் கழகங்கள் கிரமமாக மாணவர்களுக்கு ஆரோக்கிய வாழ்க்கைக்கான பழக்க வழக்கங்கள் தொடர்பில் அறிவூட்டுதல் இவ்வாறான தொற்று நோய்களிலிருந்து மாணவர்கள் தம்மைப்பாதுகாக்க உதவும் என திணைக்களங்கள் அறிவித்துள்ளன.

# விதை வெங்காயத்திற்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் பல இடங்களிலும் விதை வெங்காயத்திற்கு தட்டுப்பாடு நிலவுவதுடன் விலையும் அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒரு அந்தர் வெங்காயத்தின் விலை 7 ஆயிரம் ரூபா முதல் 10 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன் இவ்வளவு தொகை பணம் கொடுத்து வெங்காயத்தினை கொள்வனவு செய்து செய்கையினை மேற்கொண்டு மீண்டும் அது அழிவடைந்து விடுமோ என்ற அச்சத்தில் தாம் இருப்பதாக வெங்காயச் செய்கையினை மேற்கொள்வோர் தெரிவிக்கின்றனர். (85)

# சட்டவிரோதமான முறையில் சிறுநீரகங்கள் கடத்தல்

சட்டவிரோதமான முறையில் சிறுநீரகங்கள் இலங்கைக்கு கடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பிரித்தானிய பிரஜைகளுக்கு இவ்வாறு சட்டவிரோதமான முறையில் சிறுநீரகங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

கொழும்பில் அமைந்துள்ள வைத்தியசாலைகளில் சிறுநீரக உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது. பெருந்தொகைப் பணத்திற்காக இவ்வாறு சிறுநீரகங்கள் விற்பனை செய்யப்படுவதாக பிரித்தானிய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தவர்களின் சிறுநீரகங்கள் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் பெங்களூரைச் சேர்ந்த காணிக்கைராஜ் என்பவர் சட்டவிரோதமான முறையில் சிறுநீரகங்களை விற்பனை செய்யும் நடவடிக்கையின் தரகராக செயற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. உடல் உறுப்புக்களை விற்பனை செய்வோர் பற்றிய தகவல்களை வெளியிடக் கூடாது என தரகர்கள் நிபந்தனை விதிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வணிகப் போட்டி முடிவுகள்

வடமாகாண பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட வணிகப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. பேச்சு, குறுவினா, கட்டுரை என மூன்று விடயங்களாக இப் போட்டி நடாத்தப்பட்டது. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

தரம் - 10, பேச்சு.

க.சஸ்கர்ஜி, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பி.பிரதீஸ், யா/யாழ்ப்பாணக் கல்லூரி, வி.டினுசாந், மு/கலைமகள் வித்தியாலயம்

தரம் - 11

க.பவித்திரா, கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம், இ.இனோஷா, யா/அருணோதயாக் கல்லூரி, வி.கார்த்திகாயினி, யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி.

தரம் - 12

லோ.கமில்டன், யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, எஸ்.டிசாந்தன் யா/யாழ்.மத்திய மகளிர் கல்லூரி, த.டினோஷா, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

தரம் - 10, கட்டுரைப் போட்டி,

அ.விதுர்சாயினி, மு/யோகபுரம் மகா வித்தியாலயம், ந.அகல்யா, கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம், இ.லதா, யா/சிதம்பராக் கல்லூரி.

தரம் - 11

த.பிறீடோ, வ/விபுலானந்தா கல்லூரி, க.கிருஷாயினி, கிளி/தருமபுரம் மகா வித்தியாலயம், நி.ஜதீஸ்கண்ணா, வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்.

தரம் - 12

பா.சயந்தன், யா/யாழ்.இந்துக் கல்லூரி, தி.தயந்திகா, கிளி/முருகானந்தா கல்லூரி, என்.சுரலீனா, வ/விபுலானந்தா கல்லூரி.

தரம் - 10, குறுவினா.

ஏ.அனுசூயா, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, சு.தபோசினி, வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், ஈ.விஜிந்திரா, யா/வட இந்து மகளிர் கல்லூரி.

தரம் - 11


எஸ்.சிவரூபன், கிளி/மகா வித்தியாலயம், ரி.நேகாசினி, மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி, தி.கிருஷாந்தி, யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

தரம் - 12

அ.கார்த்திகா, யா/வரணி மகா வித்தியாலயம், ப.துஷானி, வ/இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம், இ.நிஜந்தி, யா/வட இந்து மகளிர் கல்லூரி.(12)








**வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தினால் இளைஞர் யுவதிகளுக்கு நடாத்தப்பட்ட தட்டச்சு சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புக்களில் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற பதிவாளர் எஸ்.எம்.நசீர், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அதிபர் திருமதி.பாலராணி ஸ்ரீதரன், இளைப்பாறிய மேலதிக மாவட்டப்பதிவாளர் எஸ்.பவானந்தன் ஆகியோர் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குவதைக் காணலாம்.** (01)


5. 350 நெல்லிக்கனிகளை 7 கடைகளுக்கு பங்கிட்டு வழங்கப்பட்டபோது 1 கடைக்கு கிடைக்கும் நெல்லிக்கனிகள் எத்தனை? ..........................

6. கழிக்குக. $\frac{1}{2} - \frac{1}{4} = \square$

7. 

1. உரு காட்டும் திண்மம் யாது? ..........................
2. அதன் உச்சிகளின் எண்ணிக்கை யாது? ..................
3. முகங்களின் எண்ணிக்கை யாது? ..........................


8. ஒரு நோயாளிக்கு ஒரு தடவை 2 வீதம் ஒரு நாளைக்கு 3 தடவைகள் எடுப்பதற்கு 30 மாத்திரைகள் வழங்கப்பட்டன. இம்மாத்திரைகள் எத்தனை நாட்களுக்கு போதுமானது ..........................

9. 

உருவின் சுற்றளவைக் காண்க. ..........................

10. .......................... 99000 இவ்வெண்ணுக்கு முன்னுள்ள எண்ணை எழுதுக.

**(11) மாணவர் குழுவொன்று பாடசாலைக்கு வருகைத்தரும் விதம் பின்வரும் வரைபு காட்டுகிறது.**




1. இங்கு ஒரு கட்டம் எத்தனை மாணவர்களை சுட்டிக்காட்டுகிறது? ..........................
2. மாணவர்கள் அதிகமாக வருகைத்தரும் விதம் .................. ஆகும்.
3. வேனில் வருகைத்தரும் எண்ணிக்கையில் இரு மடங்கு மாணவர்கள் வருகைத்தருவது .......................... ஆகும்.
4. வேனில் பாடசாலைக்கு வருகைத்தரும் மாணவர்கள் எத்தனை பேர்? ..........................
5. வேனில் வரும் மாணவர்களை விட புகைவண்டியில் எத்தனை மாணவர்கள் கூடுதலாக வருகைத்தருகின்றனர்? ..........................

**(12) பின்வரும் பந்தியை வாசித்து தொடர்ந்து ஆறுவாக்கியங்கள் எழுதுக. இலக்கணரீதியிலான தொடர்பு சரியாக அமைய வேண்டும்.**

அயல் வீட்டில் ஒரு புறத்தில் தொங்கவிடப்பட்டிருந்த கூட்டினுள் இருந்த கிளி திடீரென உரத்துச்சத்தமிட்டது வீட்டில் யாரும் காணப்படாமையினால் கண்ணன் கூட்டை நோக்கி ஓடினான் கிளியின் காலொன்று கூட்டில் சிக்கிஇருப்பதைக்கண்டான்
நீர் கண்ணன் என நினைத்துக் கொண்டு உமது உணர்வுகளை தொடர்ச்சியாக எழுதுக.

1. ..........................
2. ..........................
3. ..........................
4. ..........................
5. ..........................
6. ..........................



## தரம் - 5 புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை - 2014

# கல்வி முரசு



**(1) கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து வினாக்களுக்கு விடைத்தருக.**

| | |
|---|---|
| வையம் பகலிழப்ப வானம் ஒளியிழப்ப | கானெலாம் மலர்ந்த முல்லை ககனத் தெழுந்ததென்ன |
| பொய்கையும் நீள் கழியும் புள்ளிழப்ப - பையவே | வானெலாம் வயங்குதாரை நிரை நிரை மலர்ந்து தோன்ற |
| செவ்வாய் அன்றில் துணையிழப்பச் சென்றடைந்தான் | வேணிலான் விழவின் வைத்த வெள்ளி வெண்கும்பமென்னத் |
| செவ்வாய் விரிகதிரோன் வெற்பு | தூநிலா மதியம் வந்து குணதிசை தோன்றிற்றம்மா |

1. பாடலில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ள பறவை எது? ..........................
2. வையம் என்பதன் ஒத்த சொல்லை தருக? ..........................
3. மெல்ல என்ற சொல்லுக்கான எதிர் சொல்லை தருக? ..........................
4. குணதிசை என்பது எந்த திசையைக் குறித்துக்காட்டுகிறது? ..........................
5. வெள்ளி வெண்கும்பம் என்று வர்ணிக்கப்படுவது எது? ..........................
6. வானில் நிரை நிரையாய் மலர்ந்தது என்ன? ..........................
7. பையவே என்பதன் பொருள் விளக்கம் என்ன? ..........................

**(2) பின்வரும் தொடரில் வந்துள்ள வழுக்களை திருத்தி எழுதுக.**

1. "பூமரங்கள் காற்றில் அசைகிறது" ..........................
2. குழந்தை பசியினால் அழுகின்றான். ..........................

**(3) தனிச்சொல்லை தருக.**

1. நகைகள் செய்யும் இடம் .......................... 2. பிறருக்கு ஈயாமல் சேமிப்பவன் ..........................

**(4) பழமொழிகளுக்கான கருத்தை தருக.**

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் ..........................
2. நிலவை பார்த்து நாய் குரைத்து என்ன பயன் ..........................

**(5) கருத்தினை தமிழில் எழுதுக.**

1. பஸ் நெவதும் பொல .......................... 2. ருபியல் பனஹய் ..........................

**(6) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக.**

1. எனக்கு மாம்பழம் விருப்பம் .......................... 2. எழுபது ..........................

**(7) கருத்தினை தமிழில் எழுதுக.**

1. I will bring flowers ..........................
2. What are these ..........................

**(8) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**


1. காகம் கூடு கட்டத் தொடங்கும் காலம்.
   1. ஆணி 2. ஆடி 3. சித்திரை 4. ஐப்பசி

2. விஞ்ஞான ஆய்வு கூடங்களில் இரசாயனப்பதார்த்தங்கள் பற்றிப்பிடிக்க சந்தர்ப்பம் உண்டு இதன்போது அங்கே கட்டாயம் இருக்க வேண்டியது?
   1. நீர்தாங்கி 2. கதவு 3. தீயணைப்பான் 4. நுணுக்குக்காட்டி

3. வீட்டுத்தோட்டத்தில் பூசணி ஒன்றை கறிக்கு அறுவடை செய்யவேண்டும் அறுவடைக்கு பொருத்தமான பூசணியை எவ்வாறு அறிந்து கொள்வீர்.
   1. மஞ்சள் நிறம் பட்ட காய் 2. சாம்பல் பூத்தகாய் 3. பெரிய காய் 4. கடும்பச்சை நிறகாய்

4. சிறகவரையில் உள்ள போசணைச்சத்து
   1. புரதம் 2. மாப்பொருள் 3. கல்சியம் 4. இரும்பு

5. விமானம் பறப்பதைப் போன்று அங்கும் இங்கும் பறக்கும் பறவை.
   1. இரட்டைவால் குருவி 2. இரட்டை சொண்டுக்குருவி 3. ஆட்காட்டிக் குருவி 4. நரைப்புளுணி

6. 
இரசம்


திரவநிலையிலுள்ள இரசம் உள்ள பாத்திரம் அருகே தரப்பட்டுள்ளது. இதனுள் இரும்பு குண்டு ஒன்றை இட்டால்.
   1. தாளாகும் 2. மத்தியில் காணப்படும். 3. அமிழும் 4. மிதக்கும்

7. பின்வருவனவற்றுள் அயடின் குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?
   1. தொண்டைக்கரப்பான் 2. நீரிழிவு 3. கண்டமாலை 4. யானைக்கால்

8. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் வீட்டில் உள்ள நாய் உரத்துக்குரைக்கும்?
   1. தனது எல்லைக்குள்ளே வேறு நாய் வரும் போது 2. வெளியாள் வீட்டுக்கு வரும் போது 3. நாய்க்கு தொந்தரவு செய்யும் போது 4. நாய் கவலையை உணரும் போது

9. வீட்டுத்தோட்டத்தில் கொய்யாப்பழங்களுக்கு வரும் பொதுவான நோயொன்று.
   1. வெம்பி பழுத்தல் 2. காய்சிறிதாகுதல் 3. கரும்புள்ளியடித்தல் 4. பூ விழுதல்

10. பாவனைக்குதவாத பாண் ஒன்றின் இயல்பு
   1. பூஞ்சணம் பிடித்தல் 2. துர்நாற்றம் வீசுதல் 3. சிவப்பு நிறமாதல் 4. ஒட்டிப்பிடித்தல்

11. 


காட்டப்பட்டுள்ள இரு சுற்றுகளிலும் உள்ள மின்குமிழின் பிரகாசம் பற்றி கூறக்கூடியது.
   1. A சுற்றிலுள்ள மின்குமிழின் பிரகாசம் அதிகமாகும்.
   2. இரு சுற்றிலும் உள்ள மின்குமிழ்களின் பிரகாசம் கூடியதாக காணப்படும்
   3. இரு சுற்றிலும் மின்குமிழ்களின் பிரகாசம் குறைவாகவே இருக்கும்.
   4. B சுற்றிலுள்ள மின்குமிழின் பிரகாசம் கூடியதாய் இருக்கும்.

12. மூடாமல் சமைக்கப்பட வேண்டிய உணவுப்பொருள்
   1. வத்தாளை 2. ஈரப்பலா 3. மரவள்ளி 4. பலா

13. பின்வரும் விளையாட்டுக்களில் சக்தி அதிகளவு விரயமாவது?
   1. கரம் 2. செஸ் 3. சோகி 4. கயிறுஇழுத்தல்

14. 

உருவில் உள்ள பொலிஸ்காரனின் சைகை எதனைக் குறிக்கிறது.
   1. பின்னாலிருந்து வரும் வாகனங்களை மாத்திரம் நிறுத்துக.
   2. முன்னாலிருந்து வரும் வாகனங்களை மாத்திரம் நிறுத்துக.
   3. முன்னாலிருந்தும் பின்னாலிருந்தும் வரும் எல்லா வாகனங்களையும் நிறுத்துக.
   4. முன்னாலிருந்தும் பின்னாலிருந்தும் வரும் வாகனங்களை நிறுத்த வேண்டாம்.




15. 

உருவிலுள்ளவர்
   1. ஆனந்த சமரகோன் 2. டி.பி. ஜயதிலக்க 3. F. R. சேனாநாயக்க 4. E. P. குணசிங்க

16. ஆள் அடையாள அட்டையை விநியோகிக்கும் தகுதிபெற்ற சேவையகம்
   1. கிராம சேவையகக் காரியாலயம். 2. குடிவரவு திணைக்களம் 3. பிரதேச செயலகம் 4. ஆட்பதிவு திணைக்களம்

17. முகமூடி மற்றும் பொம்பலாட்டங்களுக்குப் பிரசித்திப்பெற்ற இடம்.
   1. களுத்துறை 2. மல்வானை 3. அம்பலாங்கொடை 4. அம்பாந்தோட்டை

18. வடமேல் மாகாணத்தில் அமையப்பெற்றுள்ள மாவட்டம்
   1. குருநாகல் 2. மாத்தறை 3. கொழும்பு 4. கம்பஹா

19. 

இக்குறியீடு குறிப்பது.
   1. குழாயை மூடுக. 2. குழாயில் நீர் கசிவு 3. நீரை வீண்விரயமாக்காதீர் 4. கைகளை கழுவிக்கொள்க.

20. மகாழயா கடலுடன் கலக்கும் இடத்திற்கு அண்மையிலுள்ள நகரம்.
   1. நொச்சியாமம் 2. நீர் கொழும்பு 3. மாத்தறை 4. கற்பிட்டி

(20 புள்ளிகள்)

**(09) பின்வரும் விடயங்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( ✗ ) எனவும் அடையாளப்படுத்துக.**


01. பண்டைக்கால மக்கள் பயணத்திற்காக குதிரைகளையும், யானைகளையும் பயன்படுத்தினர். ( )
02. சீனி சேர்த்தல் மூலம் பழங்களை நீண்டகாலம் பேணிவைக்க முடியும். ( )
03. ஆறு கடலுடன் கலக்குமிடத்தை சமவெளி என்போம். ( )
04. தண்டு கோதிப்புழுவினால் தாக்கப்படுவது நெற்பயிராகும். ( )
05. வகுப்பறையொன்றில் பல்வேறு பிரச்சினைகள் உடைய பிள்ளைகள் இருப்பார்கள். ( )
06. காந்தத்தின் எதிர் முனைகள் ஒன்றையொன்று தள்ளும். ( )
07. இலங்கையின் ஆதிவாசிகள் இழுக் எனும் புல்லைக்கொண்டு தமது குடிசைகளை வேய்ந்துக் கொண்டனர். ( )
08. 'விக்டோரியா' இலங்கையின் மாபெரும் நீர்த்தேக்கமாகும். ( )

**(10) கணித வினாக்களுக்கு விடை தருக.** (08 புள்ளிகள்)


1. | 9 | 7 |
   |---|---|
   | | 0 2 |

   இவ்வெண்களை பயன்படுத்தி நான்கிலக்க ஒற்றை எண்ணொன்றை எழுதுக.
   ........................................

2. பெறுமானம் காண்க. 99099 + 1 + 9 = ...........................

3. 

இவ்வுருவில் காணப்படும் **கூர்கோணங்கள்** எத்தனை? ............................

4. 

இவ்வுருவிற்கு பொருத்தமான சமச்சீர் அச்சுக்களை வரைந்து காட்டுக.



# ஒரு இனத்தின் இருப்பு பலத்திலேயே தங்கியுள்ளது



ஒரு இனத்தின் இருப்பு என்பது அதன் பலத்திலேயே தங்கியுள்ளது என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தின் வருடாந்த கலாசார விழா நிகழ்வில் பிரதம விருந்திரனராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரு இனமானது பொருளாதாரம், கலை கலாசாரம் பண்பாடு அறிவுசார்ந்த விடயங்களில பலமாக இருக்கவேண்டும். குறிப்பாக பொருளாதாரத்தில் பலமாக இருக்க வேண்டும். அப்போதே இனத்தின் இருப்பு பூலமாகும், எனவே அந்த பலத்தினை நாம் அபிவிருத்தியின் ஊடாகவே அடையமுடியும். இதனை இன்று இங்கு வெளியிடப்பட்டுள்ள வளை ஒசை இதழில் காணப்படுகின்ற பல கட்டுரைகளும் பறைசாற்றுகின்றன. அந்த வகையில் ஒரு இனத்திற்கு பொருளாதார பலம் மிகமிக முக்கியமானது என்பது தற்போது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

கண்டாவளை பிரதேசத்தின் குறைபாடுகள் பல சுட்டிக்காட்டப்பட்டன. கடந்தகாலத்தில் நாம் கண்டாவளையின் பல தேவைகளை பூர்த்தி செய்துள்ளோம்.

மக்களின் பல பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுத்திருக்கின்றோம். இருப்பினும் பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகள் ஏராளம் இருக்கின்றன. அதனையும் நாமே செய்தாக வேண்டும் குறிப்பாக கல்லாறு மக்களின் குடிநீர் பிரச்சினை சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கு நாம் சமூக குடிநீர் வழங்கும் திட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளோம் எனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கண்டாவளை பிரதேசத்தில் சமூக, சமய, பொது பணியாற்றியமைக்காக தெரிவுசெய்யப்பட்ட கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கும் நிகழ்வும் வளைஓசை இதழ் வெளியீடும் இடம்பெற்றது.

கண்டாவளை பிரதேச செயலரும் கலாசார பேரவைத் தலைவருமான முகுந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரச அதிபர் சீர்ணிவாசன், கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், பளை பிரதேச செயலர் சத்தியசீலன், பூநகரி பிரதேச செயலர் வசந்தகுமார், மாவட்ட செயலக உதவி திட்டப்பணிப்பாளர் கேதீஸ்வரன், கலைஞர்கள் மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# பொதுநலவாய வர்த்தக மாநாடு நாட்டில் அபிவிருத்திக்கு வழிவகுக்கும்



பொதுநலவாய நாடுகளின் வர்த்தக மாநாட்டினூடாக இலங்கையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகளில் பங்களிப்புச் செய்ய சர்வதேச வர்த்தகப பிரதிநிதிகளுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என வெளிவிவகார பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஆரம்பமான வர்த்தக மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் புதிய நண்பர்களை உருவாக்கவும் கூட்டு வர்த்தக செயற்பாடுகளை முன்னெடுக்கவும் ஆர்வமுடன் இருக்கும் இலங்கைக்கு இந்த மாநாட்டில் கலந்துகொண்டுள்ள வர்த்தக பிரதிநிதிகள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்தி பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு கிடைத்த நல்லதொரு சந்தர்ப்பம் இதுவாகும். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இலங்கையில் கப்பற்துறை- விமானத்துறை- வலுசக்தி மற்றும் அறிவு ஆகிய துறைகளை கேந்திர நிலையமாகக் கொண்டு அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதனூடாக பொருளாதாரத்தை வேகமாக வளர்ச்சியடையச் செய்ய முடியும். இந்த மாநாட்டில் 91 நாடுகளில் இருந்து சுமார் 2000 பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர். அவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதனூடாக இலங்கையின் மீது அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை எம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

இதனூடாகக் கிடைக்கும் அனுகூலங்கள் நியாயமான முறையில் அனைவருக்கும் செல்லவேண்டும் என்பதில் அரசு அவதானத்துடன் உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

# கட்டாக்காலிகள் நிறைந்த யாழ்.பருத்தித்துறை வீதி

## விபத்துக்கள் தாராளம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை-யாழ்.பிரதான வீதியில் கட்டாக்காலி கால்நடைகள் தொல்லை மிதமிஞ்சி காணப்படுவதாக இப்பகுதி மக்கள தெரிவிக்கின்றனர்.

நகரசபை நிர்வாக எல்லைக்குட்பட்ட பருத்தித்துறை-யாழ். பிரதான வீதி காப்பெற் போடப்பட்டு போக்குவரத்துக்கு உகந்ததாக புனரமைக்கப்பட்ட போதிலும் கட்டாக்காலி கால்நடைகளினால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வீதியின் மருங்கில் குவிக்கப்படும் குப்பைகளை கட்டாக்காலி கால்நடைகள் கிழறி வீதியில் அங்குமிங்குமாக போடுவதால் அவை துர்நாற்றம் வீசுவதாகவும் வீதியில் நாய்கள் அங்கும் இங்கும் ஓடித் திரிந்து விபத்துக்களை ஏற்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமல்லாது பருத்தித்துறை நகரில் உள்ள கடைகளின் முன் இரவு வேளையில் உறங்கும் நாய்கள் கடைவாசல்களில் மலம் கழித்து விட்டு செல்வதால் கடைக்காரர்கள தினமும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

கட்டாக்காலியாக திரியும் கால்நடைகளை உரிய வகையில் அகற்ற வேண்டும் என பருத்தித்துறை நகர சபையினரை இப்பகுதி மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (116)

# மழைபொழிவைக் கண்டு மகிழ்வுறும் பூநகரி விவசாயிகள்

(முழங்காவில்)

பருவமழை பெய்ய வேண்டிய காலத்தில் பருவமழை பெய்யாததால் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நெல்வயல்கள் பூநகரிப் பகுதியில் அழிவடைந்த நிலையில் கடந்த இரு நாட்களாக பெய்த மழையால் விவசாயிகள் சந்தோசமடைந்துள்ளனர்.

வறட்சியின் கொடுமையில் இருந்து தப்பிப் பிழைத்த தமது நெல்வயல்களுக்கு களைகளைக் கட்டுப்படுத்துவதற்கான களை நாசினிகளை விசுறுவதிலும் யூரியா வளமாக்கிகளை வீசுவதிலும் அக்கறை காட்டி வருகின்றனர்.

விவசாயிகளுக்குத் தேவையான வளமாக்கிகளை அரச மானிய விலையில் பூநகரி கமநல சேவை நிலையத்தினர் வழங்கி வருகின்றனர்.

பூநகரிப் பகுதியில் இம்முறை காலப்போகத்திற்கு 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கர் காணிகளில் நெல் செய்கை பண்ணப்படுவது குறிப்பிடத்தக்கது. (112)

# வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

(பூநகரி)

வாசிப்பு மாதத்தையொட்டி பூநகரி பிரதேச சபையின் இரணைதீவு உப தபாலகத்தின் பொது நூலகத்தால் பாடசாலை மாணவரிடையே நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்டோர் விபரம் வருமாறு

பொதுஅறிவு

சி.கிஜானி (குமிழமுனை அ.த.க.பாடசாலை), ர.தங்கா (குமிழமுனை அ.த.க.பாடசாலை), ஜே.நிர்மல கிறிஸ்ரியன் (இரணைதீவு றோ.க.பாடசாலை)

கணிதப் போட்டி

மோ.நிறோயினி, யூ.டிலக்சன், மேரிலெக்சினி(நாச்சிக்குடா அ.த.க.பாடசாலை),

ஆரம்பப் பிரிவு

அபிநயப் பாடல்

கெ.அமலடொரன்சிகா (இரணைதீவு றோ.க.பாடசாலை) ம.கொன்சிகா (குமிழமுனை அ.த.க. பாடசாலை), ச.சுவேத்தா (நாச்சிக்குடா அ.த.க.பாடசாலை)

முன்பள்ளி மாணவர்களுக்கான அபிநயப்பாடல்

ம.அபினா (கதிரவன் முன்பள்ளி), இ.அலைமகள் (நொச்சிமுனை முன்பள்ளி), சி.தணிகைச் செல்வி (முழங்காவில் அன்பகம் முன்பள்ளி) (112)



சுன்னாகம் லயன்ஸ் கழகமும் வாழ்வகமும் இணைந்து வெள்ளைப் பிரம்பு தினத்தை அண்மையில் வாழ்வக கேட்போர் கூடத்தில் கொண்டாடினர் வலி.வடக்கு பிரதேச உறுப்பினரும் சுன்னாகம் லயன்ஸ் கழக தலைவருமான லயன் சி.ஹரிகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட லயன்ஸ் கழக பிராந்தியத் தலைவர் லயன் செ.மகாதேவா தம்பதிகள் சுன்னாகம் லயன்ஸ் கழகச் செயலாளர் சீ.கஜனால் கௌரவிக்கப்படுகின்றனர்.





## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..................................................

முகவரி :- ..................................................

பிறந்த ஆண்டு :- ..................................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# வியட்நாமை தாக்கியது ஹயான்

# 13 பேர் பலி 6 இலட்சம் மக்கள் வெளியேற்றம்

## சீனாவையும் தாக்கும் அபாயம்





பிலிப்பைன்ஸை சூறையாடிய ஹயான் புயல் வியட்நாமையும் தாக்கியுள்ளது.

பிலிப்பைன்ஸை புரட்டி போட்ட ஹயான் புயல் வியட்நாமில் நேற்று கரையை கடந்தது. பிலிப்பைன்ஸை தாக்கிய ஹயான் புயலில் 10 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். ஹயான் புயல வியட்நாம் நாட்டின் மத்திய கடற்பகுதியான ஹைவாங் கில் நேற்று அதிகாலை கரையை கடந்தது.


வலு இழந்த நிலையில் சீனாவை நோக்கி இது நகர்கிறது, முன் எச்சரிக்கையாக கடலோர பகுதியில் இருந்த 6 லட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாலும் சூறாவளியின் வேகம் 117கி.மீ ஆக குறைந்ததாலும் பிலிப்பைன்ஸ் அளவிற்கு வியட்நாமில் பாதிப்புகள் ஏற்படவில்லை. எனினும் 13 பேர் உயிரிழந்ததுடன் 81 பேர் காயமடைந்தனர். 5 இலட்சம் மக்கள் மீண்டும தங்களது குடியிருப்புகளுக்கு திரும்புவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குடியிருப்புகளை இழந்து பாதிப்புகளில் சிக்கிய மக்களுக்கு தேவையான உதவிகளை வியட்நாம் அரசு செய்து வருகின்றது. இதனிடையே வலு இழந்த நிலையில் சீனாவை நோக்கி ஹயான் சூறாவளி நகருவதால் சீனாவில் தெற்கு மற்றும் தென்மேற்கு பகுதியில் பலத்த மழை பெய்து வருகின்றது. முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு பாதுகாப்பான இடங்களில் மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மீனவர்களை கடலுக்கு செல்லவேண்டாம் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது

உலகச் செய்திகள்

## ஆய்வு நிறுவன கட்டுப்பாடின்றி

# பூமியில் எரிந்து விழுந்தது ஐரோப்பிய செயற்கைக்கோள்




ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனத்துக்குச் சொந்தமான செயற்கைக் கோள் ஒன்று எரிந்த நிலையில் பூமிக்கு வந்து விழுந்துள்ளது. 1000 கிலோகிராம் எடையுடைய இந்த செயற்கைக் கோளின் எரியாத சிதிலங்கள் கிழக்கு ஆசியா முதல் அந்தாட்டிக்கா வரையான பாதையில் எங்கோ ஓரிடத்தில் விழுந்துள்ளதாக நம்பப்படுகிறது.

விண்வெளியின் ஃபெராரி என்று அழைக்கப்பட்ட இந்த செயற்கைக்கோள் தான் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலான காலப்பகுதியில் பூமிக்குள் தானாக வந்துவிழுந்துள்ள முதலாவது ஐரோப்பிய செயற்கைக் கோள் என்று கூறப்படுகிறது.

எரிபொருள் தீர்ந்துபோன நிலையில் காணப்பட்ட இந்த செயற்கைக் கோள் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட காலத்தை விட இரண்டு மடங்கு காலம் விண்வெளியில் இருந்துள்ளது. புவி ஈர்ப்பு விசை மற்றும் கடல் மட்டங்களின் மாறுதல்களை அடையாளப்படுத்துவதற்கா இந்த செயற்கைக் கோள் 2009ஆ ஆண்டில் ஏவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த செயற்கைக் கோள் அதன் பணிகளை முடித்துக் கொண்ட பின்னர், ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் கட்டுப்பாடின்றி பூமியில் வந்து விழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மங்கள்யான் விண்கலத்தில் கோளாறு இயக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள்



மங்கள்யான் விண்கலத்தின் சுற்றுவட்டப்பாதையை 1,00,000 கிலோமீற்றராக அதிகரிக்கும் பணியில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. செவ்வாய் கிரத்தை ஆராய்ச்சி செய்வதற்காக கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை மங்கள்யான் விண்கலத்தை இந்தியா விண்ணில் செலுத்தியது. இதை நேரடியாக செவ்வாய் கிரகத்துக்கு அனுப்ப முடியாது. முதலில விண்கலத்தை பூமியின் நீள்வட்ட சுற்றுப்பாதைக்குக் கொண்டு செல்ல வேண்டும். பின்னர் அதன் வேகத்தையும் உயரத்தையும் படிப்படியாக அதிகரிக்க வேண்டும்.

உரிய அளவு வேகம் கிடைத்தவுடன் அதை செவ்வாய் கிரகத்தை நோக்கி அதிவேகத்தில் திசை திருப்ப வேண்டும்.


இதற்காக அதன் சுற்றுப் பாதை உயரத்தை சிறிது சிறிதாக அதிகப்படுத்த வேண்டும். முதல் மூன்று சுற்றுப்பாதை அதிகரிக்கும் பணி வெற்றிகர மாக நடந்தது. நவம்பர் 9ஆம் திகதி திகதி விண்கலத்தின் உயரம் 71,000 கிலோமீற்றர் அதிகரிக்கப்பட்டது.

இதையடுத்து நேற்று முன்தினம் இரவு மங்கள் யானின் சுற்றுப் பாதையை 1 இலட்சம் கிலோ மீற்றர் உயரத்துக்கு நகர்த்தும் பணி நடந்தது.

இதற்காக அதில் உள்ள சிறிய ராக்கெட்டுகள் இயக்கப்பட்டன. ஆனால், அந்த ரொக்கெட்டுகள் திட்டமிட்டப்படி சரியாக இயங்கவில்லை. இதன் காரணமாக மங்கள்யான் விண்கலம 1 இலட்சம் கிலோ மீட்டர் தொலைவை எட்ட முடியவில்லை.

ஆனாலும் ரொக்கெட்டுகளில இருந்த எரிபொருள் வீணாக்கப்படவில்லை. இதனால் அந்த ரொக்கெட்டுகளை மீண்டும் இயக்க முடியும். இந்த தகவலை இஸ்ரோ தலைவர் இராதாகிருஷ்ணன் உறுதி செய்துள்ளார். நேற்று முன்தினம்இரவு மங்கள் யானில் உள்ள கருவி செயல் படாவிட்டாலும் தொடர்ந்தும் அதை மீண்டும் இயக்கும் பணி நடைபெறவுள்ளது. அப்போது வெற்றி கிடைக்கும் என்று விஞ்ஞானிகள நம்பிக்கையுடன் உள்ளனர்.

## சுவிஸில் புதிய தேசிய கீதம்



சுவிட்சர்லாந்தின் புதிய தேசிய கீதத்தை தெரிவு செய்வதற்காக 30 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

சுவிஸ் பொது நல சங்கம் தெரிவு செய்துள்ள இந்த குழுவில் பிரபல இசையமைப்பாளர்கள், பத்திரிக்கையாளர்கள் மற்றும் அரசியல் வாதிகள் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் புதிய தேசிய கீதத்தை தெரிவு செய்ய உள்ளனர்.

அடுத்தாண்டு யூன் மாதம் வரை கீதங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் வெற்றி பெற்ற நபருக்கு 10,000 ப்ராங்குகள் பரிசாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


# ஒபாமாவுடன் பயணம் செய்யும் நவீன கூடாரத்தின் இரகசியம்

அமெரிக்க அதிபர் ஒபாமா வெளிநாடுகளுக்கு பயணம் செய்யும்போது, அவர் பயன்படுத்தும் குண்டு துளைக்காத காரோடு, இரகசியங்களை யாரும ஒட்டுக் கேட்க முடியாதபடி அதிநவீன கருவிகள் பொருத்திய ஒரு கூடாரமும் கூடவே செல்கிறது.

முக்கியமான விடயங்கள குறித்து விவாதிக்கும்போது இந்த கூடாரத்துக்குள் அமர்ந்துதான் விவாதிக்கிறார் ஒபாமா.எதிரி நாடுகளின் தலைவர்கள் மட்டுமல்லாது, என்ன சொன்னாலும் கேட்கும் நட்பு நாடுகளின் தலைவர்களையும் அமெரிக்கா ஒட்டுக் கேட்டது உலக அளவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஜேர்மனி, பிரான்ஸ் நாடுகள் பெரும் அதிருப்தியில் உள்ளன.

இந்த நிலையில் தங்கள் அதிபரின் போனையும் யாராவது ஒட்டுக் கேட்டுவிட்டால் என்னாவது என, உஷாராக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளது அமெரிக்காவின் உளவு அமைப்பான சிஐஏ. அதற்காக தயாரானதுதான் அதிநவீன கூடாரம். ரஷ்யா, சீனா போன்ற நாடுகளுக்கு பயணம் செய்தாலும், அதற்காக ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து போனாலும் சிஐஏ அதிகாரிகள் இந்த கூடாரத்தையும் கூடவே எடுத்து செல்கின்றனர்.

ஒபாமா தங்கும் நட்சத்திர ஹோட்டலின் அறையில் ஒட்டுக் கேட்கும் கருவிகள் எதுவும்



பொருத்தப் பட்டுள்ளதா என ஆய்வு செய்கிறார்கள் அதிகாரிகள். அப்படி ஏதாவது இருந்தால் அவற்றை அகற்றி விடுகிறார்கள். நட்பு நாடோ, எதிரி நாடோ யாரையும் நம்ப முடியாது என நினைக்கும் அதிகாரிகள், ஹோட்டலின் ஒரு அறையில் இந்த கூடாரத்தை அமைத்து விடுவார்கள்.

முக்கியமான விஷயங்கள் குறித்து ஒபாமா பேச விரும்பினால் இந்த கூடாரத்துக்குள் போய் விடுவார். உடன் வரும் அமைச்சர்களும் அதிகாரிகளும் அமரும் வகையில் உள்ளது இந்த கூடாரம்.

இதன் உள்ளே இருக்கும் நவீன கருவிகள் இங்கு பேசுவதையாரும் ஒட்டுக் கேட்க முடியாதபடிக்கு செய்து விடுகிறது. வீடியோ கமராவோ, ஒட்டுக் கேட்கும் கருவியோ இதன உள்ளே வேலை செய்யாது. ரேடியோ அலைகளை அனுப்பி ஒட்டுக் கேட்க நினைத்தாலும் முடியாது.

ஒபாமா பயன்படுத்தும் பிளாக்பெர்ரி போன் மிகவும் பாதுகாப்பானது. அவர் பேசுவதை எந்தக் கருவியாலும் ஒட்டுக் கேட்க முடியாத அளவுக்கு பாதுகாப்பு அம்சங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

## சோமாலியாவில் புயல் 100 பேரை காணவில்லை



சோமாலியாவில் கடந்த இரு தினங்களுக்கு முன்பு நிகழ்ந்த புயல் பாதிப்பு மற்றும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கியவர்கள் 100இற்கும் மேற்பட்டவர்கள் மாயமானார்கள். காணாமல் போனவர்களில் குறித்த தகவல்கள் இதுவரை தெரியவில்லை.

இந்நிலையில் அவர்கள் உயிரிழந்திருக்கலாம் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

மேலும் வீடுகள் மற்றும் கால் நடைகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டதாக அந்நாட்டு அதிபர் அப்திரஹ்மான் மொகமத் பரோல் பத்திரிகையாளர் களிடம் தெரிவித்தார்.

# தென்னாபிரிக்க கைத்தொழில் பிரதி அமைச்சர் இருதரப்பு ஒத்துழைப்பு பற்றி ஆராய்வு



தென்னாபிரிக்க வர்த்தக மற்றும் கைத்தொழில் பிரதி அமைச்சர் எலிசபெத் தபேதா உள்ளிட்ட பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் நேற்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சுக்கு வருகை தந்தனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பின் பேரில் வருகை தந்த இக்குழுவினர் மத்தியில் அமைச்சினதும் அமைச்சின் கீழான நிறுவனங்களினதும் செயற்பாடுகள் தொடர்பில் தனித்தனியாக விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

இதன் பிரகாரம், இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை, தேசிய அருங்கலைகள் பேரவை, தேசிய வடிவமைப்புச் சபை, பனை அபிவிருத்திச் சபை ஆகிய நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் அந்நிறுவனங்களின் பொது முகாமையாளர்களினால் விளக்கம் அளிக்கப்பட்டன.

அதேநேரம் இரு நாடுகளினதும் ஒத்துழைப்புடனான சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சிகளை முன்னெடுப்பது குறித்தும் இங்கு அவதானம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதி அமைச்சர் வீரகுமார திஸாநாயக்க, அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி, மேலதிக செயலாளர் திருமதி மங்கனிக்கா அதிகாரி, அமைச்சரின் ஆலோசகர் திருமதி விஜி ஜெகராஜசிங்கம், இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் நவாஸ் ரஜாப்தீன் உள்ளிட்ட அமைச்சினதும், நிறுவனங்களினதும் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

### சனல்-4...

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் அவரது உதவியாளர்கள் மத்தியில் ஜனாதிபதி காணப்பட்டார்.

சனல்-4 ஊடகவியலாளரான ஜொனதன் மில்லர் உங்களைச் சந்திக்க முடியுமா எனக்கேட்ட போது அவர் ஆம் என பதிலளித்ததுடன்

அதற்கென்ன, நாம் தேநீர் விருந்தில் சந்திப்போம் எனக் கூறினார்.

தன்னை பாதுகாத்து நின்ற பாதுகாப்பு ஊழியர்களை கடந்து அவர் வரமுயன்றபோது மில்லர் தனது குரலை உயர்த்தி தன்னை சனல்-4 ஊடகவியலாளர் என அடையாளப்படுத்தினார்.

பின்னர் ஜனாதிபதி, மில்லரை நோக்கிவந்து கைகளை குலுக்கினார்.

மில்லருடன் சேர்ந்து சிறிது தூரம் நடந்த ஜனாதிபதி நாம் மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெற்றார்.

சந்திப்புக்கு ஒத்துக்கொண்டதற்காக மில்லர் ஜனாதிபதிக்கு நன்றி கூறினார். ஜனாதிபதி தனது வாகனத்தில் ஏறியபோது, இந்திய பிரதமர் மன்மோகன் சிங் பகிஷ்கரிப்பை பற்றிய கேள்வியை மில்லர் உரத்த குரலில் கேட்டார். ஜனாதிபதி இதற்கு பதில் கூறவில்லை.

### யாழ். உணவகங்கள்...

படுத்தியமை, தனிநபர் சுகாதாரத்தைப் பேணாமை போன்ற பல குறைபாடுகள் இவ்வுணவகங்களில் காணப்பட்டமையினால் இவற்றின் உரிமையாளர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர்.

எதிர்வரும் காலங்களில் உணவகங்கள் மீது திடீர் சோதனைகள் சுகாதாரப் பிரிவினரால் நடாத்தப்படும் எனவும், சுகாதார சீரழிவுடன் காணப்படும் உணவகங்கள் மீது சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் சுகாதாரப் பகுதியினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சுகாதார சீரழிவுடன் காணப்பட்ட பல உணவகங்களின் உரிமையாளர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (137)

### சீன இராணுவ...

லீ செங்லின், பாதுகாப்பு அமைச்சின் வெளிவிவகாரப் பணியக அதிகாரி லெப்.கேணல் ஹுவாங் சியாவோமின், பிரதி பாதுகாப்பு ஆலோசகர் லெப். கேணல் மியாஓகாய் ஆகியோர் இந்தக் குழுவில் அடங்கியிருந்தனர்.

இவர்கள், இலங்கை இராணுவத் தளபதியுடனான சந்திப்பின் போது, பயிற்சித் திட்டங்களில் இருதரப்பு முக்கியத்துவம் பெற்ற விவகாரங்கள் குறித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

சீன இராணுவ அதிகாரிகளுடனான சந்திப்பில், இலங்கை இராணுவத் தளபதியுடன், மேஜர் ஜெனரல் லலித் தவுலகல, மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சீன இராணுவ அதிகாரிகள் குழு கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துக்குச் சென்றதுடன், இலங்கை கடற்படை, விமானப்படையின் பயிற்சிப் பணிப்பாளர்களுடனும் பேச்சுக்களை நடத்தியுள்ளது.

### கனேடிய....

முன்தினம் மாலை வடக்கு மாகாணத்திற்கான விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்.வந்திருந்தார்.

இந்நிலையில் நேற்று முற்பகல் 10.00 மணிக்கு யாழ். ரில்கோ விடுதியில் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை சந்தித்து சுமார் அரைமணிநேரம் வடமாகாணத்தின் நிலைமைகள் குறித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் நிறைவில் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுடன் செய்தியாளர்களிடம் கருத்துத்தெரிவித்த டிபய்க் ஓபராய் வடக்கிற்கு விஜயம் செய்து முதலமைச்சரை சந்தித்து கலந்துரையாடியது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவித்தார் அத்துடன் கனடாவைப் பொறுத்தவரை இலங்கை சம்பந்தமாக பல கேள்விகளுக்கு பதில்காண வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதாக தெரிவித்ததுடன் அதன் அடிப்படையிலேயே அவற்றிற்கான விடையைத் தெரிந்து கொள்வதற்காக இங்கு நேரில் விஜயம் செய்ததாகவும் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து வாகனம் மூலமாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ததாகவும் நேற்று முதலமைச்சரைச் சந்தித்து கலந்துரையாடியதில் பல விடயங்களை அறிந்து கொண்டதாகவும் தெரிவித்தார்.

கனடாவைப்பொறுத்தவரையில் சரியான நல்ல நிர்வாகத்திற்குரிய பிரமாணங்கள் எவை என்று அறிந்து அவற்றிற்கு ஏற்றவிதத்திலே நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. அதன் அடிப்படையிலே இலங்கையில் நடைபெறும் விடயங்களை அறிவதே தமது விஜயத்தின் நோக்கமாக இருந்தது எனவும் தெரிவித்த கனேடியப் பிரதிநிதி அது சம்மந்தமாக இலங்கையில் நடக்கும் விடயங்கள் குறித்து பிரேரணைகள் இதுவரை காலமும் எழுந்துள்ளதால் அவற்றிற்கும் விடைகாண வேண்டும் என்பதற்காக வந்ததாகவும் தெரிவித்த அவர், இது சம்பந்தமாகவே கருத்துக்களை வெளியிடுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் கனடா பிரதம மந்திரி இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய அரசுத்தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளாததன் காரணமாகவே தான் வந்ததாகவும் தெரிவித்த கனடா பிரதிநிதி இங்கு முதலமைச்சருக்கு இருக்கும் கடப்பாடுகள் அவர் செய்யவேண்டிய காரியங்கள் மிகவும் பாரதூரமானவை இருந்தாலும் அவர் நன்றாக அவற்றைச் செய்யவேண்டும். என்று பிரார்த்திப்பதாகவும் தெரிவித்தார். இதேவேளை நேற்றுக்காலை 9.00 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்த அவர், ஆயர் வணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தரநாயகத்தைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் யாழ். கோட்டைப்பகுதிக்கும் விஜயம் செய்து பார்வையிட்டார் மேலும் பிற்பகல் அவர் கிளிநொச்சிக்கு விஜயம் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# ராஜீவ் காந்தி கொலை வழக்கு இரு கைதிகள் விடுதலைகோரி மனு

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற இரண்டு பேர் தங்களை விடுதலை செய்யக் கோரி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு பதில் அளிக்கும்படி மத்திய, மாநில அரசுகளுக்கு சென்னை உயர் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளது. ஆயுள் தண்டனை பெற்ற ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் தாக்கல் செய்துள்ள மனுவில், தாங்கள் 21 ஆண்டாக சிறையில் இருப்பதாகவும், தங்களை சிறையிலிருந்து விடுவிக்கு மாறும் மனுவில் கூறியுள்ளனர்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ராஜேஸ்வரன், பி.என்.பிரகாஷ் ஆகியோர் கொண்ட அமர்வு, இந்த மனு தொடர்பாக மத்திய மற்றும் மாநில உள்துறை அமைச்சகங்கள் 4 வாரத்தில் பதிலளிக்குமாறு உத்தரவிட்டது. மேலும் வழக்கு விசாரணையை டிசம்பர் 10ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

# பதில்கூறாமல் தவிர்த்தார் முதலமைச்சர் விக்கி

(யாழ்ப்பாணம்)

யாழ். ரில்கோ விடுதியில் கனேடியப்பிரதிநிதியுடனான சந்திப்புக் குறித்து என்ன கதைத்தீர்கள் என்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் ஊடகவியலாளர்கள் கேட்டபோது என்னை மேலும் மேலும் கஷ்ரப்படுத்தாதீர்கள் என்று கூறி ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவிப்பதில் இருந்து முதலமைச்சர் நழுவிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முற்பகல் கனேடியப் பிரதமரின் பிரதிநிதியாக இலங்கையில் நடைபெற இருக்கும் பொதுநலவாய அரசுத்தலைவர்களின் மாநாட்டில், கலந்து கொள்வதற்காக கொழும்பு வந்திருந்த அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் ஓபராய் நேற்று முற்பகல் 10.00 மணிக்கு யாழ். ரில்கோ விடுதியில் வடமாகாண முதலமைச்சரைச் சந்தித்து வடக்கின் நிலைவரம் குறித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் முடிவில் கனேடியப் பிரதிநிதியுடன் கதைத்த விடயங்கள் குறித்து முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் ஊடகவியலாளர்கள் தகவல் கேட்டபோதே முதலமைச்சர் தன்னை மேலும் மேலும் கஷ்ரப்படுத்தவேண்டாம் என்றும் தான் வேறு ஒரு வேலையாகவே இங்கு வந்ததாகவும் கூறி அங்கிருந்து சென்று விட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# ஆவண காணொளிகள் இன்னும் வெளிவரும்

யுத்தக் குற்றங்கள் தொடர்பில் உண்மையான சாட்சியங்கள் கிடைக்குமாயின் அவை தொடர்பிலான ஆவணப்படங்களை எதிர்காலத்தில் இன்னும் இன்னும் தயாரிப்பேன் என்று சனல்-4 ஊடகவியலாளரும் "யுத்த சூன்ய வலயம்" படத்தின் இயக்குநருமான கெலம் மக்ரே தெரிவித்துள்ளார். "ஐக்கியத்துக்கான சக்தி" எனும் ஐக்கிய தேசியக்கட்சி சார்பான அமைப்பு ஜாதிக சேவா சங்கம் தனது தலைமையகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டதன் பின்னர் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலுவான சான்றுகள் கிடைக்குமாயின் அரசாங்கம் மற்றும் விடுதலைப்புலிகள் மேற்கொண்டதாகக் கூறப்படும் யுத்தக்குற்றச்சாட்டுகள் பற்றி ஆவணப்படங்களை இன்னும் தயாரிப்பேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். குற்றச்சாட்டுகளை மறுக்காமல் அரசாங்கம் யுத்தக்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஊடகவியலாளர் என்ற வகையில் தான் தனது கடமையை செய்துவருவதாகவும் அவர் கூறினார். உண்மையான சான்றுகளின் அடிப்படையிலேயே தான் ஆவணப்படங்களை தயாரித்ததாக மக்ரே கூறியுள்ளார்.

# வணிக அரங்கில் ஜேம்ஸ்பாக்கர் இன்று உரை

•கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் ஆரம்பமான பொதுநலவாய வணிக அரங்கத்தில் பங்கேற்பதற்காக அவுஸ்ரேலிய பெரும் வணிகரான ஜேம்ஸ் பக்கர் கொழும்பு வந்துள்ளார். அவர் இந்த அரங்கத்தில் இன்று உரையாற்றுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.இந்த அரங்கத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### உலகத்தலைவர்கள்...

செய்துள்ளார். கொழும்பு விஜயம் செய்த பிரதமரை விவசாயத்துறை அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன மற்றும் விமான நிலைய மற்றும் விமானசேவைகள் நிறுவனத் தலைவர் பிரசங்க விக்கிரமசூரிய ஆகியோர் அவரை வரவேற்றனர்.

உகண்டா அரசின் வெளிவிவகார அமைச்சர் சேம் குட் டேஷா நேற்று கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக கொழும்பு வந்தடைந்தார்.

பாகிஸ்தான் பிரதமர் முகமட் நவாஸ் ஷெரீப் பொதுநலவாய நாடுகளின் அமர்வில் பங்கேற்பதற்காக நாளை கொழும்பு வரவுள்ளார்.பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரகம் விடுத்துள்ள அறிக்கையிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அவர், இலங்கை, அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்து நாட்டு உயர்மட்ட பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளார். பனாமா ஜனாதிபதி ஜேக்கப் சூமா பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பதற்காக கொழும்பு வரவுள்ளார். கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ள அவர், பூகோள ரீதியான விடயங்கள் குறித்து கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

அவுஸ்ரேலிய வெளிவிகார அமைச்சர் ஜூலி பிசப் கொழும்பு வரவுள்ளார். இந்தநிலையில், தாம் இலங்கையில் பொருளாதாரம், சமூக மற்றும் இராஜதந்திர விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடவுளளதாக குறிப்பிட்டுள்ளார்.

# ஊரெழுவில் தொழிற்பயிற்சி மையம்; நேற்று முன்தினம் திறந்து வைப்பு



ஊரெழு மீள்எழுச்சித்திட்ட கிராம அபிவிருத்தி சங்கத்தினால் அமைக்கப்பட்ட கட்டடத்தினை ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச இணைப்பாளரும், வலி.கிழக்கு பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஐங்கரன் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவர், ஒரு கிராமம் முழுமையாக அபிவிருத்தி அடைய வேண்டுமாயிருந்தால் அந்தக் கிராமத்தில் வாழுகின்ற மக்கள் அனைவரும் சமூக வேறுபாடுகளைக் கைவிட்டு இது எங்களுடைய கிராமம். இது நாங்கள் வாழுகின்ற கிராமம் என்ற சிந்தனை ஒவ்வொரு கிராமங்களில் வாழுகின்ற மக்களுடைய மனங்களிலும் பதியப்பட வேண்டும்.

தங்களுடைய கிராமங்களின் அபிவிருத்திகள் மீது அக்கறையுடன் செயற்படுபவர்களை மக்கள் அனைவரும் ஆதரிப்பதற்கு முன்வரவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது முயற்சியின் பயனாக கிராம எழுச்சி திட்டத்தின் கீழ் ஊரெழு மயான வீதி, அச்சுவேலி பயிற்றோலை வீதி, கோப்பாய் இலகடி வீதி, நீர்வேலி வேவிபுரம் குறுக்கு வீதி, உரும்பிராய் வாகையடி ஆகிய வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

அத்துடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) ஆகியோரது 2013 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியிலிருந்து உங்களுடைய சனசமூக நிலையத்திற்கு நிதிகளை வழங்கியிருக்கின்றோம் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், மேற்படி தொழிற்பயிற்சி நிலையத்திற்கான உபகரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சனசமூக நிலையத் தலைவர் அன்ரன்குமார், முன்னாள் கிராம அலுவலர் வரதராஜன், கிராம உத்தியோகத்தர் ஜேந்திரன், சமுர்த்தி உத்தியோகத்தர் கேதீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இன்று இரங்கற் திருப்பலி

குருநகர் மக்களின் இதயமாக விளங்கும் புனித யாகப்பர் ஆலயம் 1993 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 13 ஆம் திகதி காலை 7.15 மணிக்கு விமானக் குண்டு வீச்சினால் சேதமடைந்தது. இச்சம்பவத்தில் ஒன்பது பேர் கொல்லப்பட்டதுடன், 29 பேர் படுகாயமடைந்தனர்.

இவ் ஆலயத்தின் நினைவு தினமான அன்று அனர்த்தத்தால் உயிர் நீத்தவர்களுக்கான இரங்கற் திருப்பலி காலை 6.00 மணிக்கு பங்குத்தந்தை ஆர்.நேசராசாவினால் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

தொடர்ந்து சம்பவம் நடந்த இடத்தில் அமைக்கப்பட்ட ஞாபகார்த்த நினைவாலயத்தில் தீபம் ஏற்றி வழிபாட்டுடன் பொதுமக்களின் அஞ்சலியும் இடம்பெறவுள்ளது. (27)

# புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்கு புதிய கட்டடம் நிர்மாணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் புதிய கட்டடத்திற்கான நிர்மாணப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

என்றிப் திட்டத்தின் கீழ் 19 மில்லியன் ரூபா செலவில் 2011 ஆம் ஆண்டு கட்டட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் ஒப்பந்தகாரர்களால் பணிகள் ஸ்தம்பிதம் ஏற்பட்டது.

இந்நிலையில், மீள ஒப்பந்தகாரர்களினால் இக்கட்டட நிர்மாணப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. (கே)

# குழு மோதலில் மாணவர்கள்; இதுவரை 12 பேர் கைது

(கொழும்பு)

இரண்டு பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் 9 பேர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 12 மாணவர்களைத் தாம் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அநுராதபுரத்திலுள்ள பிரதான பாடசாலைகள் இரண்டின் மாணவர்களுக்கிடையே இந்த கைகலப்பு ஏற்பட்டுள்ளது. 11-12 வகுப்பு மாணவர்களுக்கிடையிலான தனிப்பட்ட கோபங்களே இந்த கைகலப்பிற்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# தூக்கி வீசப்பட்டார் முதியவர்

வேகமாகச் சென்ற வாகனத்தின் காற்றினால் தூக்கி வீசப்பட்டு முதியவர் ஒருவர் காயமடைந்த சம்பவம் கைதடியில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை 9.00 மணியளவில் ஏ-9 வீதியால் கைதடி நோக்கி சைக்கிளில் சென்றுள்ள 68 வயதுடைய முதியவர் கைதடிப் பாலத்திற்கு அருகில் சென்ற வேளையில் யாழ்ப்பாணம் நோக்கி வேகமாகச் சென்ற டிப்பர் வாகனத்தினால் ஏற்பட்ட காற்றின் சுழற்சியால் சைக்கிளுடன் தூக்கி வீசப்பட்டார்.

கைதடிப் பாலத்தின் தாழ்வான பகுதிவரை இவர் தூக்கி வீசப்பட்டதால் காயமடைந்த நிலையில் வீதியால் சென்றவர்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

தனங்களப்பைச் சேர்ந்த நாகரத்தினம் என்ற முதியரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

நாவற்குழி, கைதடி வெளியான பிரதேசங்களிலேயே இவ்வாறான விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# ஆனைக்கோட்டையில் டெங்கு ஒழிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டையில் உள்ள அடைக்கலநாயகி வீதிக்கு அருகாமையிலுள்ள வீடுகளில் நேற்று முன்தினம் டெங்கு ஒழிப்புக்காக சுகாதாரப் பரிசோதகரினால் புகை அடித்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஏற்கனவே இப்பகுதியில் டெங்குத் தொற்று ஏற்பட்டிருப்பதாக அவதானிக்கப்பட்ட குறிகாட்டிகளுக்கு அமைவாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட (கி)

# பொலிஸாரின் இடமாற்றம்; அரசியல் கட்சிகள் விசனம்

பொலிஸ் திட்டமிட்ட குற்றத் தடுப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள் 23 பேர் இடமாற்றம் செய்யப்பட்டமையின் பின்னணி தெளிவுபடுத்தப்பட வேண்டும் என அரசாங்கத்தில் உள்ள கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

அரசாங்கத்தின் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய மற்றும் தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் இவ்வாறு வலியுறுத்தியுள்ளன. இருவேறு ஊடக அறிக்கைகள் மூலம் பொலிஸார் மற்றும் ஜனாதிபதியை இவ்விரு கட்சிகளும் வலியுறுத்தியுள்ளன.

கசினோ நிலையம் ஒன்றை சுற்றிவளைப்பு செய்து 48 மணி நேரங்களில் இந்த 23 பொலிஸாருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதென ஜாதிக ஹெல உறுமய மற்றும் தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் தெரிவித்துள்ளன.

கசினோ நிலையத்தை சுற்றிவளைப்பு செய்ததன் காரணமாகவே பொலிஸார் இடமாற்றம் செய்யப்பட்டதாக மக்கள் விடுதலை முன்னணி நேற்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் பொலிஸார் இடமாற்றம் செய்யப்பட்டமைக்கு கசினோ சுற்றிவளைப்பு காரணம் அல்ல என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

# ஆஸி.யில் தஞ்சக்கோரிக்கை நிராகரிப்பு; மட்டு இளைஞன் நாடு திரும்புவார்?

கொழும்பில் இடம்பெற்ற ஜெனிவாவிற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ள மறுத்ததாகக் கூறப்படும் இளைஞன் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட நிலையில் கொழும்புக்கு திருப்பி அனுப்பப்படலாம் என்ற அச்சத்தை எதிர்கொண்டுள்ளார்.

2012 ஆம் ஆண்டு அரச ஒட்டுக்குழுக்களினால் இலங்கை அரசுக்கு ஆதரவாகவும் ஜெனிவா தீர்மானத்திற்கு எதிராகவும் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்த போது அதில் கலந்து கொள்ள மறுத்தார்.

இதன் காரணமாக அரச புலனாய்வாளர்களினால் தேடப்பட்டு வந்த போது அவுஸ்ரேலியாவிற்கு அடைக்கலம் தேடிச் சென்ற இளைஞரான சகாய மாதா வீதி மாமாங்கம் மட்டக்களப்பைச் சேர்ந்த 27 வயதான வைரமுத்து சந்திரகாசன் என்ற இளைஞனே கொழும்புக்கு திருப்பி அனுப்பப்படலாம் என்ற அச்சமான சூழலை எதிர்கொண்டுள்ளார்.

குறித்த இளைஞன் அவுஸ்ரேலியாவிற்கு தப்பிச் சென்ற பின்பும் அவரது வீட்டுக்கு அடிக்கடி சென்ற அரச புலனாய்வாளர்கள் அவரது குடும்பத்தாரிடம் குறித்த இளைஞனைப் பற்றிய விபரங்களை பெற்றுச் சென்றதுடன் அவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும் இளைஞனின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், குறித்த சம்பவம் தொடர்பாக இளைஞனின் குடும்பத்தினர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

# அதிவேக நெடுஞ்சாலை வடக்கு நோக்கி

வடக்கு அதிவேக பாதையின் நிர்மாணப் பணிகள் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படும் என பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் கப்பல் துறை அமைச்சின் செயலாளர் ரஞ்சித் பிரேமசிறி தெரிவித்தார்.

நான்கு கட்டங்களாக நிர்மாணிக்கப்படும் இந்த வீதியின் முதல் கட்டப் பணிகள் ஹெண்டரமுல்லையில் இருந்து மீரிகம வரை நிர்மாணிக்கப்படும்.

இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் குருணாகலில் இருந்து நிர்மாணிக்கப்பட உள்ளதுடன், மூன்றாம் கட்டப் பணிகள் மீரிகமவில் இருந்து கண்டி வரை நிர்மாணிக்கப்படும். 4 ஆம் கட்ட நிர்மாணப் பணிகள் குருணாகலில் இருந்து தம்புள்ளை வரை நிர்மாணிக்கப்படும். இந்தப் பணிகள் அனைத்தும் ஒரே நேரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதேவேளை, தென் பகுதிக்கான அதிவேக வீதியின் காலி முதல் மாத்தறை வரையான பகுதி 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திறந்து வைக்கப்படும் எனவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

# பொதுநலவாய வர்த்தக மாநாடு கொழும்பில் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டுக்கு முன்னோடியாக இடம்பெறும் பொதுநலவாய வர்த்தக மாநாடு கொழும்பில் நேற்று பாரம்பரியமான மங்கள விளக்கேற்றல் நிகழ்வுடன் ஆரம்பமானது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, பொதுநலவாய வர்த்தக மாநாட்டின் தலைவர் கலாநிதி மோகன் கௌல் மற்றும் பெரும் திரளான உள்நாட்டு, வெளிநாட்டு பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் ஜனாதிபதி உரையாற்றுகையில், சமாதானம் நிரம்பிய இந்த நாடு உங்கள் வருகையால் மகிழ்ச்சியடைகின்றது. இந்த பொதுநலவாய அமைப்பானது உலகின் சில சிறிய மற்றும் பெரிய நாடுகளைக் கொண்ட உலகின் செல்வந்த மற்றும் வறிய பிரஜைகளை உள்ளடக்கியது.

சராசரி தலா வருமானம் 250 அமெரிக்க டொலர்கள் தொடக்கம் 50 ஆயிரம் டொலர்கள் வரை காணப்படுகின்றது. எனவே தான் எமது மாநாட்டின் தொனிப்பொருளானது சிறந்த உருவாக்கம் மற்றும் சமூக அபிவிருத்தியை பகிர்ந்து கொள்ளல் என்ற தலைப்பில் அமைந்துள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளுக்கு இடையில் பாரியளவில் பொருளாதார இடைவெளி காணப்படுகின்றது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 நவம்பர் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.